

University of Jaffna
372.05
CUT
168106(AR; Main)



# [illegible] மலர் - 2008

# சுதுமலை

வெளியீடு:

## நாவலர் பாலர் பாடசாலை

ARCHIVES

திரு. [illegible] (B.A Dip in Edu)



372.05
CUT
AR

# ஆண்டுவிழா மலர் - 2008

# சுதுவை

ARCHIVES

UNIVERSITY OF JAFFNA
LIBRARY

வெளியீடு:

**நாவலர் பாலர் பாடசாலை**

ஈஞ்சடி - சுதுமலை

பதிவு இலக்கம் :- NEP/DS/J/VI./03

168106

தொகுப்பு:

**திரு. கந்தையா ஸ்ரீநந்தகோபன் (B.A Dip in Edu)**

(ஆசிரியர், யா/சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி)

20-07-2008

University of Jaffna
168106
Library

168106

## பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| **கல்வியியல் கட்டுரைகள்** | |
| உளவியல் மெய்யியல் – இடை வினைகள் | 1 |
| கல்விசார் செயற்பாடுகளில் தரவட்டம். | 5 |
| **சுதுமலையில் புராண படனம்** | |
| சுதுமலையில் புராண படனம் | 17 |
| (01) சிவஸ்ரீ பொன்னுச்சாமி குருக்கள் | 18 |
| (02) அமரர் பெரியதம்பி உபாத்தியாயர் | 19 |
| (03) அமரர் தினகர் கணபதிப்பிள்ளை | 19 |
| (04) பண்டிதர் சி. துரை | 19 |
| (05) செல்லையா கந்தையா | 20 |
| (06) உயர் திரு. கந்தையா கணபதிப்பிள்ளை | 21 |
| (07) அமரர் தி.க பேரம்பலம் உபாத்தியாயர் | 22 |
| (08) தினகர் கணபதிப்பிள்ளை நடேசர் | 22 |
| (09) சேதுகாவலர் பொன்னம்பலம் | 23 |
| **முன்பள்ளி கட்டுரைகள்** | |
| முன்பள்ளிக் கல்வியும் எதிர்காலவியலும் | 25 |
| பாலர் கல்வியை வினைத்திறனாக்கும் கற்றல்-கற்பித்தல் செயலாற்றுகை | 33 |
| முன்பள்ளிக் கல்வியில் பெற்றோர்களினதும் ஆசிரியர்களினதும் வகிபங்கு | 37 |
| **கல்வி, சமய, சமூக சேவையாளர்கள்** | |
| மானிப்பாய் இந்துவின் அதிபர் | 41 |
| அமரர் சின்னத்தம்பி – மார்க்கண்டு | 43 |
| வரலாற்று நாயகி... | 44 |
| மனிதருள் ஒரு மாணிக்கம் | 47 |
| திரு. வை. சுந்தரலிங்கம் | 50 |
| அமரர் LION.Dr. த. அருமைத்துரை (RMO) | 50 |
| அமரர் Dr. தம்பு இராசையா(RMO) | 51 |
| பணிவினால் பண்புகாட்டிய அறிஞர் கரோல் விஷ்வநாதபிள்ளை | 52 |
| **ஆண்டுவிழாவில் கௌரவிக்கப்படும் பெரியோர்கள்** | |
| திரு. ச. துரைராஜா | 55 |
| கந்தையா– ஈஸ்வரநாதபிள்ளை | 58 |
| திரு. வேலுப்பிள்ளை தம்பாபிள்ளை | 60 |
| தியாகராசா அருட்பிரகாசபிள்ளை | 64 |

# சமர்ப்பணம்

சுதுமலைப் பதியிலே அருளாட்சி செய்யும்

ஐஞ்சடி ஞான வைரவப் பெருமானின்

பாதங்களில் இவ் ஆண்டுவிழா மலரினைச்

சமர்ப்பிக்கின்றோம்

# செஞ்சொற் செல்வரின் ஆசிச் செய்தி

சுதுமலை ஈஞ்சடி நாவலர் பாலர் பாடசாலையின் ஐந்தாம் ஆண்டிலே கால்பதிக்கும் விழாக் குறித்து ஆசிகூறுவதில் ஆனந்தமடைகின்றேன். சைவத்தமிழ் பாரம்பரியத்தைப் பேணும் சுதுமலைத் திருப்பதியில் இயற்கை அழகு மிக்க ஈஞ்சடியில் இப்பாடசாலை எழிற்சி பெற்று விளங்குகின்றது. நல்லை நகர் நாவலர் பெருமானுக்கு உன்னத கௌரவம் கொடுக்கும் வகையில் அப்பெருந்தகையின் உருவச்சிலையை நிறுவி நவீன வசதிகளுடன் இப்பாடசாலையை நிர்வகித்து வருவது பாராட்டுக்குரிய விடயமாகும்.

சுதுமலை ஈஞ்சடி நாவலர் பாலர் பாடசாலையின் நான்காம் ஆண்டு பூர்த்தி விழாக் குறித்து ஆசிகூறுவதில் ஆனந்தமடைகின்றேன். சைவத்தமிழ் பாரம்பரியத்தைப் பேணும் சுதுமலைத் திருப்பதியில் இயற்கை அழகு மிக்க ஈஞ்சடியில் இப்பாடசாலை எழிற்சி பெற்று விளங்குகின்றது. நல்லை நகர் நாவலர் பெருமானுக்கு உன்னத கௌரவம் கொடுக்கும் வகையில் அப்பெருந்தகையின் உருவச்சிலையை நிறுவி நவீன வசதிகளுடன் இப்பாடசாலையை நிர்வகித்து வருவது பாராட்டுக்குரிய விடயமாகும். இப்பாடசாலை நிர்வாகிகளின் சிறந்த பணியும் அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்களின் ஆர்வமும் சிறந்த முன்பள்ளியாக இப்பாடசாலையை பலராலும் மதிக்கப்படுவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. அன்னார் திரு. இ. பேரின்பநாயகம், திரு. கந்தையா, ஸ்ரீநந்தகோபன் அவர்களின் தூர நோக்கும், பல்துறை சார் அறிஞர்களை அழைத்து அவர்களின் கருத்துக்களை இப்பாடசாலை சார் சமூகம் அறிய உதவி வருவது சிறப்புக்குரிய விடயமாகும். காலத்தின் தேவை கருதி கல்விச்சாலைகளை நெறிப்படுத்த வேண்டியது கற்ற சமூகத்தின் கடமையாகும். சுதுமலை நாவலர் பாடசாலை காலத்துக்குப் பொருத்தமான வகையில் விளையாட்டு முற்றத்தோடு கூடிய நவீன முன்பள்ளியாக வளர்த்தெடுக்கப்பட்டு வந்தமை பாராட்டுக்குரிய கைங்கரியமாகும். போரின் சூழ்நிலையிலும் எதிர்காலச் சந்ததிபற்றிய சிந்தனையோடு செயற்படும் நற்பண்பாளர்கள் என்றும் நன்றிக்குரியவர்கள், நாவலர் பாடசாலைகள் ஞாயிறு தினமும் உதிப்பது போல் நித்தமும் நிலை பெற்று ஒளிதரும் என்பதில் ஐயமில்லை. இப் பாடசாலையின் மகோன்னத வளர்ச்சி என்றும் மேன்மையுற எனது நல்லாசிகளை தெரிவித்து அமைகின்றேன்.

"யாவர்க்குமாம் இன்னுரைதானே"

ஆறு. திருமுருகன்


# ஆசிச் செய்தி

"கற்கக் கசடற கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக"

என்பது திருமறை வாக்கு அதற்கமையக் கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு கற்பவை கரையிலா, கற்பவர்நாள்சில என்ற வாசகங்கள் அறிஞர்கள் எவ்வளவு தூரம் கல்வியின் சிறப்பை முதனிலைப் படுத்தியுள்ளார்கள் என்பதை எல்லோர் மனதிலும் பசுமரத்தாணி போல் பதிய வைத்துள்ளது. பெரிய மேதைகளை, அறிஞர்களை, விஞ்ஞானிகளை உருவாக்குவதில் கல்விக் கூடங்களின் சேவைகள் இன்றியமையாதவை. அந்த வகையில் சுதுமலை ஈஞ்சடி மக்களின் அயராத முயற்சியால் உருப்பெற்ற "நாவலர் பாலர்பாடசாலை" என்னும் முன்பள்ளி இன்று தனது ஐந்தாவது அகவையில் காலடி எடுத்து வைப்பது பெருமைக்குரியது, பாராட்டத்தக்கது. கல்விச் சமுதாயம் எந்தக் காலமும் இதனை வியந்து போற்றும் ஆயிரம்பேருக்கு அன்னதானம் வழங்குவதைவிட ஒரு ஏழைக்கு பாடம் சொல்லிக் கொடுப்பது சிறந்த தானம் என்பார்கள். அதன்படி ஈஞ்சடி நாவலர் பாலர் பாடசாலை என்னும் முன்பள்ளி காலத்தால் அழியாத கல்விச் செல்வத்தை மாணவர்களுக்கு வழங்கிக் கொண்டிருப்பதையிட்டு நான்பெருமிதம் கொள்வதுடன் அவர்களது கல்விச் சேவை மென்மேலும் வளர எனது மனம் நிறைந்த ஆசிகளை வழங்குவதுடன் எதிர்காலத்தில் நாவலர் பாலர் பாடசாலை சிறந்த கல்வி ஸ்தாபனமாக விளங்க இறை ஆசி கிடைக்க வேண்டும் என்று பிரார்த்திக்கின்றேன்.

"வாழ்க நாவலர் பாலர் பாடசாலை, வளர்க
அவர்தம் கல்விச் சேவை"

திருமதி . ரூபினி வரதலிங்கம்
பிரதேச செயலர்
வலிதென் மேற்கு
சண்டிலிப்பாய்



# பாராட்டுச் செய்தி

சீர்நிறைந்த சுதுமலைத் திருவூரில் சிறப்புற்று விளங்கும் நாவலர் சிறுவர் முன்பள்ளியின் சிறப்பு மலர் வெளியிடுவதையிட்டு மிகுந்த மகிழ்ச்சியடைகின்றேன். வலிகாமம் கல்வி வலயத்துள் அமைந்துள்ள 372 முன்பள்ளிகளில் சகல வசதிகளையும் கொண்ட முன்பள்ளியாக நாவலர் முன்பள்ளி திகழ்கின்றது. குறிப்பாக சண்டிலிப்பாய் கோட்டத்தில் அமைந்துள்ள 57 முன்பள்ளிகளில் முதல் தரமான பாடசாலையாகவும் சிறார்களின் உடல் உள மனவளர்ச்சிக்கு ஏற்ப எவ்வாறு ஒரு முன்பள்ளி அமைய வேண்டுமெனக் கட்டமைப்பு இருக்க வேண்டுமோ அத்தனை வளங்களும் அமைக்கப்பெற்றுள்ள பாடசாலையாகத் திகழ்கின்றது. அத்துடன் சிறார்களின் ஆன்மீக வளர்ச்சிக்காக அருகில் ஈஞ்சடி வைரவர் ஆலயம் நல்ல சூழலில் அமைந்துள்ளது மிகவும் சிறப்பு அம்சமாகும். இப்பாடசாலையின் நிர்வாகத்தினர் கல்வி அறிவில் உயர்ந்தவர்களாகவும், பண்பாளராகவும் கல்வியின் தேவையை உணர்ந்தவர்களாகவும் இருப்பதால் எதிர்காலத்தில் இப் பாடசாலை மேலும் வளர்ந்து வலிகாமம் கல்வி வலயத்தில் முதல் தரமாதிரிப் பாடசாலையாக வளரும் என்பதில் ஐயமில்லை. புதிய கல்விச்சீர்திருத்தத்தின் மாற்றத்திற்கேற்ப சிறார்களின் அறிவு மனப்பாங்கு விருத்தியில் மீத்திறன் உடைய சிறார்களாக வளர்த்துக்கொண்டிருக்கும் இப்பாடசாலை ஆசிரியர்களுக்கு கல்வித்திணைக்களம் சார்பாக எனது வாழ்த்துக்கள்.

**சி. குகனேசன்**

உதவிக் கல்விப் பணிப்பாளர்.
(ஆரம்பபிள்ளை கல்வி அபிவிருத்தி)
வலிகாமம் கல்வி வலயம்.

# தலைவரின் செய்தி

குழந்தைக் கல்வி என்பது ஒரு மகிழ்ச்சி தரும் பூங்காவாகவும் உற்சாகம் தரும் நந்தவனமாகவும் இருத்தல் வேண்டும். இக்கருத்து பிரெட்டிக்புரோபல் என்பவருடைய இலட்சியமாகும். இவருடைய கருத்து என்மனதைத் தொட்டது. இதற்கமைவாக எமது சிறுவர் முன்பள்ளி அமைய வேண்டும் என்பது எனது விருப்பம்.

அவ் விருப்பிற்கமைய ஏற்ற ஒரு புதிய நிர்வாக சபையை அமைத்து சிறந்த அனுபவம் உள்ள ஆசிரியர்களை அமைத்து செயற்படுத்தி வருகின்றேன். இப்பாடசாலையில் ஐம்பதடி நீளமான கட்டிடம் அதற்குள் கற்பித்தலுக்கு ஏற்றவகையில் மேடை அமைப்பு, உபகரணம் வைப்பதற்கான அலுமாரிகள் எனச் சிறந்த முறையில் ஒழுங்கமைக்கபட்டுள்ளது. இவ்வாறான இந்த அமைப்புடன், 2005 ம் ஆண்டு விளையாட்டு முற்றம் அமைக்கப்பட்டு பேராசிரியர் சபா ஜெயராசா அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

இவ்வாண்டு புதிய அரங்கு ஒன்று அமைத்துள்ளோம். எமது சிறுவர்கள் சிறந்த முறையில் கலை நிகழ்ச்சிகளைச் செய்ய வேண்டும் என்பதற்காக இது ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.

நான்கு ஆண்டுகள் நிறைவேறி ஐந்தாம் ஆண்டில் காலடி வைத்துள்ள இவ்வேளை எம்மூர் வாழ்ந்த கற்ற பெரியார்கள், புராண படன விற்பன்னர்கள் மற்றும் முன்பள்ளிக் கல்வி தொடர்பான கட்டுரைகள், உளவியல் தொடர்பான கட்டுரைகள் என்பவற்றை ஒருங்கு கூட்டி ஒரு நூலாக வெளியிட எமது சபை தீர்மானித்தது. அதற்கமைய இந்நூல் வெளிவருகிறது. இந்நூலை ஆக்க முன்வந்த எமது செயலாளர் க.ஸ்ரீநந்தகோபன் அவர்களுக்கும் எனது பாராட்டுக்கள். மேலும் எம் பிரதேசத்தில் நீண்ட காலம் எமது மாணவர்களுக்காகத் தம்மை அர்ப்பணித்துக் கொண்டிருக்கும் திரு. தி. அருட்பிரகாசபிள்ளை, திரு. ச. துரைராசா, திரு.க. ஈஸ்வரநாதபிள்ளை, திரு.வே.தம்பாபிள்ளை அவர்களையும் நான்காம் ஆண்டு நிறைவிலே கௌரவித்து வாழ்த்த வேண்டும் என்ற நிர்வாக சபையின் நோக்கையும் நிறைவு செய்வதில் பெருமகிழ்வடைகிறோம்.

எம்பணி தொடர இறை அருள் வேண்டி அமைகிறோம்.

திரு. இ. பேரின்பநாயகம்

தலைவர்

நாவலர் பாலர் பாடசாலை.




**திரு. இ. பேரின்பநாயகம்**

தலைவர், நாவலர் பாலர் பாடசாலை – ஈஞ்சடி, சுதுமலை



திரு. க. ஸ்ரீநந்தகோபன்
செயலாளர்




திரு. க. இராசரத்தினம்
உப செயலாளர்



திரு. சி. சந்திரராசா
உப தலைவர்




திரு. ச. தம்பித்துரை
பொருளாளர்



திரு.த. இலங்கநாதன்
நி.உ.



திரு. சி. பாலேந்திரா
நி.உ.



திரு. ந. பவாநாதன்
நி.உ.



திரு. இ. ஈஸ்வரன்
நி.உ.



திரு. க. பாலசுப்பிரமணியம்
நி.உ.



திரு. ந. குணரட்ணம்
நி.உ.



# அம்மாவின் பிரிவு நிரப்பமுடியாத இடைவெளி

"அம்மா அம்மா எம் தாயே! ஆறுதல் தந்தெமைக் காப்பாயே"

என்ற பாடலை அடியவர்களும், அம்மா வளர்த்த பிள்ளைகளும் கண்ணீர் மல்கப் பாடிய வண்ணமாக வலம்வர தெல்லிப்பழை கட்டுப்பிட்டி மயானத்தில் அக்கினிச்சுவாலையோடு அம்மாவை விட்டுவந்த காட்சி அகத்தை வருத்துகிறது. ஆலய வீதி வெறிச்சோடிக் காணப்படுகிறது. திருமுறை மடத்துக்கு முன்னால் அம்மா தினமும் அமரும் கதிரை அம்மாவின் வருகைக்காக காத்திருக்கின்றது. யாழ் போதனா வைத்தியசாலை சத்திரசிகிச்சைக் கூடத்தில் என்னுடன் கதைத்த இறுதி வார்த்தைகள் இதயத்தை வருத்துகிறது. என் செய்வோம்! மேடையில் பேசும் தத்துவங்கள் அனுபூதியாகின்ற போது எம்மை நாம் உணரமுடிகின்றது.

எனது சிறுபராயம் முதல் என் தாய், தந்தை கை பிடித்து வணங்கச் செய்த நடமாடும் தெய்வம் அம்மா. இறுதி மூச்சுள்ளவரை தன் பிள்ளையாக வளர்த்தெடுத்த தெய்வம். கடந்த பதின்நான்கு ஆண்டுகளாக எனது மதிய உணவைத் தானே பரிமாறி சிறுபாலகனாகப் பராமரித்தார். இன்றைய எனது வளர்ச்சிக்கு வாழும் வழிகாட்டிய எனது உத்தமகுரு. உலகம் போற்றும் அன்னை சிவத்தமிழ்ச்செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியின் பிரிவு உலகை வருத்துகிறது. வரும் ஒவ்வொரு நாள் விளம்பரமும் கண்டு அழுகிறோம். நிரப்பமுடியாத இடைவெளி.

அம்மாவின் அறிவுக்கு, ஆளுமைக்கு, அஞ்சாமைக்கு, அழகுக்கு நிகர் யார்? கல்லில் சிலை வடித்து, ஓவியத்தில் வரைந்து இனி நாம் காணும் அம்மா பேசப்போவதில்லை. தம்பி சாப்பிட்டு இருங்கோ என்று சொல்லப்போவதில்லை. மேடையில் இன்று என்ன நடந்தது என்று கேட்டு என் வர்ணனையை. ரசித்துக்கேட்க தன் மேடை அனுபவத்தைப் பகிர தினமும் அம்மாவும் நானும் நடத்திய சம்பாஷணை ஓய்ந்து விட்டது.

எங்கள் இனிய தெய்வம் காட்டிய வழியில் அவரது பணிகளை ஒன்றுபட்டு செய்வோம் என்ற உறுதியோடு, அம்மாவை நேசித்த அனைத்து உள்ளங்களுக்கும் எனது இனிய நன்றிகளைக் கூறி, அம்மாவை நேசித்த அனைவரும் அவரது நிழலில் வாழ்ந்த எம்மை என்றும் காத்திட வேண்டி அமைகிறேன்.

**செஞ்சொற் செல்வர் ஆறு. திருமுருகன்**

# ஆண்டுவிழா மலர்-1 வெளியீட்டின்போது -2005



ஆண்டுவிழா மலரினை
பேராசிரியர்
திரு. ச. க. சண்முகநாதன்
அவர்கள்
வெளியிட்டுஉரையாற்றும்போது



ஆண்டுவிழா மலரின் மதிப்பீட்டுரையை எழுத்தாளர்
திரு. ஐ. சாந்தன் அவர்கள் நிகழ்த்தும்போது

ஆண்டுவிழா
மலர் ஆசிரியர்
திரு. க. ஸ்ரீநந்தகோபன்
அவர்கள்
ஏற்புரை நிகழ்த்தும்போது





ஆண்டுவிழா மலரினை
பிரமுகர்
திரு.க.பாலசுப்பிரமணியம்
அவர்கள் பெறும்போது

# ஆசிரியரின் செய்தி.....

"அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதினாயிரம் நாட்டல்
அன்னையாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்"

என்ற பாரதியின் வாக்கை இப்பாடசாலையின் தலைவர் அடிக்கடி எனக்குக் கூறுவார். இந்தப் பாடசாலையை அமைத்ததும் இலவசமாகக் கற்பிக்க வேண்டும் என்ற ஆர்வமும் தலைவர் இ.பேரின்பநாயகம் அவர்களிடம் இருந்தது, அதனை அவர் நடைமுறைப்படுத்தியும் வருகிறார்.

"தரமான கல்விமூலம் தரமான சமூகம்" என்ற பரந்த நோக்குடன் இங்கு கல்வி பெறும் குழந்தைகள் ஆரம்பப்பிரிவு, மேற்பிரிவுகளுக்குக் கற்கச் செல்லுகின்ற போது சிறந்த ஆர்வம், துடிப்பு, அழகுணர்ச்சி, எப்போதும் மகிழ்ச்சியான பாங்கு என்ற வகையிலே கல்வி வளர்ச்சி அமையவேண்டும் என்ற தூரநோக்கோடு எமது பாடசாலைக் கல்விப்புலம் அமைக்கப்பட்டு வருகிறது.

கடந்த நான்கு ஆண்டுகளுக்கு முன் "50" அடி நீளமான கட்டிடம், கற்பித்தல் உபகரணங்கள், சலகூட வசதி, தண்ணீர் வசதி, விளையாட்டு முற்றம் என்பன அமைக்கப்பட்டன. இவ்வருடம் எமது மாணவர்கள் கலைநிகழ்வுகள் செய்யக்கூடிய வகையில் "அரங்கு" ஒன்று அமைக்கப்பட்டு இந்த அரங்கு மானிப்பாய் இந்துக் கல்லூரியின் புகழ் பூத்த அதிபர் அமரர் முத்துத்தம்பி பேராயிரவர் ஞாபகார்த்மாகக் கட்டப்பட்டுள்ளது. அவ் அரங்கு "பேராயிரவர் அரங்கு" எனப்பெயர் சூட்டப்பட்டு இன்றைய தினம் அதிபர் அவர்களுடைய மகள் செல்வி ரோகினி பேராயிரவர் அவர்களினால் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இவ்விடத்திலே திருமதி பேராயிரவர் மற்றும் அவர் தம் பிள்ளைகள் அனைவரையும் மனதிற் கொண்டு நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

மேலும் இன்றைய தினம் கௌரவிக்கப்படுகின்ற பெரியோர்கள், எமது கிராம மாணவ மாணவியர்களின் கல்வி வளர்ச்சியில் பெரும் தூண்களாக நின்று வளர்த்து வருபவர்கள். எம்மத்தியிலேயே வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் எம் பிள்ளைகள் மென்மேலும் வளரவேண்டும் என்பதில் முழுமனதுடன் நால்வரும் செயற்படுபவர்கள். அவர்கள் வாழ்வு வளம் பெற வாழ்த்தி அவர்களுக்கும் நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

இந்நூலானது ஆண்டு தோறும் "சுதுவை" என்ற பெயரிலே எம் பிரதேசத் தகவல்களுடன் கல்வி சார்கட்டுரைகளுடன் வெளிவரவேண்டும் என்ற நிர்வாகசபையினரின் உயரிய நோக்கில் உருவானது. இந்நூலில் பேராசிரியர் சபாஜெயராசா, கலாநிதி ஜெ.இராசநாயகம், உபபீடாதிபதி தனபாலன், திருமதி பி.அம்பிகைபாலன், திரு.ஈ.குமரன், திருக.ஸ்ரீகணேசன், திரு.ஆறுதிருமுருகன், திரு.ந.குகபரன் என்ற பெரியோர்களின் கல்விசார் கட்டுரைகளும், எம்மூக்கப் பெரியோர்களின் வரலாற்றுக் குறிப்புகளும், இன்று கௌரவிப்போரின் வாழ்க்கைக் குறிப்புகளும் அடங்கியதாக அமைக்கப் பெற்றுள்ளது. சகலவழிகளிலும் உதவிய அனைத்துள்ளங்களுக்கும் எனது நன்றிகள்.

மேலும் அச்சுப்பதிப்பு செய்த மானிப்பாய் திருச்செல்வி அச்சகம், அட்டைப்படம் அச்சுப்பதித்த, அட்டைப்படம் வரைந்த ஆசிரியரும், எனது மருமகனாரும் ஆன திரு.க.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி அவர்களுக்கும், குறிப்பாக எமது நிறுவனத்தை சகல வழிகளிலும் ஆற்றுப்படுத்திச் செல்லுகின்ற அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய செஞ்சொற் செல்வர் அவர்களுக்கும் இவ்விடத்தில் நன்றி கூறிப்பெருமை அடைகிறேன்.

இந்நூல் வெளியீட்டு விழாவிற்கு வருகை தரும் அனைத்துப் பேராசிரியர்களுக்கும், விரிவுரையாளர்களுக்கும் மற்றும் எம்மூர்ப்பெரியார்கள் அனைவருக்கும் நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன். இந்நூல் வெளிவர சகலவழிகளிலும் ஒத்துழைப்பு நல்கிய எமது நிர்வாக சபையைச் சேர்ந்தவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் நன்றி கூறி, இந்நூலுக்கு தங்கள் ஆதரவு வழங்கியது போன்று தொடர்ந்து வர இருக்கும் மலர்களுக்கும் ஆதரவு வேண்டி நிறைவு செய்கிறேன்.

"வயிற்றுக்குச் சோறிடவேண்டும்
இங்கு வாழுமனிதருக் கெல்லாம்
பயிற்றிப்பல கல்வி தந்து இந்தப்
பூாரை உயர்த்திட வேண்டும்"

**நன்றி**

**க.ஸ்ரீநந்தகோபன்**
**செயலாளர்**

# கல்வியியல் கட்டுரைகள்

# உளவியல் மெய்யியல் – இடை வினைகள்

பேராசிரியர்- சபா.ஜெயராசா

உலக அறிகை வரலாற்றில் மெய்யியலும் உளவியலும் ஒன்றை யொன்று பற்றித் தழுவி வளர்ந்து வந்த விசைகளாகவே இருந்து வந்துள்ளன. மெய்யியலில் "பொருள் முதல் வாதமும்" "கருத்து முதல் வாதம்" அல்லது எண்ணமுதல் வாதமும் வரலாற்றில் தொடர்ச்சியான முரண் விசைகளாக தொடர்ந்து வந்துள்ளன. எண்ண முதல் வாதிகள் உளவியலைத் தமது சிந்தனை வளத்திலும் பொருள் முதல் வாதிகள் அவ்வாறே தமது தளத்திலும் வளர்த்து வந்துள்ளனர். உலகு பற்றியதும் மனிதன் பற்றியதுமான இந்த முரணியல் நோக்கு மனிதரின் நடப்பியல்வாழ் வாழ்வாதார முரண்பாடுகளில் இருந்தே மேலெழுந்தன.

உருவ வழியின்றி அருவ வழியாகக் கண்டறிவதே எண்ணங்கள் (IDIAS) என்ற எளிமையான வரைவிலக்கணம் பிளேட்டோவினால் வழங்கப்பட்டது. கிறீஸ்துவுக்கு முற்பட்ட ஐரோப்பிய மரபில் உழைப்பின் காட்சி வடிவ விளைவுகளை அடிமைகளே உருவாக்கினர். அந்நிலையில் பொருள் வடிவங்கள் தாழ்ந்தவை என்ற நிலைக்குத் தள்ளப்பட்டன. அதே வேளை உயர்ந்தோர் மயப்பாட்டு எழுந்த தருக்க சிந்தனைகள் மேலோங்கியவையாக முன் மொழியப்பட்டன. பொருள்களுக்கு காலம், தேய்மானம், சிதைவு, அழிவு உண்டென்றும் ஆயின் எண்ணங்களோ அத்தகைய சிதைவுகளுக்கு உள்ளாகாதவை என்றும் எண்ண முதல் வாதிகள் வழித்துரைத்தனர்.

எண்ணங்கள் "நிறைகருத் துக்களாக" முழுமை பெற்றன. அவையே உண்மையின் வடிவங்களாகின்றன. அவை காலத்தால் அழியாதவை. அவை என்றும் உள்ள நித்தியப் பொருள்கள். அவற்றை அறிந்து கொள்வதற்கு நியாயமும், தருக்கமும், கல்வியும், கேத்திர கணிதமும் அறிகருவிகளாகின்றன. உண்மை, அழகு, நன்மை ஆகியவற்றை நிறை கருத்துகளாகக் கொண்டு அவற்றின் நித்தியத்தை கிரேக்க எண்ண முதல் வாதிகள் வலியுறுத்தினர். சிந்தித்தல், ஆழ்ந்து சிந்தித்தல், வினாவிடை வழியாகச் சிந்தித்தல், தருக்க நிலையில் சிந்தித்தல் முதலியவை கிரேக்க எண்ணமுதல் வாத மெய்யியலிலும், உளவியலிலும் மேலோங்கியிருந்தன.

பொருளை முதன்மையாக்கும் சிந்தனைகளைக் கிரேக்க மரபில் முன்னெடுத்தவர்களுள் தேல்ஸ் (THELES) சிறப்பார்ந்த இடத்தைப் பெறுகின்றார். பொருள்கள் அனைத்திற்கும் மூலப் பொருள் யாது என்ற வினாக்கள் எழுப்பப்பட்ட வேளை "தண்ணீர்" என்ற பொருளை அவர் முன் வைத்தார். சகல பொருட்களிலும் தண்ணீர் உள்ளடங்கியிருப்பதாக அவர் கருதினார். "நீரின்றி அமையாது உலகு" என்ற கருத்து தமிழகத்திலும் நிலவியமை குறிப்பிடத்தக்கது. கிரேக்கத்தில் வாழ்ந்த சிந்தனையாளர் சிலர் நீரையும் சிலர் வளியையும் வேறு சிலர் தீயையும் பொருள்களின் மூல வடிவங்களாகக் குறிப்பிட்டனர். இக்கருத்துக்கள் உளவியலிலும் தெறிக்கலாயின. இவ்வாறான பொருள் மூலங்களோடு இசைவுபட

வாழ்வதனால் உடல் நலமும் உள நலமும் மேலோங்கும் என்ற கருத்து இடம் பெறலாயிற்று.

பொருள்களின் மூல வடிவத்தைத் தேடும் சிந்தனைகள் உலகக் கல்வி வரலாற்றிலே தொடர்ந்து மேலெழுந்து கொண்டிருந்தன. இவ்வாறான சிந்தனை வளர்ச்சி பொருள்களில் இருந்து நுண் பொருள்களை நோக்கித் திரும்பியது. அதன் வழியாகச் சிந்தனைக் கூர்மையைப் பயன்படுத்திய டெமொக்கிரட்டிஸ் "அணு" என்ற பொருளை முன் வைத்தார். அணுவே அனைத்துப் பொருள்களுக்கும் அடிப்படையாக அமைகின்றன. அவற்றின் சேர்க்கையால் புதிய பொருள்கள் தோற்றம் பெறுகின்றன. உயிர்ப் பொருள்களும் அவ்வாறே தோற்றம் பெறுகின்றன. அணுக்கள் பிரியும் பொழுது பொருள்கள் சிதைவடைகின்றன. இக்கருத்தை அவர் பிரபஞ்ச விளக்கத்துக்கும் விரிவுபடுத்தினார். மெய்யியலிலே வளர்ச்சி பெறத் தொடங்கிய நுண்பாகச் சிந்தனைகள் உளவியலிலும் அதே வேளை மனித உடல்பற்றியும் உளம் பற்றியும் தொடர்புபட்டு மேலெழுந்தன. மெய்யியல் மற்றும் உளவியல் சிந்தனைகளின் ஊடாட்டங்கள் மனிதர் பற்றிய தரிசனத்தை வளம்படுத்தலாயின.

உளவியல் சிந்தனைகளிலே சமய மெய்யியற் சிந்தனைகளும் தாக்கங்களையும் விளைவித்து வந்துள்ளன. கடவுள் மனிதர் என்ற இருமை நிலைச் சிந்தனைகள் சமய மெய்யியலின் ஒரு பரிமாணமாக அமைந்தது. மனிதரின் மட்டுப்பாடான நிலையும், கால நீட்சி வரையறையும் அந்த மட்டுப்பாடான நிலைகளை விஞ்சி நிற்கும் கடவுள் பற்றிய மெய்யியல் சிந்தனைகளை முன்னெடுத்தன. மனித நடத்தைகள், ஒழுக்கம், அறவழி வாழ்தல் முதலிய நடத்தை ஒழுங்குகள் நடத்தை உளவியலுக்கு வழிகாட்டலாயின. பொருள் முதல் வாதிகள் மனித நடத்தை ஒழுங்கைப் பொருண்மியத்தளத்தில் நோக்க சமய மெய்யியல் அவற்றை இறையியற் கண்ணோட்டத்தில் அணுகியது.

சமய அறிகையிலேயே தோற்றம் பெற்ற பிறிதொரு கருத்து அனைத்தையும் இறைவனின் தோற்றங்களாகக் காணுவதாக அமைந்தது. இக்கருத்து மனிதப் பண்புகளின் உயர்ந்த நிலைகளை உளவியலிலும், மெய்யியலிலும் கண்டறியும் தேடல்களுக்கு விசையூட்டியது. மானிட வாதம், தாராண்மை வாதம் முதலியவை வளர்ந்தெழுவதற்குரிய ஆழ்ந்த வேர்களை அது உருவாக்கியது. மானிட மேன்மை நோக்கில் மெய்யியலும் உளவியலும் இடைவினை கொள்ளலாயின.

இறைவனை நடுநிலையாகப் பயன்படுத்துவதிலிருந்து மனிதனை நடுநாயகப்படுத்தும் சிந்தனைகள் மேலெழலாயின. மறுமலர்ச்சிச் சிந்தனைகள் இத்தாலியில் தோற்றம் பெற்றன. மனிதஉடல், உள்ளம், சிந்தனை, மனவெழுச்சிகள், அடைவுகள் முதலியவை கல்வியிலும் கலை இலக்கிய ஆக்கங்களிலும் முதனிலை பெறத் தொடங்கின. மனித இயல்புகள் இயற்கை வழியாகவே நோக்கப்பட்டன.

மேற்கூறிய தளத்திலிருந்து மேலெழத் தொடங்கிய பிறிதொரு வளர்ச்சியாகிய இயற்பண்புவாத (NATURALISM) மெய்யியல் உளவியலிலே செல்வாக்குச் செலுத்தலாயிற்று. மனிதரின் வளர்ச்சிப்படி நிலைகளை அடியொன்றிக் கல்வி அனுபவங்களை ஒழுங்கமைத்தல், இயற்கைக்கும் மனிதருக்கும் இடையேயுள்ள

இடை வினைகள் வழியான அறிவுக் கையளிப்பு புலன்களுக்குரிய பொருத்தமான பயிற்சிகளின் முக்கியத்துவம் முதலியன இயற் பண்பு வாதத்திலே வலியுறுத்தப்பட்டன. சிறப்பாகக் கல்வி உளவியலின் வளர்சிக்கு இயற் பண்பு வாதம் பெரும் பங்களிப்பைச் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

மானிட மையப்பாடு மனித மகிழ்ச்சியிலும், மகிழ்ச்சிக்குரிய கலைப்படைப்புக்களிலும் கவனம் செலுத்தலாயிற்று. மனிதரால் ஆக்கப் பெற்ற செவ்விய இலக்கியங்களும், கலைகளும், பாதுகாப்பிற்கும் போற்றுதற்கும் உரியனவாக எழுச்சி பெறலாயின. இத்தாலியில் வரையப்பட்ட மறுமலர்ச்சிக்கால ஓவியங்களிலே மனிதப் பூரிப்பு வெளிப்படுத்தப்பட்டது. மனித உடல் வாகு தெளிவான சித்திரிப்புக்களின் வழியாக எழுதப்பட்டது.

மனிதரை நடுவனாகக் கொள்ளலின் பிறிதொரு மெய்யியல் வெளிப்பாடாக இமானுவேல் கான்ட் அவர்களின் சிந்தனைகள் அமைந்தன. புறவுலகு மனிதரால் காட்சி கொள்ளப்படுதல் தொடர்பாக அவரால் முன்வைக்கப்பட்ட சிந்தனைகள் புலக்காட்சி தொடர்பான உளவியற் சிந்தனைகளுக்கு வலுவூட்டி வளம் சேர்த்தன. சிறப்பாக தனிமனித உளவியல் நோக்கு வளர்ச்சியடைவதற்கும் விரிவாக்கம் பெறுவதற்கும் அவரது சிந்தனைகள் வலுவான பங்களிப்பைச் செய்தன.

மனிதரது புலன் உணர்வுகள் பொருள்களுடன் தொடர்பு கொள்வதன் வாயிலாகவே பொருள்கள் பற்றிய இருப்பு மனிதருக்குத் தெரிகின்றது. பொருள்கள் தமது நிலையில் எப்படி இருக்கின்றன என்று கூறமுடியாது. அந்தப் பொருள் எமது புலன்களுக்கு எவ்வாறு தரப்படுகின்றன என்பதே மனிதரால் தெரிந்துகொள்ளப்பட முடிகின்றது. காட்சியிலே புலன்களின் செல்வாக்கு இருப்பதனால் நாம் காணுகின்றவாறு பொருள் இருக்க முடியாது என்ற கருத்துக்கு முன் மொழியப்படுகின்றது. அதாவது புலன்கள் பொருட்களின் உண்மை நிலையில் இருந்து மனிதரைப் பிரித்து விடுவதாக கான்ட் கருதினார்.

தனித்தனியாக மனிதருக்குக் கிடைக்கப் பெறும் புலனுணர்வுத் தகவல்கள் காலம் மற்றும் வெளி என்ற கருவிகளினால் அல்லது சட்டங்களால் ஒழுங்கமைக்கப் படுகின்றன. காலம் மற்றும் வெளி பற்றிய கருத்துக்கள் மெய்யியலில் இருந்தும் உளவியலிலிருந்தும் இடை வினைகளைப் புரிய வைப்பதற்கு அவரது சிந்தனைகள் வலுவூட்டின. காலம் வெளி ஆகிய சட்டங்களின் வழியாகவே மனித உளம் உலகைக் கண்டறிய முடிகின்றதென்று அவர் முன்மொழிந்தார். அறிவின் ஆக்கத்தில் மனச்சட்டகத்தின் இயல்பு வலியுறுத்தப் படுகின்றது. புலன் சாரா அறிவு மற்றும் புலன் சாரா இயங்கியல் தொடர்பாக அவரால் எடுத்துரைக்கப்பட்ட கருத்துக்கள் பகுத்தறிவின் வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்துள்ளன.

ஐரோப்பிய மெய்யியற் சிந்தனைகள் நவீனத்துவம் நோக்கித் திரும்புவதற்கு இயங்கியல் தொடர்பான எண்ணமுதல் வாதத்தை முன்னெடுத்த கெகலின் சிந்தனைகளும், பொருண்மிய

இயங்கியலை முன் மொழிந்த கார்ல் மார்க்ஸின் சிந்தனைகளும் பெரும் பங்களிப்பு விசைகளைத் தந்துள்ளன. கெகலின் சிந்தனைகள் பரிபூரணமான அல்லது முழு நிறைவான எண்ண முதல் வாதம் என்று குறிப்பிடப்படும்.

முழு நிறைவான கருத்துத் தன்னை புறவயப்படுத்துவதன் வாயிலாக வெளிப்படுத்திக் கொள்கின்றது. அக்கருத்து தன்னைப் பிளவுபடுத்தி, புறவயப்படுத்தி, முரண்பட்டு, போராடித் தெளிவு கொண்ட உணர்வைப் பெற்றுக் கொள்கின்றது.

இயங்கியலைப் பொருண்மியத் தளத்தில் விளக்கிய கார்ல் மார்க்ஸின் சிந்தனைகள் .உளவியலிலே பல விதமான பரிமாணங்களை ஏற்படுத்தின. மனித இருப்புக்கும் பரிமாணங்களுக்கும் உள்ள தொடர்புகளை அறிந்து கொள்ளும் புதிய புலக் காட்சிக்கு அது வழி வகுத்தது. அத்துடன் மனித "அன்னிய மயப்பாடு" என்ற உளவியல் தோற்றப்பாட்டினை விளங்கிக் கொள்ளும் தருக்கத்தையும் மார்க்ஸிய சிந்தனைகள் ஏற்படுத்தின. மனித இருப்பை மாற்றியமைப்பதன் வாயிலாகவே நடத்தைகளை மாற்றியமைக்கலாம் என்ற உளவியல் சிந்தனைகளுக்கும் மார்க்ஸியம் வலுவூட்டியது.

மார்க்ஸிய சிந்தனைகளை அடியொற்றி எழுந்த அமைப்பியற் சிந்தனைகளும் உளவியலில் செல்வாக்கை ஏற்படுத்தின. பியாசேயின் வளர்ச்சிப்படி நிலை உளவியற் சிந்தனைகள் அமைப்பியலை அடியொற்றி எழுந்தன.

மேலும் உளவியலில் எழுச்சி கொண்ட உளப்பகுப்புச் சிந்தனைகள் மெய்யியலிலே மனம் பற்றிய அறிக்கையில் மாற்று வகையான காட்சிகளை ஏற்படுத்தலாயின. மனித மொழி பற்றிய புதிய விளக்கங்களைக் கொள்வதற்கு நனவிலி என்ற எண்ணக்கரு துணை செய்வதாக அறிந்தது. பின் கட்டமைப்பியல் மற்றும் பின்நவீனத்துவம் ஆகிய சிந்தனைகளும் உளவியலுக்கும் மெய்யியலுக்கும் இடையே ஊடாட்டங்களை அதிகரிக்கச் செய்துள்ளன.

மேற்கண்ட அவதானிப்புகளில் இருந்து ஒரு கோட்பாட்டு ஆக்கத்துக்கு நகர்ந்து செல்லமுடியும். குறிப்பிட்ட ஓர் அறிவுத் துறையில் காணப்படும் இடைவெளியை நிரப்புவதற்குப் பிறிதோர் அறிவுத் துறையில் இருந்து பொருத்தமான கருத்துக்கள் பெறப்படுகின்றது. இது "நிரப்பலியல்" எனப்படும் அறிவின் முன்னெழு பாய்ச்சலில் நிரப்பலியல் தவிர்க்கமுடியாத இணைப்பாகின்றது.

# கல்விசார் செயற்பாடுகளில் தரவட்டம்.

எமது பாடசாலைகள் ஏனைய மாவட்ட பாடசாலைகளிலிருந்து பல்வேறுபட்ட சவால்களிற்கு மத்தியில் இயங்கிக் கொண்டிருப்பது யாவரும் அறிந்ததே. பல்வேறுபட்ட வள ஆளணிப் பற்றாக்குறைகள், தொடர்பாடல் நலிவுகள் மத்தியிலும் நல்ல நிலையில் இயக்கப்படுகிறது. பொது அடைவு மட்டங்களில் போதிய இடத்தினைப் பிடிப்பதில் பின்னடைவைச் சந்திக்காமல் தக்க வைத்துக் கொள்கின்றன. மேலும் சிறப்பான நிலையை மேம்படுத்துவதற்காக இன்று பல செயற்றிட்டங்கள் முன்னெடுப்பதற்காக அறிமுகப் படுத்தப்படுகிறது. அவ்வகையில் தரவட்டச் செயற்பாடுகளும் புதிய கண்ணோட்டத்தில் பாடசாலைகளிற்கு வழங்கப்பட்டுள்ளது.

ஒரு நிறுவனத்தில் அல்லது தொழிலாற்றுமிடத்தில் அல்லது வீட்டில் அதன் பங்காளிகள் இணைந்து அர்ப்பணிப்புடன் பல்வேறு அடைவு மட்டங்களை அடிப்படையாகக் கொண்டு இலக்குகளை அமைத்தவாறு இயங்குகின்றனர். பெரும்பாலான நிலைமைகளில் இவை பற்றிய தெளிவின்மைகளுடன் சாதாரணமாக இயங்குவதனையும் காண்கிறோம். ஆனால் ஒவ்வொரு நபரும் தமது செயற்பாடுகளின் வினைத்திறன் மேம்பட்டு இருக்க வேண்டும் என்ற எதிர்பார்க்கைகளைக் கொண்டிருப்பர். தமது சேவையும் வெளிப்பாடும் உயர் தரத்தில் அமைதலை விரும்புவர். செயற்பாடுகளிற்கான வளங்கள் அதாவது பௌதீக வளங்கள், சேவைசார் வளங்கள் போதியளவிலும் தரமாகவும் கிடைக்கும் நிலையில் ஆற்றுகைகளில் உயர் தரமான வெளிப்பாட்டைத் தோற்றுவிக்கக் கூடியதாகிறது.

இலங்கையில் நடைமுறைப்படுத்தப்படும் கல்விச் சீர்திருத்தமானது மூன்று கட்டங்களைக் கொண்டதாக அமைந்துள்ளது. அது 1999 இல் கலைத்திட்ட அமுலாக்கத்துடன் ஆரம்பித்தது இரண்டாம் கட்டத்தில் (2004இல்) முழுமைத்தர முகாமைத்துவ அமுலாக்கத்தில் தரவிருத்தியை அடிப்படையாகக் கொண்டு முன்னெடுக்கப்படுகிறது. பின்னர் மூன்றாம் கட்டமாக புதிய கல்வி மறுசீரமைப்பின் கீழ் வகுப்பறைக் கற்றல் – கற்பித்தல் செயற்பாடுகளில் மாற்றத்தினையும், மதிப்பீட்டில் மாற்றத்தினையும் அமுலாக்குவதாக உள்ளது. இவற்றிற்கான அடிப்படை அபிவிருத்திக்குரிய இயங்குதளமாக நிறுவனங்கள் அமைகின்றன. நிறுவனங்கள் அமைப்பாகக் கருதப்படும் போது அது மூன்று அடிப்படைக் கட்டமைப்புக்களைக் கொண்டுள்ளமையைக் காணலாம்.

1. நிறுவன அமைப்பு
2. அந்நிறுவனத்தினை வழிநடாத்தும் ஒழுங்குமுறைகள்
3. பணிபுரிவோர் ஆகியனவாகும்.

இலங்கையின் கல்விக் கட்டமைப்பை நிறுவன அமைப்பாக நோக்குவோமாயின் கல்வி அமைச்சின் கீழ் ஒன்பது மாகாணக் கல்வி அமைச்சும், மாகாணக் கல்வித் திணைக்களங்களும் இயங்குகின்றன. அவற்றின் கீழ் 93 வலயக் கல்வி அலுவலகங்கள் செயற்படுகின்றன. இவற்றின் கீழ் சுமார் 10,000ற்கு மேற்பட்ட அரச, தனியார் பாடசாலைகள் முறைசார் கல்விக் கட்டமைப்பின் கீழ் இயங்குகின்றன.

பாடசாலையை எடுப்போமாயின், அங்கு பணிபுரிவோரும் பயனாளிகளும் ஓர் முறையியலிற்குள் இயங்கிக் கொண்டிருப்பர். பாடசாலையை வழி நடாத்துவதற்கு எழுதப்பட்ட எழுதப்படாத பல்வகையான சட்டதிட்ட விதி முறைகள் காரணப்படுகின்றன. இவற்றை பகுப்பாய்வு செய்தால் அவை பல வரலாற்றுப் பதிவுகளைக் கொண்டிருக்கும். இன்றைய நிலையில் பாடசாலைக் கொள்கை, பிரதேசத் தேவைகளும், பொருளாதார அரசியல் காரணிகளும் மற்றும் கல்வி அமைச்சின் வழி வந்த அமைப்புக்கள், எதிர்காலத்திற்கான கல்வி மற்றும் அடைவுத் தேவைகள் போன்ற பல்வேறு காரணிகள் பாடசாலைக்கான முறையியலைத் தீர்மானிப்பதனைக் காணலாம். இருப்பினும் கல்வி அமைச்சானது கல்விசார் சட்டங்கள், சுற்று நிருபங்கள், கொள்கைகள் போன்றவற்றின் அடிப்படையில் முறைசார் கல்விச் செயற்பாடுகளை மேற்கொள்ளும் வகையில் பாடசாலைகளை இயங்குவதற்கான வழிகாட்டல்களை வழங்குகிறது.

ஓர் நிறுவனத்தின் மேற்படி மூன்று கூறுகளையும் அபிவிருத்தி செய்வதனூடாகவே இந்நிறுவனத்தின் இலக்கு தரமான முறையில் அடையப்படக் கூடும். ஆகவே கல்வி அமைச்சானது கல்வி நிறுவன இயக்கும் அமைப்புக்களை அபிவிருத்தி செய்வதற்காக அமைச்சின் மேல் நிலையிலிருந்து பாடசாலை வரை அபிவிருத்திச் செயற்பாடுகள் இன்று முன்னெடுக்கப்படுவதனைக் காணலாம். உள்ளூர் மட்டத்தில் உதாரணத்திற்குப் பார்ப்போமாயின் வலயக் கல்வி அலுவலகம், கோட்டக் கல்வி அலுவலகம், பாடசாலைகள் மற்றும் அதன் துணை செயற்பாட்டுக் கூறுகளான ஆசிரிய நிலையங்கள், கணனி வள நிலையங்கள், கணனிக் கற்றல் நிலையங்கள் போன்ற கூறுகள் யாவற்றினதும் முறையியலை வினைத்திறனாக மேற்கொள்ள வைப்பதற்கான பயிற்சிகள், வழிகாட்டல்கள், வளமூட்டல்கள், மதிப்பிடுதல் போன்ற பல்வகையான நுட்பங்களினைப் பிரயோகித்து அபிவிருத்தி செய்யப்படுகிறது. இச்செயற்பாடுகளை நாம் நிறுவனத்தின் முறையியல் அபிவிருத்தியாகப் பார்க்கலாம்.

அடுத்து நிறுவனத்தினை அபிவிருத்தி செய்வதற்காக நான்கு வகையான மென்பொருட்கள் அறிமுகப்படுத்தப்பட்டு அவற்றை அமுல்படுத்துவதனூடாக அதன் அபிவிருத்தி மேம்பாடடையச் செய்து இலக்கு நோக்கிய நகர்வின் பேறு தரமாக அமைவதற்கான அடிப்படையை வழங்குவதற்கான முனைப்பு முன்னெடுக்கப்படுகிறது. பாடசாலைகளில் கற்றல் செயற்பாட்டை விளைதிறன் கொண்டதாகவும் அதனை அர்த்தமுள்ளதாக்கவும் தேர்ச்சி அடிப்படையிலான கற்றல் செயற்பாடுகள் முன் வைக்கப்பட்டு அதனை அமுல் படுத்தும் கற்றல் முறையாக 5E கற்றல் முறை அமுலாக்கப் பட்டுள்ளமையைக் காணலாம். இதனூடாக தேர்ச்சி மையக் கல்வி அர்த்தமுள்ளதாக்க முனைப்பு எடுக்கப்படுகிறது.

அதே போன்று அலுவலகத்தினையும் வகுப்பறைகளையும் அதன் சுற்றாடல்களையும் அழகுறப் பேணவும், சிறந்த முகாமைத்துவ ஆற்றுகைகளை உறுதிப்படுத்தவும், வீண் விரயங்களைக் குறைக்கவுமாக 5S முறையிலமைந்த யப்பானியச் செயன்முறைகளை பின்பற்றுவதற்கான பயிற்சியும் வழிகாட்டல்களும் வழங்கப்படுகிறது.

மூன்றாவது மென்பொருளாக தரவட்டச் செயற்பாடுகள் பணியாளர்களிடமும், மாணவர்களிடமும் முன்னெடுக்கச் செய்வதற்கான

முன்னெடுப்புக்கள் பண்புசார் அபிவிருத்தி என்ற இலக்கின் அடிப்படையில் முன்னெடுக்கப்படுகிறது.

நான்காவதாக தொழில் வாண்மை அடிப்படையில் ஆற்றப்படும் தொழிலானது வாண்மைக்குரியது. ஏனைய மருத்துவ, பொறியியல், பாதுகாப்பு போன்ற துறைகளில் ஆற்றப்படும் செயற்பாடுகளிற்கு வகைகூறல் முக்கியத்துவமானது. அதனடிப்படையிலேயே பதவியுயர்வு, சம்பள ஏற்றங்கள், பயிற்சிகள், புலமைப்பரிசில்கள் வழங்கப்படுகின்றன. அதற்கு ஒத்ததாகவே ஆசிரியத் தொழிலும் மற்றும் கல்விசார் பணிகளும் வாண்மைக்குரியதாகும். இவ் வகையில் அடைவுத் தரங்கணிப்புத் (Performance Appraisal) திட்டம் வலுவுடைதாக்குவதற்குமான முனைப்புக்களும் அதற்கான பின் வலுவூட்டல்களும் சிறப்பாக அமையும் போது அபிவிருத்தியும் அர்த்தமுள்ளதாகும். மேலும் பாடசாலை முன்னேற்ற நிகழ்ச்சித் திட்டம் (Programme of School Improvement) பாடசாலை மட்டக் கணிப்பீடு, உள்வாரி, வெளிவாரி மதிப்பீடுகள் போன்றனவும் நிறுவனத்தின் அபிவிருத்தியை வலுப்படுத்த உதவும் துணைச் செயற்பாடுகளாக அமைகின்றன. அத்துடன் இவை தனியாள் அபிவிருத்தியிலும் பங்காற்றுகிறது.

நிறுவனத்தின் பணிபுரிவோர் அடிப்படையில் அவர்களின் தனியாள் அபிவிருத்தி பாரிய கவனத்திற்கு உட்படுத்தப்படுவதல் பொது இலக்கினை அடைவதற்கான அடிப்படையாக அமைகிறது. அவ்வகையில் நான்கு வகையில் தனியாளில் அபிவிருத்தி ஏற்படுத்த முனைகின்றனர். அறிவை மேம்படுத்தல், திறனை விருத்தியாக்கல், மனப்பாங்கில் நேர்முகத் தன்மையும் விரிவாக்கமும், ஒழுக்கவியல் மேம்பாடும் (Head, Hand, Heart, Habit) என்ற வகையில் தனியாளை விருத்தி செய்யும் அடிப்படைச் செயற்பாடுகள் மேற்கொள்ளப் படுகிறது. இதனடிப்படையில் ஆசிரியர்களிற்காக ஆசிரியர் தரங்கணிப்புச் செயற்றிட்டம், மாணவர்க்காக பாடசாலை மட்டக் கணிப்பீடு வலுப்படுத்தல், ஆசிரியர்க்காகவும், மாணவர்க்காகவும் மற்றும் பணியாற்றும் சகலருக்காகவுமான சுய மதிப்பீடு மற்றும் உள்வாரி, வெளிவாரி மதிப்பீடு ஆகிய செயற்றிட்டங்கள் அமுலாக்கத்திற்கு வந்துள்ளமையைக் காண்கின்றோம்.

எனவே கல்வி அமைச்சின் முகாமைத்துவ தர உறுதிப்பாட்டு அலகினால் பாடசாலைக் கல்விச் செயற்பாட்டில் பண்புசார் விருத்தியை ஏற்படுத்தும் நோக்கில் "தரமான சமூகத்திற்கு தரமான கல்வி" என்ற மகுட வாசகத்தின் கீழ் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகிறது.

எனவே முழுமையான கல்வி அபிவிருத்தி நோக்கில் நிறுவனமும், அதன் முறையியலும், பணிபுரிவோரும் அபிவிருத்திச் செயன்முறையின் கீழ் உள்வாங்கப்படுதலை இங்கு காண்கின்றோம். அதன் ஒரு கூறாகிய நிறுவன அபிவிருத்திக் கூறினுள் அடங்குவதாக பாடசாலைகளில் தரவட்டச் செயற்பாடுகள் அமைகின்றன. எனவே தரவட்டம் தொடர்பாக விடய முன்வைப்பை அடுத்து நோக்குவோம்.

முறைசார் கல்வி அமைப்பின் கீழ் இன்று பல பிரிவுகளில் போதுமான அபிவிருத்தி ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. ஆரம்பக் கட்டத்தில் பிரதான இலக்காக அமைந்த எழுத்தறிவு வீதத்தினை உயர்த்துதல் என்ற நிலைமையும், பின்னர் கட்டாயக் கல்விக் கொள்கையின் கீழ் பாடசாலை உட்பிரவேசிக்கும் மாணவர் எண்ணிக்கையை உயர்த்துதலும் இன்று

அடையப்பட்டுள்ளது. இவ்வகையில் எதிர் காலத்தில் செயற்பாடுகள் யாவற்றிலும் தரத்தினைப் பேணல் என்ற இலக்கு நோக்கிய பயணிப்பை மேற்கொண்டுள்ளோம். இதன் ஒரு கூறாகவே தரவட்டச் செயற்பாடுகள் பாடசாலைகளிலும் மேற்கொள்ள வேண்டும் என்ற எதிர்பார்க்கை முன்வைக்கப்படுகிறது. பாடசாலை அபிவிருத்தியானது பாடசாலையில் உள்ளவர்களிலேயே தங்கியிருப்பதாக கல்வி அமைச்சினால் கருத்து முன்வைக்கப்படுகிறது. பாடசாலையிலுள்ள அனைவரும் பிரச்சினைகளை இனங்கண்டு, அதற்கான தீஉவுகளைத் தாமே தேடியறிந்து தீர்த்தல் வேண்டும். எனவே இவற்றை எய்துவதற்கான வழிகாட்டலாக தரமான முகாமைத்துவத்தினை உறுதி செய்வதற்கும் பங்காளர்களது ஒத்துழைப்பினை ஆக்கபூர்வமாகவும் அர்ப்பணிப்புடன் பெற்றுக் கொள்வதற்கும் சரியான செயற்பாடுகளை தாமாகவே முன்வந்து திட்டமிட்டு அமுலாக்குவதற்கும் தரவட்டச் செயற்பாடுகள் உதவுகின்றன. இதனூடாக பாடசாலையில் சகலருக்கும் இதுபற்றிய அறிவையும் பயிற்சியையும் வழங்குவதனூடாக பொது இலக்கை நோக்கிய யதார்த்தமான முறையான பொதுக்கல்வி முறைமையின் தேர்ச்சிகளை எமது சிறார்கள் தரமாகப் பெறுவதற்கு உதவுவதுடன் கற்றல் இடமாற்றம் நிகழ்வது போல, பணியாளர்கள் தமக்கும் தன் குடும்ப வாழ்விலும் தேர்ச்சிகளை நோக்கிய வினைத்திறனான செயற்பாடுகளைப் பெறுவதற்கும் தரவட்ட அனுகு முறைகள் உதவும் என எதிர்பார்க்கலாம்.

## *தரவட்ட வரலாறு:*

தரவட்டம் முதன் முதலில் யப்பானில் 1962 இல் Kaoru Ishikawa இனால் நிப்பொன் தொலைபேசிக் கம்பனியில் (Nippon Telephone & Telegraph) அறிமுகம் செய்யப்பட்டது. இதற்காக இசிக்காவா அவர்களால் *QC Circle Koryo* and *How to Operate QC Circle Activities* என்ற இரு புத்தகங்கள் அறிமுகஞ் செய்யப்பட்டது. இதனை இணைப்புச் செய்த நிறுவனமாக Japanese Union of Scientist & Engineers (JUSE) காணப்படுகிறது. இரண்டாம் உலகப் போரின் பின்னர் தரக் கட்டுப்பாடு ஆய்வுக் குழுவாக இவ்வமைப்பு செயற்பட்டது. படிப்படியாக அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகளிலும் சில ஆசிய நாடுகளிலும் தரவட்டச் செயற்பாடுகள் பரவியது. 1977 இல் தரவட்டம் தொடர்பான இயக்கம் ஆரம்பிக்கப்பட்டு தற்போது 60 நாடுகளில் 3 கோடி தரவட்டங்கள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. ஆரம்பத்தில் பொருள் உற்பத்தி தொடர்பாக இயங்கிய தரவட்டங்கள் இன்று முகாமைத்துவக் கலாச்சாரத்தில் பண்புசார் விருத்தி தொடர்பான சேவை நிறுவனங்களிலும் இயங்குகிறது. முகாமைத்துவக் கலாச்சாரத்தில் சிறந்த சாதனையை உருவாக்கும் தர வட்டம் அறிமுகமான வேளை முழுப்பண்புசார் முகாமைத்துவமும் தரவட்டமும் நாணயத்தின் இருபக்கங்களாக விருத்தியடைந்துள்ளன.


தரவட்டம்.

- ஒரு நிறுவனத்தில் அல்லது பாடசாலையில் எதிர்கொள்ளப்படும் பிரச்சினைகள் அல்லது சவால்கள் தொடர்பில் ..
- அவற்றுடன் தொடர்புடைய பணியாளர்கள் அல்லது ஆசிரியர்கள் ..
- வாரம் ஒரு தடவை ஒன்று கூடி தொழில் அலுவல்களுடன் தொடர்பாக பிரச்சினைகளை இனங்கண்டு ..
- அவற்றை ஆராய்ந்து தீர்வுகளைத் தேடியறிந்து ..
- தமது தொழில் வாழ்க்கையை சிறப்பாகச் செயலாற்ற முயலும் சிறு சேவைச் சமூகமே தரவட்டமாக இனங்காணப்படுகிறது.

## தரவட்ட முறையின் அனுகூலங்கள்.

நிறுவன நோக்கங்களை அடையும் வகையில் பங்காளிகளது ஒத்துழைப்பு உதவிகளைப் பெற முடியும். தாமாக முன்வந்து தமது கருமங்கள் என்ற மனப்பாங்கு மேலோங்க உதவுகிறது. தரவட்ட அங்கத்தவர்கள் யாவரும் சமமாகக் கருதப்படுவதாலும் சகலரும் பங்குபற்றுவதாலும் காலப்போக்கில் தொழில் வழங்குனர் – தொழில் பெறுவோர் இடையிலான முரண்பாடுகளிற்குக் காரணமான Them-Us Syndrome ற்கு எதிரான சிறப்பு தீர்வாக அமையும். அத்துடன் தொழில் புரிவோர்கள் தமக்கிடையிலான பிரச்சினைகளிற்குத் தாமாகவே தீர்வுகளைக் கண்டறிவதற்காக பிரச்சினைகள் சவால்கள் தொடர்பாக பல்பக்கச் சிந்தனை மூலமாக அபிப்பிராயங்கள் முன்வைக்கப்படுகிறது. மறைந்துள்ள ஆற்றல்கள் வெளிப்பட சந்தர்ப்பம் கிடைக்கப் பெற்று தொடர் மேம்பாடு (Kayzen) அடையப்படல். தொழில் வாண்மை விருத்திக்கு சந்தர்ப்பம் பெறப்பட்டு புத்தாக்கங்கள் ஏற்பட வசதி கிடைத்தல். சுய ஊக்கம், பொறுப்பேற்றல், ஈடுபாடு ஏற்படுவதுடன் பொது இலக்கை அடைவதற்கான ஒத்துழைப்பும் இசைவும் ஏற்படல்.

## *தரவட்டத்தின் பயன்கள்.*




## *தரவட்டத்தின் விசேட இலட்சணங்கள்.*

தரவட்ட முறை ஓர் தொழில் நுட்ப முறையல்ல. புத்தூக்கம் அளிக்கும் மென்பொருள் (Service Pack) ஆகும். மென்பொருளை அடிப்படையாகக் கொண்டு நிறுவனத்தின் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள உதவும். கணனி ஒன்றில் எவ்வாறு மென் பொருளை பயன்படுத்தி எமக்கு வேண்டிய வெளியீடுகளைப் பெறுதல் போன்று தரவட்ட மென்பொருளையும் நிறுவனப் பணியாளர்கள் பயன்படுத்தி பொருத்தமான வெளியீடுகளை உருவாக்கலாம்.

தரவட்ட அமுலாக்கமானது, பணியாளர்களிடையே பதவி வேறுபாடு, தகைமை வேறுபாடுகளிற்கு அப்பாற்பட்டு கூட்டாக அதன் பங்காளிகளால் அர்ப்பணிப்புடன் இயங்குவதற்கான சூழல் தோன்றுவதால் அதன் செயற்பாடு மேலிருந்து கீழாகவும் (Top – Down) கீழிருந்து மேலாகவும் (Bottom – Up) அமையும். எவரிற்கும் கட்டாயப்படல், கட்டாயப்படுத்தப்படல் என்பன அற்ற சுயேச்சை முறையாக அமைவதுடன் உண்மையான ஈடுபாட்டுடனான பங்கேற்றல் ஏற்படுகிறது. நிறுவனமானது தன் பிரச்சினைகளை தீர்ப்பதுடன் வேலையின் தரமும் வேலையின் ஆற்றுகையளவிலும் அதிகரிப்பை ஏற்படுத்துவதற்கு உதவும் முறையியலாக இனங்காண்பதால் நிஉர்வாகத்தின் ஆதரவைப் பெற்றுக் கொள்கிறது.

## *தரவட்டத்தின் அடிப்படைக்கொள்கைகள்.*

**1. மனிதவள உருவாக்கம் :-**

வளர வேண்டிய ஒரு நாட்டிற்கு மனிதவளத்தின் ஆற்றுகைகளை மேம்படுத்துதல் மிகவும் முக்கியமான ஒரு கொள்கையாகும். ஒவ்வொரு பணியாளரிடமும் ஏதோ ஒருவகையான திறன்களும் ஆற்றுகைகளும் விசேடமாகக் காணப்படும். அதனை இனங்கண்டு ஊக்கமும், பயிற்சியும், சந்தர்ப்பங்களும் அளித்து மேலும் விருத்தி செய்வதனூடாக அவரின் உண்மையான பங்களிப்பை அஉத்தமுள்ளதாக்க முடியும். இவ்வகையில் கல்வி சார் நிறுவனத்தை (பாடசாலை) கருத்திற்கெடுப்பின் அங்கு பணிபுரியும் அனைத்து பணியாளர்களிடமும் இவற்றை அடையும் வகையில் நேர் மனப்பாங்கினை விருத்தி செய்வதாக தரவட்டச் செயற்பாடுகள் அமைய வேண்டும்.

**2. குழு மனப்பான்மை :-**

சகலரும் பங்கு பற்றுவதற்கான சந்தர்ப்பம் வழங்கப்படுவதனூடு, தீர்மானமெடுப்பதில் சகலரதும் பங்கு பெறப்படுவதனால் நிறுவனத்தின் வெற்றிக்கு ஏற்றுக் கொள்ளக்கூடிய நடைமுறைகளை உருவாக்க முடியும். எனது என்ற மனப்பாங்கில் மாற்றம் ஏற்பட்டு எமது செயற்பாடுகள் என்ற வகையில் மனப்பாங்கு மாற்றம் ஏற்படுவதாக அமையும்.

**3. குறை கூறாப் பண்பு :-**

பிரச்சினை எழுமிடத்து அது தொடர்பாக ஊழியர் அனைவரும் ஒன்று கூடித் தீர்மானம் எடுப்பதனால் எவரும் எவர்மீது குறைகூறாது தம்மைத்தாமே திருத்திக் கொள்ளும் வாய்ப்புக் கிடைத்தல். பொதுவாக பிரச்சினைகள் எழு முன்னரே இனங்காணக் கூடியதான வெளிப்படைத் தன்மைகள் தோற்றுவிக்கப்படுகிறது.

**4. தன்னார்வம் :-**

எமது என்ற எண்ணக்கரு விருத்தி காரணமாகத் தன்னார்வம் மேலோங்கியிருக்கும். இதனால் தரவட்டம் நன்கு இயங்க எந்த எதிர்ப்பும் இல்லாமல் மனமுவந்து முன்வருவர். கட்டுப்படல், கட்டாயப்படுத்தல் என்பன இங்கில்லை. ஆலோசனைகள் முன் வைக்கப்பட்டு கலந்துரையாடப்படும் ஆரோக்கிய நிலைமை தோற்றுவிக்கப்படும்.

**5. கீழிருந்து மேலே :-**

பணியாளர்களே தங்களுக்கு ஏற்படும் சிக்கல்களை தரவட்டம் மூலம் கண்டு பிடித்து ஆராய்ந்து தீர்த்து, செயற்படுத்திப் பயன் கண்டு அதை மேலிடத்திற்கு எடுத்துரைப்பார்கள். வழமையான நிர்வாக முறைமையிலிருந்து வேறுபடுவதாக அமையும். ஜனநாயகப் பண்பு வளஉச்சியுறும்.

## தரவட்டம் அமைத்தல்.

பாடசாலைகளில் தரவட்டங்கள் பல உருவாக்கப்படலாம். பாடசாலையில் பல்வேறு பிரச்சினைகள் கலவையாகக் காணப்படும். எனினும் ஆராய்ந்து பார்க்கப்படின் மூலப்பிரச்சினைகள் சிலவாகவே காணப்படும். அதனைத் தீர்ப்பதனூடு பல பிரச்சினைகள் தானாகவே நலிவடைவதனைக் காணலாம். இதற்கென நிறுவனத் தலைவரால் அல்லது பிரச்சினைகளை தீர்ப்பதற்கு முயல்பவர்களால் நிறுவனத்தின் அனுசரணையுடன் ஆரம்ப உசாவுதல் மேற்கொள்ளப்படும். அதனை அடிப்படையாகக் கொண்டு சுருக்கமான பிரச்சினைப் பட்டியல் தயாரிக்கப்படும். அதன் பின்னர் புத்தி தகர்த்தல் செயலமர்வு ஒழுங்கு செய்யப்படும். அங்கு பட்டியல் முன் வைக்கப்பட்டு அவற்றிற்கான 5W + 1H (What, Why, Where, Who, When, & How) முறையின் கீழ் பொருத்தமான தர்க்க அடிப்படையில் ஆலோசனைகளை எழுத்து மூலம் முன் வைக்கச் செய்தலுக்காக தொடர்பான Brain Storming Session nraykHT பயன்படுத்தப்படும். என்ன?, ஏன்?, எங்கே?, யாரால்?, எப்போது?, எப்படி? ஆகிய வினாக்களை ஓர் பிரச்சினை அல்லது செயற்பாடு தொடர்பாக வினாவுவதன் மூலம் தர்க்கரீதியான முடிவை பெறக் கூடியதாக இருக்கும். இதன் போது ஒழுங்கு முறையில் சகலரதும் கருத்துக்களை வாசிக்கச் செய்து தொகுத்து, பிரச்சினை தொடர்பாக கலந்துரையாடி பிரச்சினைப் பட்டியல் தயாரித்தலும், ஏற்கனவே நிறுவனத்தினால் இனங்காணப்பட்ட பிரச்சினைகளையும் ஆராய்ந்து பட்டியலில் சேர்த்துக் கொள்ளப்படும். இதற்காக பொருத்தமான பகுப்பாய்வு முறைகள் தெரிவு செய்யப்படும்.

தொடர்ந்து பிரதான பிரச்சினைகள் இனங்காணப்பட்டு வகைப்படுத்தி தர வட்ட எண்ணிக்கைகளை தீர்மானித்து, அவற்றிற்கான தலைவர், செயலாளர் தெரிவு செய்து அதற்காக 5 – 10 அங்கத்தவர்களும் தெரிவு செய்யப்படுவர். தரவட்டத் திட்டத்துடன் தொடர்புபடுத்தி பெயரிடப்படுகிறது. எல்லாப் பிரச்சினைகளிற்கும் ஒவ்வொரு தரவட்டம் அமைக்க வேண்டிய அவசியம் இல்லை. குறித்த பிரச்சினை தீர்க்கப்படும் நிலையில் பல தொடர்பு பட்ட பிரச்சினைகள் தீர்க்கப்படுவதாக இசிக்காவோ கருதுகிறார். எனவே முதன்மைப் பிரச்சினைகளிற்கே தரவட்டங்கள் அமைக்கப்படுகிறது.

தரவட்டச் செயற்பாடுகள் தலைவரின் கீழ் ஆரம்பிக்கப்பட்டு தொடர்பான தரவுகள் சேகரிக்கப்பட்டு பகுப்பாய்விற்கு உட்படுத்தப்பட்டு அவற்றின் அடிப்படையில் வளங்கள் இனங்காணப்பட்டு நடைமுறைத் திட்டம் வடிவமைக்கப்படும். திட்ட அமுலாக்கத்திற்கான செயலணிக்குழு அமைக்கப்பட்டு காலவரையறையுடனான ஒழுங்குமுறையான திட்டம் இறுதி செய்யப்பட்டு அமுலாக்கப்படும்.

நிறுவனத்தினுள் ஒவ்வொரு பிரச்சினைகளிற்கும் ஒவ்வொரு தரவட்டம் அமைக்கப்படும். அங்கத்தவர்கள் விருப்பிற்கேற்ப ஒன்றுகூடுவர். தமது பிரச்சினைகளுடன் தொடர்பான தரவட்டத்துடன் இயல்பாகவே நிறுவனப்

பணியாளர்கள் இணையும் சுதந்திரத்தைக் கொண்டிருப்பர். தரவட்டத்தில் சகல அங்கத்தவர்களும் அது சம்பந்தமான ஒரு அறிவைப் பெற்றவராக இருத்தல் விரும்பப்படும். அங்கத்துவம் பெறுபவர்கள் யாவரும் சம அந்தஸ்தைக் கொண்டிருப்பர். சகல தரவட்டத்திற்கும் தலைவர், உபதலைவர், செயலாளர் என ஒவ்வொருவர் தெரிவு செய்யப்படுவார்கள். இப்பதவிகள் ஒரு வேலைத்திட்டம் முடிவு பெற்றதன் பின்பு அங்கத்தவரிடையே பரிமாற்றம் செய்யப்படும். தலைவர்கள் தரவட்டத்தில் மேலதிகாரிகள் என்ற சுயரூபத்திலிருந்து விலகி நிற்பர்.

தரவட்ட செயற்பாடுகளுக்கு உதவுவதற்காக நிறுவன முகாமையாளரினால் தரவட்ட உதவியாளர் அல்லது இணைப்பாளர் ஒருவர் நியமிக்கப்படுவார். அவர் பணி – ஆலோசனை வழங்குபவரேயன்றி மத்தியஸ்தர் அல்ல. தாபனத்தில் மேலதிகாரியாகவும், தரவட்டத்திற்கு உதவுபவராகவும், செயற்குழுவைக் கூட்டுபவராகவும், தாபனத்தில் மற்றைய தரவட்டங்களில் பெறும் தகவல்களை ஏனைய அங்கத்தவர்களிற்கு அறியத்தருபவருமாவர். ஒவ்வொரு பிரிவிலும் தரவட்ட வேலை சம்பந்தமாகப் பிரிவுத் தலைவர் செயற்படுவார். வெளிவாரி ஆலோசகர் ஒருவரையும் ஆலோசனை நிமித்தம் சம்பந்தப்படுத்தலாம்.

நிறுவனத்தின் குறுகிய கால, நீண்ட காலப் பிரச்சினைகள் தீர்ப்பதற்குரிய சிறந்த களச் செயற்பாடாக தரவட்டங்கள் அமைகின்றன. பிரச்சினைகளிற்கு தீர்வுகள் முன்வைக்கப்பட்டு அமுலாக்கிய போது அது இன்னுமோர் வடிவத்தில் முன்னிருந்த மூல காரணத்துடன் வடிவம் வேறுபட்டு உருவாகலாம். இது தற்காலிக நிலையில் பிரச்சினை தீர்ந்தது என்ற தோற்றப்பாட்டை உருவாக்கலாம். ஆகவே, பிரச்சினையின் உண்மை வடிவத்தினை ஆராய்ந்து இனங்காண்பதன் மூலமே அதனைத் தீர்ப்பதற்கான சிறந்த உபாயத்தை இனங்காண முடியும். இதனூடு நிரந்தர தீர்வினை நோக்கி நகர முடியும். இதனை அடியொற்றி பல பகுப்பாய்வு முறைகள் தரவட்டச் செயற்பாடுகளில் நடைமுறைப்படுத்தப்படுகிறது. அவற்றில் சிலவற்றை இங்கு ஆராயலாம்.

## பகுப்பாய்வு முறைகள்.

1.புத்தி தகர்த்தல் Brain Storming
2.SWOT பகுப்பாய்வு
3.சரிபார்க்கும் தாள்
4.பெரடோ வரைபடம்
5.காரணகாரிய வரைபடம்
6.சிதறல் வரைபடம்
7.பட்டை வரைபடம்
8.இயல்கட்ட வரைபடம்
9.கண்காணிப்பு வரைபடம்

## புத்தி தகர்த்தல். Brain Storming.

நிறுவனக் குழுவிலுள்ள அனைவரும் சுதந்திரமாக கருத்துக்களை முன்வைத்து தமக்கிடையே ஒருமித்த கருத்துக்களை உருவாக்கும் ஒற்றுமையும் ஐக்கியமும் கொண்ட கூட்டு முயற்சியாக புத்தி தகர்த்தல் செயற்பாடு அமையும். ஒவ்வொருவருடைய கருத்துக்களும் கவனத்திற்கு எடுக்கப்படும். தீர்வுகள் பிரச்சினைகளுடன் தொடர்புபட்டவர் களிடமிருந்தே முன்வைக்கும் நுட்பம் இங்கு வெளிப்படுகிறது. அதனை தீர்ப்பதற்காக ஒன்றிணைந்து செயற்படுத்துபவர்களும் அவர்களாகவே அமைவர்.

நிறுவனத்தின் பிரச்சினைகள் தொடர்பாக முன்னோடி ஆய்வினூடாக பிரச்சினை முதன்மைப் பட்டியல் தயாரித்து பணியாளர்களிடம் முன் வைக்கப்படும். போதியளவான கால அவகாசம் வழங்கி பிரச்சினைகள் தொடர்பாக ஒவ்வொரு அங்கத்தவர்களும் தமது கருத்துக்களை தர்க்க ரீதியாக 5W + H வினாக்களை மனதில் எழுப்பி அதற்கான ஆலோசனைகளையும், கருத்துக்களையும், திட்டங்களையும் எழுத்து மூலம் குழுவிற்குச் சமர்ப்பிப்பர். இதன் பிற்பாடு புத்தி தகர்த்தல் கூட்டம் ஒழுங்கு செய்யப்படும்.

அங்கு குழு இணைப்பாளர் சகலரதும் கருத்துக்களை முன்வைக்கத் தூண்டி குறிப்பெடுப்பார். முன்வைக்கப்படும் கருத்துக்கள் விமர்சனத்திற்கு உள்ளாக்கப்படமாட்டாது. முதல் சுற்று வட்டத்தில் சகலரதும் கருத்துக்கள் எல்லோர் முன்னும் முன்வைத்து பொதுக்கருத்துக்களை வெளிக்கொணர்ந்து பிரச்சினையின் முக்கியத்துவத்தினடிப்படையில் ஒழுங்குபடுத்தப்படும். இவ்வாறு கோரப்பட்ட அல்லது இனங்காணப்பட்ட பிரச்சினைகள் தொடர்பாக தனித்தனியாக இச்செயல் முறை பின்பற்றப்படும். இரண்டாம் அமர்வில் அங்கத்தவர்கள் முன் ஆயத்தத்துடன் கலந்துரையாடுவர். காரண காரிய வரைபடத்தில் பிரயோகிப்பதனால் உண்மைக் காரணத்தைக் கண்டறிவதுடன் தீர்விற்காக மேற்கொள்ள வேண்டியன பற்றியும் அறியக் கூடியதாக அமையும். பொருத்தமான தீர்வுப் பொதியை உருவாக்குவர்.

**குழுவாகச் செயற்படல் திறன்கள்.**

குழுவாகச் செயற்படும் போது பின்வரும் திறன்களில் அங்கத்தவர்கள் தேர்ச்சியும் பயிற்சியும் பெறுதல் அவசியமானது. குழுவாகத் தொழிற்படல் ஓர் சமூகத் திறனாக அமைகிறது. இதன் மூலம் வெற்றிகரமான குழு விளைவுகளை அனுபவிக்கலாம். புத்தி தகர்த்தல் செயல் முறையில் இத்திறன் வேண்டப்படுகிறது.

1. **கேட்டல்** : ஏனைய அங்கத்தவர்களது ஆலோசனைகளை / கருத்துக்களைக் கேட்டல். எப்போதும் இயல்பாக அவர்கள் பேசுவதற்கான சூழலை வழங்க வேண்டும்.

2. **கலந்துரையாடல்** : உங்கள் கருத்துக்களையும் முன்வைத்து குழுக்கருத்துக்களையும் ஏற்றுக் கொள்ளல். கலந்துரையாடல் மூலம் படிப்படியாக பொதுக்கருத்திற்கு வருதல்.

3. **வினாவுதல்** : நோக்கத்தை மையமாகக் கொண்டு நேரடியான மறைமுகமான வினாக்களை முன் வைத்து குழுவுடன் கலந்துரையாடல்.

4. **நம்பகம்** : தனிப்பட்ட வகையில் ஊக்குவித்து தனது கருத்திலிருந்து நிலை மாறுவதற்கும் அல்லது வலியுறுத்துவதற்கும் மீள் சிந்தனையை உருவாக்கும் வகையில் நம்பகத்தை ஏற்படுத்தல்.

**5. கௌரவம்** : கருத்துக்களிற்கு கௌரவமும் ஆதரவும் வழங்கி அவரைக் கண்ணியப்படுத்தல் மிக முக்கியமானது.


**6. உதவுதல்** : இக்கட்டான சந்தர்ப்பங்களில் இணைந்து செயற்படல், பொது நோக்கை அடையும் வகையிலான உதவிகள் வழங்கல்.

**7. பங்கேற்றல்** : குழு செயற்பாடுகளிற்கான உத்தமமான சூழலை உருவாக்கப் பங்கேற்றல். ஒவ்வொரு அங்கத்தவரையும் ஊக்குவித்தல்.

**8. தொடர்பாடல்** : குழு விளைதினுடன் செயற்பட அங்கத்தவர்களிடையே சிறப்பான தொடர்பாடல் வழிகள் ஏற்படுத்தப்படல் வேண்டும். நேரடித் தொடர்பாடல்கள் சிறப்பானது. உதாரணம்: குழக் கூட்டங்கள், தொலைபேசி, தொலை நகல்.. போன்றன.

## காரண காரிய வரிப்படம். Cause Effect Diagram.

Kaoru Ishikawa வினால் உருவாக்கப்பட்டது. – ISHIKAWA Diagram / Fish Diagram எனவும் குறிப்பிடப்படும். பிரச்சினைகளை அல்லது பிழையான விளைவுகளை அல்லது முன்னேற்ற விளைவுகளை அறியப் பயன்படுத்தலாம். ஒரு விளைவிற்குப் பல காரணங்கள் இருக்கலாம் என்பதனை இனங்கண்டு அவற்றின் தொடர்புகளைப் பகுப்பாய்வு செய்யக் கூடியதாக உள்ளது. காரணங்களை அறிய புத்தி தகர்த்தல் அமர்வு போதிய பங்களிப்பை நல்குகிறது. விளைவை ஆராய்வதற்கு மட்டுமன்றி தீர்வுகளை காண்பதற்குப் பயன்படுத்தப்படும் போது அது Solution – Effect வரிப்படம் என அழைக்கப்படுகிறது.



மீன் முள்ளுப் போன்ற வடிவத்தைக் கொண்டது. பிரதான அச்சு பகுதிக்காரணங்களினைப் பிரதிநிதித்துவப் படுத்தும். முற்பகுதி காரணங்களையும், பிற்பகுதி விளைவையும் காட்டும். அதாவது பிரச்சினையை வலது பக்கத்தில் வைத்துக் கொண்டு புத்தி தகர்த்தல் மூலம் காரணங்களை ஆராய்வதால் காரண காரிய வரைபடம் உருவாக்கப்படுகிறது. கிளைகள் உப காரணங்களாக அமையும். உப கிளைகள் உபகாரணத்திற்கான காரணங்களாக அமையும். எனவே ஒரு பிரச்சினைக்கு பல காரணிகள் பங்களிப்புச் செய்வதனை உணரக் கூடியதாக இருக்கும். இதனை வைத்தே அப்பிரச்சினையைக் களைவதற்கான செயற்றிட்டம் தயாரிக்கையில் உப காரணங்களை / செல்வாக்குச் செலுத்தும் காரணங்களிற்கு நடுநிலைப் படுத்தும் செயல் கூறுகள் தயாரித்து அமுலாக்குவதால் பிரதான பிரச்சினைக்குத் தீர்வு எட்டப்படும். படத்தில் மாதிரி காரண காரிய வரைபடம் முன்வைக்கப்பட்டுள்ளது.


எனவே பாடசாலைகளில் தரமான கற்றலை மேம்படுத்தவும், முகாமைத்துவ திறன்களை விரிவுபடுத்துவதற்கும் தரமான செயற்பாடுகள் அவசியமாகின்றன. செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகையில் பிரச்சினைகள் எழுவது சகஜமானது. அவற்றை தனியாகவோ ஒருசிலராலோ தீர்வு செய்வதில் இடர்பாடுகள் உள்ளன. அது விளைதிறனைக் கொண்டதாக அமைவதில் வினாக்கள் எழுகின்றன. நிறுவனத்தின் செயற்பாடுகளை வினைத்திறனாக்குவதற்காக வழங்கப்பட்டுள்ள மென்பொருட்களை சிறப்பாகப் பயன்படுத்தி இலக்கை அடைதலை இலகுவாக்க முனைவோம். குழுக்களாக இணைந்து ஆராய்ந்து தீர்வுகளை எட்டும் மென்பொருளான தரவட்டத்தினைச் சிறப்பாகப் பிரயோகிப்பதில் கல்விப் புலம் முன்வரவேண்டும்.

**வே. திருச்சபேசன்** (Med),
ஆசிரிய நிலைய முகாமையாளர்,
தீவகக் கல்வி வலயம்,
வேலணை.

உசாத்துணை:

1. மனித விருத்திக்கான கல்வி பற்றிய நோக்கு., இலங்கையின் பொதுக்கல்வி பற்றிய தேசிய கொள்கைகள், தேசிய கல்வி ஆணைக்குழு, இலங்கை., மார்கழி 2003.
2. பாடசாலைக் கல்விச் செயற்பாட்டில் பண்புசார் விருத்தி, முகாமைத்துவ தர உறுதிப்பாட்டு அலகு, கல்வி அமைச்சு, இலங்கை., 2005, 2006.
3. http://www.en.qc.wiki.org/education#tqm
4. http://www.en.glossary of education/qc

## Cause Effect Diagram



# சுதுமலையில்
# புராண படனம்

# சுதுமலையில் புராண படனம்

இறைவன் சந்நிதி இறைவன் புகழே இயம்புதற்குரிய இடமாகும். எந்த நிகழ்ச்சியும் இறைவனைப் பாராமுகஞ் செய்தற்குபகாரமாயிருத்தலாகாது சிந்தனை, வாக்கு, செயல் மூன்றும் இறைவனடியில் சென்று குவிதற்குரிய இடமே சந்நிதி.

இறைசந்நிதியில் மல பந்தான மனிதன் ஒருவன் தலைமை வகிப்பதும், ஒருவரை ஒருவர் புகழ்ந்து சொற்பொழிவு நிகழ்த்துவதும் சந்நிதி விரோதமாம் புராண படனங்கூட வடக்கே இறைவன் சந்நிதியில் நடப்பதில்லை. அங்கே வித்தியா மண்டபம் புறம்பாய் உண்டு. நமது நாட்டில் உள்ள சிறிய கோயில்களில் புறம்பாய் மண்டபம் இன்மையால் இறை சந்நிதியிலேயே சந்நிதி விரோதம் நிகழாத முறையிற் புராண படனம் நடந்து வருகின்றது. ஒருவர் தலைமை வகித்து இன்னார் வாசிப்பார். இன்னார் பயன் சொல்லுவார் என்று சொல்லுவதில்லை. சொல்லாமலே காரியம் நடக்கும். அசுரன் ஒருவ்ன் சுவாமியை இழிந்துரைக்கும் பகுதியை படிக்கும் போது அவன் அறியாமைக்கிரங்கிச் சுவாமியின் பெருமையில் விம்மிதம் கொள்ளும் முறையிலேயே புராண படனம் நடக்கும்.

சந்நிதி விரோதமின்றி, ஒருவர் வாசிக்க மற்றொருவர் பயன் சொல்லுகின்ற இந்த முறை யாழ்ப்பாணத்திற்கே உரியதொரு சிறப்பு முறை இதன் வழியாக யாழ்ப்பாணத்துச் சுதுமலைக் கிராமத்திலும் நடைபெற்று வருகின்றது. உரிய ஒழுங்கு முறையில் குறிப்பாக "காலத்துக்கும் விஷய குணபாவத்திற்கும் ஏற்ப எச் சுதியில் எவ் இராகத்தில் வாசிக்கப்படுகின்றதோ அச்சுதியில் அவ்விராகத்தினாலே பொருள் சொல்ல வேண்டும்" என்பது நாவலர் எழுதிய சிவபுராண படன விதி இவ்விதியை மனதிற் கொண்டு செயற்படும் பெரியார்கள் ஊரில் வாழ்ந்திருக்கின்றார்கள், வாழ்கின்றார்கள்.

புராண படனம் தனித்தொரு முறையில் யௌவன தசையை அடைந்து, உச்ச நிலையில் விளக்கமுற செய்தவர் ஆறுமுக நாவலர். இவ்வாறாக புராண படனம் இவ்வாறுதான் நடைபெற வேண்டும் என்ற ஒரு ஒழுங்கு முறையில் வளர்த்தெடுத்த பெரியோர்களின் வரலாற்றுக் குறிப்புக்களையும், அவர் தம் சமய, சமூக பணிகளையும் குறிப்பாக புராண படனத்தை எவ்வகையில் நடாத்தி முடிப்பார்கள் என்பதையும் இவ்அத்தியாயத்தில் விளம்ப முயற்சிக்கின்றேன்.

எம்மூரில் குறிப்பாக சுதுமலை ஸ்ரீபுவனேஸ்வரி அம்மன் ஆலயத்தில் தற்பொழுதும் புராண படனம் நடைபெற்று வருகின்றது. அவ் ஆலயத்தின்கண் புராண படனம் நிகழ்த்திய அன்பர்கள் பற்றியதாக அமைகின்றது.

எம் சுதுமலைத் திருவூர் தனிலே புராண படனத்தினை வழிவழியாக வழிப்படுத்தி இளைய தலைமுறைக்கு வழங்கிச் சென்ற வழங்கி வருகின்ற எம்மூர்ப் பெரியார்கள் வரிசையிலே சிவசிறி. தி. பொன்னுச்சாமிக்குருக்கள், பண்டிதர் சி. துரை, பெரியார் சின்னப்பு. பெரியார் பெரியதம்பி உபாத்தியாயர், க.கணபதிப்பிள்ளை, தி.கணபதிப்பிள்ளை, க. பேரம்பலம் உபாத்தியாயர், க.

நடேசர், புராணபடன வித்தகர் செ. கந்தையா, பொன்னம்பலம் உபாத்தியாயர், போன்றவர்களும் அதன்வழி நின்று தற்பொழுது திரு.வாமசிவம் உபாத்தியாயர், திரு.சிவகுருநாதன், திரு.சண்முகலிங்கம், போன்றோர் எனது பார்வையில் இனம் காணப்பட்டார்கள். இதற்கான மூல ஆதாரங்கள் என்று பார்க்கும் போது அமரர்களாகிவிட்ட பெரியோர்களின் நினைவு மலர்கள் மற்றும் திரு.க.கணபதிப்பிள்ளை(96வயது) அவர்கள் அம்பாள் ஆலய குருக்களின் பாரியார் (சிவ ஸ்ரீமகேஸ்வரக்குருக்கள்) போன்ற பெரியவர்களுடன் உரையாடிப் பெற்ற தகவல்கள் மூலம் அறியக் கிடக்கின்றது. இவர்களுக்குப் முன்பு புராண படனம் நிகழ்த்தியவர்கள் பற்றிய செய்தி எனது கைக்கெட்டவில்லை. அவ்வாறு இருந்தால் அடுத்து வரும் இதழ்களில் வெளியிட ஆர்வமாக உள்ளோம்.

அவ்வகையில் சிவஸ்ரீ பொன்னுச்சாமி குருக்கள், பண்டிதர் சி. துரை, இளைப்பாறிய அதிபர் செல்லையா கந்தையா, உயர்திரு பெரியதம்பி உபாத்தியாயர் ஆகியோர் புராண படனத்தில் முக்கிய பங்காற்றியவர்கள். பாடலுருக்கு உரிய ஓசை நயன்களுடன் பயன் சொல்வதில் வல்லவர்கள். இறை பக்தியுடனும் பாடலின் இசைபுக்கு பாடலைத் தம்முள் வாங்கி உள் நின்று பக்திச் சுவை கொண்ட தமது இனிய இசைகலந்த பாணியில் புராண படனத்தை நிகழ்த்திச் செல்வதைக் கண்டு அடியவர்கள் கண்டு புழகாங்கிதம் அடைந்த சந்தர்ப்பங்களைக் கண்டு மகிழ்ந்திருக்கின்றோம். பிறர்கூற கேட்டிருக்கின்றோம். இங்கு இவ்வாறு பாட்டுக்குப் பயன்கூறி பணிசெய்தவர்கள் பற்றியும், பாடலை இசையுடன் பாடியவர்கள் பற்றியும் அவர்களுடைய சமய சமூக பணிகளுடன் வாழ்க்கைக் குறிப்புக்களையும் இங்கு எடுத்து இயம்புவதில் பெரு மகிழ்வடைகின்றேன்.

## (01) சிவஸ்ரீ பொன்னுச்சாமி குருக்கள்

அந்தணர்களின் பெருமைக்கு பெரும் பேறாகத் திகழ்ந்தவர் சிவஸ்ரீ பொன்னுச்சாமி குருக்கள் அவர்கள். தொல்புரம் என்ற சங்கானை பிரதேச செயலர் பிரிவில் பிறந்து வளர்ந்தவர். இவர் சிறந்த குருக்களாக விளங்கியவர். அவர் சுதுமலைக் கிராமத்தில் தனது வாழ்க்கையை அமைத்து அம்மன் ஆலயக் குருவாகத் திகழ்ந்தவர். ஆலய வளர்ச்சியில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். ஆலயம் பெரும் கோயிலாக அமைவதற்கு தனது இறை வழிபாட்டின் மூலம் இறை நம்பிக்கையை கிராம மக்களுக்கு ஊட்டி வளம் சேர்த்தவர்.

அவருடைய காலத்திலேயே ஆலயத்தில் புராண படனத்தை சிறப்பாக நிகழ்த்த காரணமாய் இருந்தவர். இவர் பாடலைப் பாடுவதிலும் பொருள்(பயன்) சொல்வதிலும் வல்லவராகத் திகழ்ந்தார் என்று எனது தந்தையார் எனக்குக் கூறியதுண்டு. தான் பாடுவது மட்டுமல்ல தன்னோடு இணைந்தவர்களுக்கும் ஆர்வத்தை ஊட்டி புராண படனத்தை ஆலயத்திலேயே நீடு காலம் தொடர்ந்து இயன்றவரை நிலைக்க வழி சமைத்தவர் இவர் என்றால் மிகையில்லை. இவர் தனது ஆற்றலால் தனது சீடரான செ.கந்தையா அவர்களை பயன் சொல்லும் வல்லவர் ஆக்கினார்.

# (02) அமரர் பெரியதம்பி உபாத்தியாயர்

சுதுமலையைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் தெய்வ பக்தி மிக்கவர். இவர் சிறந்த தமிழ், இந்துசமய ஆசானாகத் திகழ்ந்தார். ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணியம் வித்தியாலயத்தில் நீண்ட காலம் கற்பித்து ஓய்வு பெற்றவர். புராண படனம் நடைபெறுகின்ற ஆலயங்களில் குறிப்பாக ஸ்ரீபுவனேஸ்வரி அம்மன் ஆலயம், ஆனைக் கோட்டை மூத்த விநாயகர் ஆலயம் ஆகியவற்றில் சிறப்பான முறையில் பயன் சொல்வதை அவர்களது உறவினர்கள்,நணயர்களிடம் கேட்டு அறிந்து கொண்டேன். கந்தபுராணம் திருவாதவூரடிகள் புராணம் எனப் புராணங்களுக்கு சிறந்த முறையில் இசையுடன் பயன் சொல்லும் வல்லவர். இவர் பற்றி வே. தம்பாப்பிள்ளை (இளைப்பாறிய பிரதி அதிபர் மானிப்பாய் இந்துக் கல்லூரி) அவர்கள் தனது அன்பு மிக்க உறவினர்கள் என்றும் நிறைவான புராண விடயங்களில் எந்த விளக்கத்தையும் அளிக்க வல்லவர் என்றும் குறிப்பிட்டார். இவர் பற்றிய நினைவுப் பதிவுகள் கிடைக்கப் பெறும்பட்சத்தில் முழுமையான வரலாற்றுக் குறிப்புக்களை இனிவரும் எமது இதழில் சேர்ப்போம்.


# (03) அமரர் தினகர் கணபதிப்பிள்ளை

தினகர் கணபதிப்பிள்ளை அவர்கள் சமயப்பற்று மிக்க பெரியார் அம்பாள் மீது மிகுந்த பக்தி கொண்டவர். அம்பாள் ஆலயத்தில் வருடம் தோறும் நடைபெறும் புராண படன நிகழ்வை சிறப்பாக பக்தியுடன் நடாத்த துணையாக இருந்தார். புராண படனத்தில் இசையுடன் பாடி எல்லோர் மனங்களையும் கவர்ந்தவர். இவர் புராண படன நிகழ்வில் பங்கு கொள்வது பற்றிய குறிப்பை அமரர் க.நடேசர் அவர்களின் நினைவு மலர் மூலமும் நேயர்களின் மூலமும் அறியக் கிடைத்தது.

## (04) பண்டிதர் சி. துரை

பண்டிதர் சி.துரை அவர்கள் சுதுமலைப்பதியில் பிறந்தார். சுருட்டுத் தொழில் செய்பவராகத் திகழ்ந்தார். இவர் சுண்ணாகத்தைச் சேர்ந்த பண்டிதரிடம் கற்றுத் தேர்ந்தவர் என்றும் புராண படனத்துக்கு முக்கிய பங்காற்றியவர் என்றும் குறிப்பிட்டுக்கூறுவர். பயன் சொல்வதில் சிறந்த பங்காற்றியவர். பயன் சொல்வதில் வல்லவர் என்றும் அவர் தனக்கென்று தனியிடம் வகித்தவர் என்றும் திரு.க.கணபதிப்பிள்ளை ஐயா அவர்கள் என்னுடன் உரையாடும் போது கூறினார்கள். இவர் மேலும் கூறும்போது பயன் சொல்வதற்கு வந்து அமர்ந்தால் பாடல் பாடி முடித்தவுடன் தனது பயன் சொல்லும் நேரத்தைப் பயன்படுத்தி சாதாரண மக்களுக்கும் ஏனையோருக்கும் விளங்கும் வகையில் இசையுடன் கூறுவார் என்றும் அந்த அளவு இசையுடன் இரசனையாகப் பாட இப்பொழுது யாருள்ளார் என்று மன வேதனையோடு திரு. க. கணபதிப்பிள்ளை அவர்கள் பண்டிதரின் பெருமையைக் கூறிச் சென்றார்.

*க. ஸ்ரீநந்தகோபன்*



# (05) செல்லையா கந்தையா

இயற்கை எழில் நிறைந்த மருத நிலச் சூழல் அமைந்த சுதுமலை என்னும் சிறிய கிராமத்தில் செல்லையா செல்லாச்சி தம்பதியரின் மூத்த புதல்வராய் பிறந்த அமரர் கந்தையா அவர்களின் வாழ்வியல் சைவத்தமிழ் பண்பாட்டு மரபின் நீட்சியாய் அனைவருக்கும் சரியான திசையைக் காட்டும் முன்னுதாரணமாய் அமைந்துள்ளமை அனைவராலும் மனங் கொள்ளத்தக்க விடயமாகும்.

ஆன்மா லயிக்கும் இடமான ஆலயத்தில் இசையோடு இணைந்து தமிழ்ச்சுவை உணர்ந்து உயரிய பொருள் பரவும் புராண படனத்தை தான் வாழும் நாள்வரை தன்னுயிராய் வரித்துக் கொண்டு பயன்தந்த பெருமை கந்தையா ஆசிரியர் அவர்களையே சாரும். அறிவு ஒளி பாய்ச்சும் அரும்பணியில் இணைந்து தான்வாழ்ந்த சமூகத்தின் உயர்வுக்காய் உழைத்து அமரர் கந்தையா அவர்கள் தனது சிறு வயதிலேயே அன்றைய சுதுமலை அம்மன் கோயில் பொன்னுச்சாமி குருக்களிடம் புராண படனம் ஓதிப் பொருள் கூறும் நெறி முறையை பயின்று பின்னர் அதனை சுதுமலை அம்மன், மானிப்பாய் மருதடி விநாயகர், இணுவில் பரராஜசேகரப்பிள்ளையார், இணுவில் கந்தசாமி கோவில், தாவடிப்பிள்ளையார், ஈஞ்சடி வைரவர் கோயில் போன்ற ஆலயங்களில் சிறப்புற வெளிப்படுத்தி வந்துள்ளார்.

சுதுமலை ஈஞ்சடி வைரவர் ஆலய திருப்பணிச் சபை தலைவராக பொறுப்பு வகித்து 1978இல் கோயில் கும்பாபிஷேக நிகழ்வு சிறப்புற அமைய அர்ப்பணிப்புடன் உழைத்த அமரர் கந்தையா அவர்கள் ஆசிரியராக, தொழிற்சங்க தலைவராக சமூகப் பணிகளை முன்னின்று மேற்கொண்ட போதும் சமயப்பணியிலே அவருக்கு தனித்துவமான இடத்தினை அளித்துள்ளது.

புலமையாளரும் சமய சீலருமான ஆசிரியர் அவர்கள் அருகிவரும் புராண படன முறைக்கு புத்துயிர்ப்பு அளிக்க வேண்டும் என்ற அவாவில் சிறுவர்களைக் கவரும் வகையில் தனது ஆசிரிய வாண்மையை இணைத்து இலகு தமிழில் புராண படனத்தை மேற்கொண்டு வந்தார். விழிமியக் கல்வியின் அவசியத்தை அன்றே நன்குணர்ந்து ஆலயங்களை மையப்படுத்தி நற் கருத்துக்களை விதைத்த அன்னாரின் பணி சாலப்பெரியது.

முன்மாதிரியான ஆசிரியராய் திகழ்ந்து பல்துறைசார் புலமையாளராய் தன் பணிகளை சமூக நிலை நின்று செயற்படுத்தியவர் கந்தையா உபாத்தியாயர் எனின் அது மிகையாகாது.

உறவுகள் விரிய நெடு மரமாக
நிழல் தரும் ஒருவனாய் நின்றாய்!
நிறைவுற வாழ்ந்த பெருமான்-உனது
நினைவுகள் நம் நெஞ்சினில் கமழும்

எனக் கவிஞர் சோ.ப அவர்கள் ஆசிரியரின் நினைவுகள் குறித்து வெளிப்படுத்திய வரிகள் கந்தையா அவர்களின் ஆளுமை திறனை ஒருங்கே சுற்றி நிற்கின்றன. வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து சமயியாகத் திகழ்ந்த அமரர் கந்தையா அவர்களின் வாழ்க்கைப் பாதை அனைவருக்கும் சிறந்த முன்னுதாரணமாகும்.

ந. குகபரன் (ஆசிரியர்)
யா/சண்டிலிப்பாய்.இ.க

## (06) உயர் திரு. கந்தையா கணபதிப்பிள்ளை


சுதுமலையைப் பிறப்பிடமாகக் கொண்ட கணபதிப்பிள்ளை அவர்கள் சிறந்த முறையில் கற்றார்கள் மானிப்பாய் நகரில் புத்தகக் கடை ஒன்று நடத்தி வந்தார்கள். அவ்வேளை அடியார்களுக்கு தாக சாந்தி நிலையம் அமைத்து தாகம் தீர்த்து வரும்பெரியார் ஒவ்வொரு ஆண்டும் மானிப்பாய் ஆலடிச் சந்தியில் மருதடி விநாயகர் ஆலய உற்சவ காலங்களில் தாகசாந்தி நிலையம் அமைத்து தாகம் தீர்க்கும் இப் பெரியார்க்கு தற்போது 96 வயது. இவர் எல்லோருடனும் அன்பாகப் பழகுவார். தவறாக நடந்தால் அதனை உடனடியாக சுட்டிக் காட்டி திருத்தியும் விடுவார். இறை பக்தி மிக்க அன்பர் சுதுமலை ஸ்ரீபுவனேஸ்வரி அம்பாள் ஆலயத்தில் நடைபெறும் புராணபடன நிகழ்ச்சியில் சிறந்த முறையில் இசையுடன் வாசிக்கும் தன்மை பொருந்தியவர். இவர்தம் பணி மேலும் பெருக இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

க.ஸ்ரீநந்தகோபன்

## (07) அமரர் தி.க பேரம்பலம் உபாத்தியாயர்

அமரர் திரு.கணபதிப்பிள்ளை அவர்கள் சுதுமலை ஸ்ரீபுவனேஸ்வரி அம்பாள் ஆலயத்தில் புராபடனத்தை எவ்வாறு நிகழ்த்தினாரோ அவ்வழியே திகழ்ந்தார். அமரர் க.பேரம்பலம் அவர்கள் 11.10.1908 ஆம் ஆண்டு இம் மண்ணில் பிறந்தார். அவர்தனது ஆரம்பக் கல்வியை சுதுமலை தமிழ் பள்ளிக்கூடத்தில் தமிழில் கற்று தொடர்ந்து மானிப்பாய் இந்துக் கல்லூரியில் ஆங்கிலம் கற்றார். இவர் ஆசிரியராகப் பணி புரிந்தார். சுதுமலை ஸ்ரீபுவனேஸ்வரி அம்பாள் ஆலயத்தின் வரலாற்றுக்கும் இவர்களின் பரம்பரைக்கும் தொடர்பு இருப்பதாக அவாது நினைவு மலரில் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ் ஆலயத்தில் பரிபாலன சபையின் மூத்த உறுப்பினராக இருந்து செயற்பட்டு வந்தார். ஆலயப் புராண படன நிகழ்வை ஒழுங்காக நடத்துவதில் ஆர்வமுடையவராக இருந்தார். கந்தபுராணம்,. திருவாதவூரடிகள் புராணம் போன்றவற்றை வருடாவருடம் சிறப்பாக நடத்துவதற்கு உறுதுணையாக இருந்தார். இந் நிகழ்வுகளில் தாமும் பாடல்பாடி பக்தி செலுத்தி 14.08.2000 அன்று இவ்வுலக வாழ்வை விட்டு நீத்தார்.

## (08) தினகர் கணபதிப்பிள்ளை நடேசர்



அன்பும் அறனும் உடையோராய், ஆன்ற குடிப்பிறந்து பண்பும் பயனுமுடையோராய் வாழ்ந்தவர் அமரர் க. நடேசர் அவர்கள்.

"அன்புக்கும் உண்டோ அடைக்கும்தாழ் ஆர்வலர் புன்கணீர் பூசல் தரும்" என்பது வள்ளுவர் வாக்கு. அன்புடைத்து கண்ணீர் சொட்டச் சொட்ட இறை பணிகள் பல செய்தவர். கந்தபுராண படனத்தில் பலமுறை கண்டுள்ளேன், "தந்தை யெவ்வழி மைந்தனவ்வழி" என்பார்கள், தந்தையார் கணபதிப்பிள்ளை அவர்கள் சுதுமலை ஸ்ரீபுவனேஸ்வரி அம்பாள் ஆலயத்தில் பல்லாண்டு காலம் "கந்தபுராண படனம்" செய்துவந்தவர். அவரின்பணியை தொடர்ந்து செய்து வந்தவர் அமரர் நடேசர். அவர்கள் தாமும் படிப்பார் எமக்கும் ஊக்கம் தருவார். செய்யுளுக்கு ஏற்ற இசையுடன் மெய்ப்பாடுகளும் தோன்றப் பாடுவார்.


"நண்ணினார்க்கினியாய் ஓலம் ஞான நாயகனேயோலம்
பண்ணவர்க்கிறையே ஓலம் பரஞ்சுடர் முதலேயோலம்
எண்ணுதற் கரியாயோலம் யாவையும் படைத்தாயோலம்
கண்ணுதற் பெருமான் நல்கும் கடவுளே யோலமோலம்"

இப்பாடலைப் படிக்கும் தோறும் உடல் நடுங்கி உரோமம் சிலிர்த்தது வியர்வை கொண்டு உள்ளமுருகக் கண்ணீர் சொரிந்து பாடுவார். முருக பக்தியில் திளைத்தவர், அம்பாள் பக்தியிலும் முதிர்ந்தவர். "வினைப் போகமே யொரு தேகங்கண்டாய் வினைதானொழிந்தாற் றினைப் போதளவு நில்லாது கண்டாய்" என்பார் பட்டினத்தார். வினைக்கீடாகக் கிடைத்த தேகம் மறைந்து விட்டது. அன்னாரின் ஆத்மா இறைவனடி சேர்ந்துவிட்டது. பிறவியில் பெருங்கடல் நீந்திவிட்டார். சுதுமலை அம்பாள் ஆலய தர்மகர்த்தா வாயிருந்து அளவற்ற தொண்டுகள் பல செய்துள்ளார். மருதடி விநாயகர் ஆலய வழிபடுவோர் சங்கத் துணைத் தலைவராக இருந்தும் பல பணிகள் செய்துள்ளார். பதி, பசு, பாச இயல்புகளை நன்கறிந்தவர். பண்பாய் வாழ்ந்தவர் அன்னாரின் பிரிவு எமக்கெல்லாம் ஈடு செய்யமுடியாத பேரிழப்பாகும் என்று தமது அஞ்சலிக் குறிப்பில் (நினைவு மலரில்) அமரர் செ.கந்தையா அவர்கள் எழுதியதை இங்கு அப்படியே தந்தோம்.

நன்றி - நினைவு மலர் (க.நடேசர்)
செல்லையா கந்தையா
(முன்னாள் அதிபர் சுதுமலை வடக்கு)

அமரர் நடேசர் அவர்கள் 26.10.1913 ஆம் ஆண்டு சுதுமலையில் பிறந்தார். கல்வி கலைகளில் சிறந்து விளங்கிய இவர் ஆங்கிலம் போதிப்பதில் வல்லவர். அமரர் அவர்கள் 05.10.1986ஆம் ஆண்டு இறைவனடி சேர்ந்தார்.

## (09) சேதுகாவலர் பொன்னம்பலம்



சே.பொன்னம்பலம் ஆசிரியர் அவர்கள் தென்மராட்சி கைதடி கிராமத்தில் வைத்தியர் சேதுகாவலருக்கும் சிவகாமிப்பிள்ளை அவர்களுக்கும்மகனாக 18.06.1926 இல் இவ்வுலகில் அவதரித்தார்.

ஆரம்பக் கல்வியை கைதடி C.M.S பாடசாலையில் கற்றார். இடைநிலைக் கல்வியை கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியிலும் கற்றார். சிரேஸ்ட பாடசாலைத் தராதரப் பரீட்சையில் S.S.C சித்தியடைந்த பின் மலைநாட்டில் 19ஆவது வயதில் ஆசிரிய நியமனம் பெற்று சேவையாற்றினார். 1971 இல் நல்லூர் ஆசிரிய கலாசாலையில் கற்று பயிற்றப்பட்ட ஆசிரியராக வெளியேறினார். கண்டி மாவட்டத்தில் ஆசிரியராக பணியாற்றிய காலத்திலேயே பொதுச் சேவை செய்வதிலும் ஆர்வம் காட்டினார். தமிழ் ஆசிரியர் சங்கத்தின் கண்டிக்கிளையின் பொருளாளராக பணியாற்றினார். 1978இல் யா/பெரியபுலம் மகாவித்தியாலயத்தில் கடமையாற்றி ஓய்வு பெற்றார்.

அமரர் அவர்கள் சுதுமலை ஸ்ரீபுவனேஸ்வரி அம்பாள் ஆலயத்தின் திருப்பணிச் சபையின் செயலாளராகப் பணியாற்றினார். சுதுமலை முருக மூர்த்தி தேவஸ்தானத்தின் அறங்காவலராகப் பணியாற்றி பலதிருப்பணிகளைச் செவ்வனே செய்தார். சுதுமலை ஈஞ்சடி ஞான வைரவர் ஆலயத்தில் மிகுந்த பற்றும் பக்தியும் கொண்டு அங்கே கூட்டுப் பிரார்த்தனைக் குழு ஒன்றை அமைத்து அடியார் பாடிப்பரவுவதைக் கேட்டுப் பேரானந்தம் அடைந்தார். அன்றியும் அங்கே நாவலர் சனசமூக நிலையம், நாவலர் பாலர் பாடசாலை என்பவற்றுக்கு துணைபுரிந்து அவற்றின் வளர்ச்சிக்கு துணையாக நின்று வழிப்படுத்தினார்.

சுதுமலை இந்து சமய விருத்திச் சங்கத்தின் நீண்ட கால தலைவராய் விளங்கி அரும் பணியாற்றினார். மானிப்பாய் கோயில் பற்று இந்து சமய விருத்திச் சங்கத்தின் உப தலைவராகவும் நீண்ட காலம் இருந்து செயற்பட்டவர். சுதுமலை தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் செயலாளராக பணியாற்றி பல அபிவிருத்திச் சேவைகளைச் செய்தார்.

இவர் சுதுமலை ஸ்ரீபுவனேஸ்வரி அம்மன் ஆலய புராண படன நிகழ்விலே பாடிப் பரவுவது அவரது விருப்பமான பணியாக இருந்தது. இவர் கந்தபுராணம், திருவாதவூரடிகள் புராணம் போன்றவற்றை இசையுடன் பாடுவதில் வல்லவர். இவர் குறித்த புராண படனத்தை தனது முக்கிய பணியாக செய்து வந்தமை குறிப்பிடத்தக்கது. கந்தபுராண படன நினைவு நாளில் ஆலயம் சென்று அங்கு புராணம் பாடி பிரசாதம் பெற்று வீடு ஏகி அன்றைய தினமே 26.07.2004 இறையடி சேர்ந்தார்.

அமரர் பொன்னம்பலம் அவர்களின் பல கோண பரந்துபட்ட சமய சமூகப் பணிகளின் சிறப்பினை உணர்ந்த அரசாங்கம் அவருக்கு 2002 இல் அகில இலங்கை சமாதான நீதவான் பட்டம் (J.P) வழங்கிக் கௌரவித்தது.

இவர்தம்பணி போற்றத்தக்கது.

**க. ஸ்ரீநந்தகோபன்**

# முன்பள்ளி கட்டுரைகள்

# சிறுவர் பூங்கா திறப்பு விழா - 2005



சிறுவர் பூங்காவினை பேராசிரியர் சபா ஜெயராசா அவர்கள்
திறந்து வைக்கும்போது -2005



ஆண்டுவிழாவில் தலைவர் திரு. இ. பேரின்பநாயகம் அவர்கள்
உரையாற்றும்போது - 2005

# முன்பள்ளிக் கல்வியும் எதிர்காலவியலும்

## அறிமுகம் :-

இன்றைய அறிவியல் யுகத்தின் கல்வி நடவடிக்கைகளில் மிகவும் அவதானத்துடனும், விழிப்புடனும் திட்டமிட்டு நடைமுறைப்படுத்தும் முன்பள்ளிக் கல்விக்கான தேவையை எல்லா நாடுகளும் உணர்ந்துள்ளன. இப்பருவமானது பொதுவாக இரண்டரை வயது தொடக்கம் ஐந்து வயதுவரையுள்ள குழந்தைகளைக் கொண்ட ஒரு அமைப்பாகும். இப்பருவம் பெற்றோர்களால், ஆசிரியர்களால் மிகவும் கவனமாகக் கவனிக்கப்பட வேண்டிய பருவமாகும். பிள்ளைகள் வளர்ந்தவர்களைவிட வேறுபட்ட நாட்டங்கள், தேவைகள் , சுபாவங்கள் திறமைகள் போன்றவற்றைக் கொண்டுள்ளனர். ஆரம்ப பிள்ளைப் பருவ கல்வியின் வளர்ச்சிக்கும் அதன் செயற்பாட்டிற்கும் வழிகாட்டியவர்களாக பெஸ்டலோசி (Pestalozzi), புரொபெல்(Froebel) மொன்டிசூரி(Montessouri) போன்றவர்களைக் குறிப்பிடலாம். ஒரு பிள்ளையானது தனது வாழ்வின் முதல் ஐந்து வருடங்களிலும் பெற்றுக் கொள்ளும் விடயங்களைத் தனது வாழ்க்கையின் வேறு எந்த ஐந்து வருடத்திலும் பெறுவதில்லை. என்பதும் குழந்தைக் கல்வியியலாளர்களின் கருத்தாகும். ஆகவே இப்பருவத்தின் முக்கியத்துவம் பற்றி ஒவ்வொருவரும் நன்கு விளங்கிக்கொள்வதோடு அதன் எதிர்கால வளர்ச்சிக்கு பல ஆக்கபூர்வமான் விடயங்களைத் திட்டமிடுபவர்களாகவும் தம்மை மாற்றிக் கொள்ள வேண்டும்.

## முன்பள்ளிக் கல்வியின் நோக்கங்கள் :-

கல்வி என்பது நோக்கங்களைக் கொண்ட ஒரு கருமத் தொடராகும். கல்வியின் நோக்கங்கள் நாட்டுக்கு நாடு வேறுபட்டுக் காணப்பட்டாலும் பொது நோக்கம் என்பது அறிவையும் திறன்களையும் பெற்றுக்கொள்ளல் என்பதாகும். இன்றைய கல்விமுறைகள் பாரம்பரிய கல்வி முறைகளினின்றும் வேறுபட்டுக் காணப்படுவதனால் நவீன முறைகளைக் கையாண்டு குழந்தைகளின் எதிர்காலக் கல்வி நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதோடு நவீன யுகத்தின் சவால்களுக்கு முகங்கொடுத்து வாழும் செயல் வீரர்களாக ஒவ்வொருவரையும் கல்வி மாற்றிவிட வேண்டும். இன்று சகலருக்கும் கல்வி , இலவச கட்டாயக் கல்வி என்ற அடிப்படையில் கல்வி நடவடிக்கைகள் அமைந்துள்ள போதிலும் வறுமை, கல்வி பற்றிய விழிப்புணர்வின்மை, போர்ச்சூழல், இடப்பெயர்வுகள் என்ற பல்வேறு தடங்கல்கள் கல்வியைப் பாதித்து விடுகின்றன. எனவே இத்தகைய எதிர்கால வளர்ச்சியைப் பாதிக்கும் காரணிகளை இனம் கண்டு அவற்றுக்கான மாற்று நடவடிக்கைகளை மேற்கொள்ளல் சிறந்ததாகும்.

எதிர் காலத்தை நோக்கி நடைபோடும் இளம் சிறார்கள் நாளைய உலகைக் கட்டிக் காக்கும் சாதனை வீரர்களாவர். இதனால் எதிர்காலச் சவால்களை எதிர் கொள்ளும் பிள்ளைகளாக அவர்கள் மாற்றப்பட வேண்டுமானால் இறந்த காலத்தின் அடிப்படையில் நிகழ்காலச் செயற்பாடுகள் சரியான முறையில் அமைதல் வேண்டும். நிகழ்கால நடவடிக்கைகள் சிறப்பாக் அமையும் போதே எதிர்கால முன்னாயத்தங்களைச் சிறப்பாக மேற்கொள்ளலாம்.

முன்பள்ளிக் கல்வியானது பல சிறப்பான நோக்கங்களை எல்லாம் தன்னுள்ளே கொண்டு செயற்படுகின்றது.

1. பிள்ளைகள் பேசும் திறனை பெறுதல்
2. பண்புடையவர்களாக மாறப் பழகுதல்
3. நாளாந்த வாழ்க்கைக்குரிய நடைமுறைத் திறன்களைப் பெறல்
4. பிள்ளைகளுக்குரிய பாதுகாப்பை உறுதிப்படுத்தல்
5. அவர்களின் நலன்களை உயர்த்துதல்
6. தன்னம்பிக்கை, சுய விருத்தி என்பவற்றை விருத்தி செய்தல்
7. தமது கருத்துக்களையும், சிந்தனைகளையும் தொடர்பாடல் செய்யும் வகையில் பல்வேறு வகையில் விருத்தி செய்தல்
8. தன்னையும் பிறரையும்குறித்த நேர் மனப்பாங்கை ஊக்குவித்தல்.
9. பிள்ளைகளின் சமூக ஆக்கத்திறன் நாட்டங்களை வளர்த்தல்.
10. விளையாடுவதற்கான சந்தர்ப்பங்களை ஏற்படுத்துதல்
11. தனது சொந்த தேவைகளை நிறைவு செய்யும் திறனை ஏற்படுத்துதல்.
12. சுகாதார அறிவைப் பெறுதல்.
13. அடுத்த நிலைக்கு அவர்களைத் தயார்ப்படுத்தி விடுதல்.

மனிதர்களால் மேற்கொள்ளப்படும் எல்லாச் செயல்களுக்கும் நோக்கங்கள் இருக்கும். குறிப்பிட்ட எதிர்கால இலட்சியத்தை நோக்கி நாம் நடைபோடாவிட்டால் எமது முயற்சிகள் பயனைத்தர மாட்டாது. முன்பள்ளிக் கல்வியின் இத்தகைய நோக்கங்கள் எல்லாம் உடனடியாக நிறைவேறும் எனக் கருதலாகாது. சில நோக்கங்களை நிறைவேற்ற நீண்ட காலப்பகுதிகூடத் தேவைப்படலாம். கல்வி என்பது படி முறைகளாகப் பயனளிக்கும் ஒரு செயற்பாடாகும். இதனால் நன்கு திட்டமிட்ட "பிள்ளை மையக்கல்வி" நடவடிக்கைகளே எதிர்காலத்திற்குப் பொருத்தமாக அமைகின்றன. பொருளறியாது மனப்பாடம் மூலம் அறிவை வழங்குதல், பாடசாலையும் ஆசிரியரும் தீர்மானித்த திறன்களை வழங்குதல் போன்ற "ஆசிரியர் மைய" பாரம்பரிய முறைகளினின்றும் முன்னேற்றமான முறையை வேறுபடுத்திக் காட்டும் வகையிலேயே இந்நூற்றாண்டின் ஆரம்பப்பகுதியில் "பிள்ளை மையம்" என்ற சொல் பாவனைக்கு வந்தது.

## முன்பள்ளிக் கல்விக்கான தேவை:-

மனிதக் குழந்தைகளின் ஆரம்பப் பருவத்தைை எடுத்து நோக்கும் போது அப்பருவம் தனது தேவைக்கு மற்றவர்களை நம்பியிருக்கும் பருவம் என்பதை அக்குழந்தைகளின் செயல்கள் எமக்கு உணர்த்துகின்றன. ஆனால் மிருகக் குட்டிகளின் ஆரம்பப் பருவம் எதிலும் தங்கியிருக்காத தன்மையைக் கொண்டுள்ளது. பிறந்தவுடன், அல்லது ஒரு சிறிது நேர இடைவெளியின் பின்னர் மிருகக் குட்டிகள் தன் தேவையைத் தானே நிறைவேற்றிக் கொள்கின்றன. இப்பருவம் அசட்டைப் பருவங்களாகும். அனால் மனிதனது குழந்தைப் பருவம் தன்னுடைய தேவைகளை நிறைவேற்ற நீண்ட காலப்பகுதியை எடுக்கும் பருவமாகும். இதனால் தன் தேவைகளை நிறைவேற்ற அக்குழந்தைகளுக்குக் கல்வியறிவு தேவையாகின்றது.

ஒரு குழந்தை தனது பெற்றோர்களின் பாதுகாப்பிலும், அரவணைப்பிலும் வளர்க்கப்பட்டு முதன்முதலாக முன்பள்ளி நிலையத்திற்கு வருகின்ற வேளையில் அவர்கள் மத்தியில் ஒருவிதமான தயக்கம், அச்ச உணர்வு போன்றவைகள் தலை தூக்கத் தொடங்குகின்றன. ஆகவே குழந்தைகளை அன்போடு அரவணைத்து அவர்களின் இத்தகைய உணர்வுகளைக் களைவதில் ஆசிரியர்கள் அக்கறையுடன் செயற்பட வேண்டும். எதிகாலக் கற்றலுக்காக கற்றல் என்னும் குறிக்கோளை நிறைவேற்றும் இடமாக முன்பள்ளிகள் விளங்க வேண்டும். பிள்ளைகள் முன் பள்ளிகளை நாடி வருவதற்குப் பல தேவைகள் இன்று அவர்களுக்குண்டு.

372.05
CUT
Ar

1. பெற்றோர் இருவரும் வேலைக்குச் செல்லுதல்
2. எதிர்காலக் கற்றலுக்காகக் கற்றல்
3. பல வகையான கற்பித்தல் உபகரணங்களைக் கையாளுதல்.
4. ஓடியாடி விளையாடப் போதுமான இடவசதி
5. சமூகப் பொருத்தப்பாடுடையவர்களாக்குதல்.
6. ஏனைய குழந்தைகளோடு தம்மையும் இணைத்துக் கொள்ளும் மனப்பக்குவத்தை ஏற்படுத்தல்.
7. உயர்மட்ட உள விருத்திக்கான புதிய அனுபவங்களைத்தூண்டுதல்.
8. தரம் 1 இற்கான அனுமதியைப் பெற்றுக் கொள்வதில் சிரமங்களைத் தவிர்த்தல்.

ARCHIVES

இத்தகைய சில தேவைகளின் அடிப்படையில் முன்பள்ளி நிலையங்களுக்குப் பிள்ளைகள் வருகின்றார்கள். இந்நிலையில் அங்கு அக்குழந்தைகள் மேல் தனிக்கவனமுடையவர்களாக ஆசிரியர்கள் செயற்பட வேண்டும். குழந்தைகளுக்குப் பொருந்துவதாகவே அங்கு இடம்பெறும் ஒவ்வொரு செயல்களும் அமைய வேண்டுமே தவிர அச்செயல்களுக்குப் பொருந்துவதாக குழந்தை தன்னை மாற்றமுடியாது. பிள்ளைகள் தனது எண்ணத்திற்கு ஏற்ற வகையில் ஓடியாடி விளையாடுவதற்கு அதற்குப்பூரண சுதந்திரம்



182106

வழங்கப்பட வேண்டும். முன்பள்ளிகள் பிள்ளைகளது உற்சாகமான மனதைத் தொடும் குறிப்பிடத்தக்க நிகழ்ச்சிகளை ஆராயச் சந்தர்ப்பங்களை வழங்குவதன் மூலம் அவர்களது உணர்வுகளையும், அறிவு ரீதியான வாழ்க்கையையும் கவனத்தில் கொள்வது தேவையான அம்சமாகும். இவ்வகையில் அவர்களின் ஆளுமை வளர்ச்சிக்கு முன்பள்ளிக் கல்வி இன்றியமையாததாக விளங்குகின்றது. இத்தகைய கல்வி நிலையங்கள் ஆரம்பநிலை, இரண்டாம்நிலைக் கல்வியிலும் குறிப்பிடத்தக்க அளவு விளைவுகளை ஏற்படுத்துகின்றன. ஏனெனில் இங்கு இடம்பெறும் அறிவுச் செயற்பாடுகளும் பழக்கவழக்கங்களும் அவர்களது மனதிலே ஆழமாகப் பதிந்து விடுகின்றன. இப்பருவம்தான் ஆராய்வூக்கத்தின் விருத்திக்கும், கோட்பாடு உருவாக்கத்திற்கும், மொழி விருத்திக்கும் முக்கியமான வருடங்களாகக் கொள்ளப்படுகின்றன.

## முன்பள்ளிக் கல்வியும் ஆசிரியர்களும் :-

முன்பள்ளிக் கல்விக்குப் பொருத்தமாக பெண் ஆசிரியர்களின் தேவை ஆரம்பகாலக் குழந்தைக்கல்விச் சிந்தனையாளர்களினால் உணரப்பட்டுள்ளது. ஏனெனில் குழந்தைகளிடம் பொறுமை பூண்டு தாயன்பைப் போல எதுவித களங்கமும் அற்ற அன்பு செலுத்துபவர்களாக பெண்கள் விளங்குகின்றனர். என்று அச்சிந்தனையாளர்களினால் கருதப்பட்டது. ஆனாலும் ஒரு குழந்தையின் அறிவுக்கு அத்திவாரமிடும் முன்பள்ளிக் கல்விச் செயற்பாடுகள் நுணுக்கமாகச் செயற்படுத்தப்பட வேண்டியதொன்றாகும். முன்பள்ளிகளில் கல்வியை யாரும் வழங்கலாம் என்ற நிலை காணப்படலாகாது. மேலைநாடுகளில் பட்டப்பின் கல்விதகைமை உடையவர்களே கல்வி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். இதனால் குறைந்தபட்ச தகுதியாக ஒரு ஆசிரியர் முன்பள்ளிக் கல்வி தொடர்பாக வழங்கப்பட்டு வரும் பயிற்சி நெறிகளிலாவது கலந்து கொள்ள வேண்டும். இன்று பல ஆசிரியர்கள் மிகவும் குறைந்த கல்வித்தரங்களோடு எதுவித பயிற்சியும் அற்றவர்களாக முன்பள்ளி ஆசிரியர்கள் என்ற நிலையில் கல்வியை வழங்கி வருகின்றார்கள்.

பிள்ளைகளுக்குக் கல்வியை மட்டும் போதிப்பது இப்பருவக் கல்வியின் நோக்கமல்ல. பிள்ளைகள் பெறுகின்ற ஒவ்வொரு அனுபவமும் அவர்களுக்கு அறிவாகின்றது. ஆகவே அவர்களுக்கு விரும்பிய முறையில் விளையாட்டின் மூலம் கற்பதற்கு அனேகமான சந்தர்ப்பங்களை ஆசிரியர்கள் வழங்க வேண்டும். அவர்களை அவதானிக்கும் ஒரு "அவதானி" யாகவே ஆசிரியர்கள் செயற்பட வேண்டும். பிள்ளைகள் தமக்கு விரும்பிய செயற்பாடுகளினூடாக கற்பதற்குச் சந்தர்ப்பங்களை உருவாக்குதல், அதற்கான அகப், புறச் சூழல்களை ஏற்படுத்திக் கொடுத்தல், கற்பித்தல் உபகரணங்களையும், விளையாட்டு உபகரணங்களையும், ஒழுங்கு செய்தல், வகுப்பறைத்தளபாடங்களை அவர்களுக்கேற்ற வகையில் ஒழுங்குபடுத்தல் போன்றவைகளே ஒரு ஆசிரியரின் செயற்பாடாக அமைய வேண்டுமே தவிர போதிப்பது என்பது தவறானதாகும். இத்தகைய நடவடிக்கைகளை அசிரியர்கள் சரியான முறையில் மேற்கொள்ளும் போது பிள்ளைகள் தாமாகவே அறிவைப் பெற்றுக் கொள்வார்கள்.

அசிரியர்கள் குழந்தைகளோடு குழந்தைகளாகச் செயற்பட வேண்டியவர்கள். தான் ஏனையவர்களை விட உயர்ந்தவன் என்றோ, மேலாதிக்கம் உள்ளவனென்றோ ஒரு அசிரியர் எண்ணக் கூடாது. குழந்தைகளின் பாதுகாப்பிற்கு உத்தரவாதமாக இருப்பதோடு அவர்களின் தேவைகளை நிறைவேற்றுபவர்களாக இருக்க வேண்டும். குழந்தைகளுக்கான வெகுமதி, தண்டனை போன்றவைகளை வழங்கும் போது மிகவும் நுணுக்கமாகச் செயற்பட வேண்டும். தண்டனை என்பது பிள்ளைகளுக்கு எவ்விதமான ஊறுகளையும் விளைவிக்காத வகையில் இரக்கத்தோடு சேர்த்து குழைத்தெடுத்த தண்டனையாக அமைய வேண்டும். இதனால் குழந்தைகளை அவதானிப்பவர்களாக ஆசிரியர்கள் இருக்க வேண்டுமே தவிர எண்ணக் கருத்துக்களை அள்ளி ஊற்ற வேண்டிய தேவை இவர்களுக்கில்லை. தங்களை வளர்ப்பதற்கான அனுபவங்களையும், தங்களை வளர்ப்பதற்கான திறமைகளையும் தேர்ந்தெடுப்பதற்காக அசிரியர்கள் ஊக்கப்படுத்தப்பட வேண்டும். அனுபவங்கள் தெரிந்தெடுக்கப்பட்டு ஒழுங்குற அமைக்கப்பட வேண்டும். எனவே அசிரியர்கள் பயிற்சி பெற்றவராக இருக்கும் போது இத்தன்மைகள் எல்லாம் அவரின் செயற்பாடுகளில் காண முடியும்.

## முன்பள்ளிக் கல்வியும் மாணவர் அனுமதியும் :-

இன்று கல்வியில் அறிவுப்பெருக்கம், அளவுப்பெருக்கம் என்பன ஏற்பட்ட வண்ணமுள்ளன. கல்வியின் அளவுப் பெருக்கத்தின் காரணமாக “கல்வியின் தரம்” சிலவேளைகளில் பிரச்சினையுமாகி விடும். ஏனெனில் இன்று அனேகமான குழந்தைகள் எல்லாம் முன்பள்ளி நிலையங்களை நாடி வருகின்றனர். ஆனாலும் ஆசிரிய வளம் அதற்குப் போதுமானதாக இருப்பதில்லை. இதனால் ஒரு ஆசிரியர் பல மாணவர்களை வைத்துக் கற்பிக்கும் நிலை ஏற்படுகின்றது. இதனால் ஆசிரியர் பல பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். தளபாடங்களும் சில பள்ளிகளில் போதியளவு இருப்பதில்லை. மாணவர்கள் தொகை அதிகரிக்கும் போது இத்தகைய பிரச்சினைகள் எதிர் கொள்ளப்படுகின்றது. வயதின் அடிப்படையில் பிள்ளைகள் குழுக்களாகப் பிரிக்கப்பட்டு கல்வி நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படுகின்றார்கள்.

முன்பள்ளிகளைப் பொறுத்த வரையில் சிலமுன் பள்ளிகள் சிறப்பாக இயங்கி வருகின்றன. பயிற்றப்பட்ட அசிரியர்கள், தளபாட வசதிகள், கற்பித்தல் உபகரணங்கள், விளையாட்டுக்கான வசதிகள் போன்ற பௌதீக வளங்களையும் மனித வளங்களையும் கொண்டு கலைத்திட்ட செயற்பாடுகளை முழுமையாக நடைமுறைப்படுத்திக் கற்பிப்பதனால் அத்தகைய முன்பள்ளிகளில் மாணவர் எண்ணிக்கை அதிகமாகவுண்டு. இங்கு கற்பித்தல் செயற்பாடுகளும் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. இங்கு முன்பள்ளிகளின் நிர்வாக நடைமுறைகளும் சிறப்பாக அமைந்து விடுகின்றன.

இன்றைய முன்பள்ளிகளை அரசு பொறுப்பெடுத்து ஆசிரியர்களுக்கு நியாயமான வேதனத்தை வழங்கி அவர்களின் உள முரண்பாடுகளை நீக்கி சிறப்பாக இப்பள்ளிகள் இயங்குவதற்கு துணை செய்ய வேண்டும். இன்று ஆசிரியர்களின் வேதனப்பற்றாக்குறையும் இவர்களது வேலையைத் தரமாகச் செய்வதற்கு மிகப்பெரும் தடையாக விளங்குகின்றது. தொழிற்திருப்தி ஏற்படுவதற்கு வேதனமும் ஒரு காரணமாகின்றது. ஆகவே அசிரியர்களுக்குரிய கௌரவத்தையும், மதிப்பையம் வழங்கி அவர்களுக்குரிய வேதனம் ஓரளவு திருப்தியாக அமையும்போது வேலையில் தரம் பேணப்படும். இத்தகைய பிரச்சினைகள் மத்தியில் ஆசிரியர் ஒருவர் திருப்தியாக வேலை செய்யாவிடில் அத்தகைய குறிப்பிட்ட நிலையங்களில் மாணவர் எண்ணிக்கை குறைவாகவே அமைகின்றது. இன்று முன்பள்ளிகள்கூட ஆங்கில மொழி மூலப் போதனையை மேற்கொண்டு வருவதனால் இத்தகைய நிலையங்களில் மாணவர்களைச் சேர்க்க பெற்றோர்கள் விரும்புகின்றனர்.

## முன்பள்ளிக் கல்வியின் நவீன போக்குகள் :-

இன்றைய உலகம் வெகு வேகமாகப் புதுமையை நோக்கி மாறிக்கொண்டு வருகின்றது. அப்புதுமைக்கேற்ப கல்வியுலகிலும் பல சவால்களை எதிர் கொள்ள வேண்டியுள்ள்து. இன்று அபிவிருத்தியடைந்த நாடுகளின் ஆரம்பப் பிள்ளைப் பருவக் கல்வியின் நவீன போக்குகளிற்கேற்ப வெளிவந்த ஒருபதம்தான் பிள்ளை உணர்ச்சிக் (Child sensive) கல்வியாகும். இதில் அசிரியரின் பங்கு அதிகமானமாகும். இச்செயலானது பிள்ளைகளோடு மிகவும் தொடர்புபட்டதாகும். ஏனெனில் கற்பிக்கும் தலைப்புக்கள் பிரயோசனமாக அமைவதோடு பிள்ளைகளுக்கு நாட்டத்தை உண்டு பண்ணும் வகையில் அமைய வேண்டும். ஆழமான விளக்கத்திற்கு உதவும் வகையில் தலைப்புக்கள் அமைதல் சிறப்பானதாகும். பிள்ளைகளது மனதைத் தொடும் உற்சாகமான நிகழ்ச்சிகள் சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். இதனால் ஒவ்வொரு பிள்ளைகளினதும் உள, மனவெழுற்சி விருத்திக்கான சிறந்த சூழ்நிலையை வழங்குவதைக் குறிக்கோளாகக் கொள்ளும் வகையில் முன்பள்ளிச் செயற்பாடுகள் அமைய வேண்டும். அத்துடன் இன்றைய நிலையில் ஒரு பிள்ளை தனித்துவாழ முடியாது. சமூகத்தில் உள்ள ஏனையோர்களையும் மனதளவில் ஏற்றுக் கொண்டு வாழப்பழக வேண்டும். ஒரு பிள்ளையைச் சமூகப் பொருத்தப்பாடு உடையவனாக்குவதில் முன்பள்ளிச் செயற்பாடுகள் முக்கியத்துவம் பெறுகின்றன. இதனால் அதற்குரிய கல்வி நடவடிக்கைகள் அமைதல் வேண்டும். தன்னொடு பிறரையும் எண்ணிப் பார்க்கும் ஒருவராக வரும் வகையில் பிள்ளையைக் கல்வி தயாராக்க வேண்டும். சிறந்த முடிவுகளை எடுத்து பிரச்சினைகளை தீர்க்கக் கூடிய ஒரவராகவும் பிள்ளை விருத்தியடைவதற்கு வேண்டிய அத்திவாரம் இங்கு இடப்பட வேண்டும். தன்னடத்திலேயே உள்ள அறிவைப் பயன்படுத்தி தன்னுடைய பிரச்சினைகளையும் பிறருடைய வாழ்க்கைகளையும் விருத்தி செய்யும் நோக்கில் சில கல்வி அனுபவங்கள் வழங்கப்பட வேண்டும்.

பிள்ளைகளுக்குப் போதிப்பதும், மனனம் செய்வதும் இன்று கல்வியுலகில் இருந்து விலகிச் சென்றுவிட்டன. பிள்ளைகள் எல்லா விடயத்தையும் தானாகத் தேடிக் கண்டு பிடிக்கும் ஆற்றலை வளக்க வேண்டும். கண்டுபிடித்தல், பிரச்சினைகளைத் தீர்த்தல், பரிசோதனை செய்தல், தவறின்றிச் செய்தல், விரைவாகச் செய்தல், கற்பனையில் ஈடுபடல், விளையாட்டு மூலம் கற்றல், அனுபவங்கள் ஊடாகக் கற்றல் என்ற வகையில் முன்பள்ளிக் கல்வி நடவடிக்கைகளய் அமைதல் வேண்டும். அதுதான் "தரமான கல்வி" க்குரிய சிறந்த அம்சங்களாகும். நூல்களைப் போதிப்பதைத் தவிர்த்து சிறந்த அனுபவங்களை வழங்குதல் வேண்டும். அனுபவத்தினூடாகப் பிள்ளை பலவற்றைக் கற்றுக் கொள்கின்றது. "நாங்கள் படிக்கின்றோம்" என்பதைவிட "நாங்கள் அனுபவங்களைப் பெறுகின்றோம்" என்று பிள்ளைகள் உணரும் நிலை ஏற்பட வேண்டும்.

நவீன உலகின் சிறுவர்கள் தமது சமூகத்தைப் பற்றி நிறைய விடயங்களை அறிந்து வாழ்வதற்கான சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். சமுதாயத்தின் ஒவ்வொரு பகுதியும் எவ்வாறு ஒன்றுடன் ஒன்று ஒத்தியங்குகின்றது என்பதை விளங்குவதோடு சமுதாயத்தின் தேவை , அதனை எதிர் கொள்ளும் சாதக, பாதக விளைவுகள் போன்றவற்றைப் பிள்ளைகள் உணர்ந்து கொள்ளச் சந்தர்ப்பத்தை ஆசிரியர் உருவாக்க வேண்டும். சமூகத்தின் கலாச்சார விழுமியங்கள் பற்றிய அறிவும் பிள்ளைகளுக்கு ஊட்டப்பட வேண்டும். அதற்குப் பொருத்தமான கல்வியைத் திட்டமிட்டு வழங்குவதற்கு அரசும் எனைய அரச சார்பற்ற நிறுவனங்களும் முன்வர வேண்டும்.

சிறந்த முறையில் முன்பள்ளி நடவடிக்கைகள் அமையும் போது எதிர் காலத்தின் தலைவர்களும் சிறந்தவர்களாகுவார்கள். இன்று இவ்விருப்பம் இருந்த போதும் இதற்குப் போதியளவு வளப் பங்கீடு இருக்கவில்லை. ஆயினும் தற்போது இப் பிள்ளைப் பருவக் கல்வியின் அதிக அக்கறை கொண்டுள்ள நிலையிலும் அதன் செயற்பாடுகள் சில முன்பள்ளி குறைந்து கொண்டு செல்வதனை அவதானிக்க முடிகின்றது. இதனால் கல்வியில் ஒரு சமநிலைப் போக்கினைக் காண முடியாமலுள்ளது. சில இடங்களில் அடிப்படை வசதிகள் கூட இல்லாத நிலையில் முன் பள்ளிகள் இயங்கி வருகின்றன. இன்றைய கல்வியின் புதிய செயல் நெறிகள் வளர்ச்சிப் பாதையினை நோக்கிச் செல்கின்றன. இதனால் அதற்கேற்ற வகையில் அதன் செயற்பாடுகள் திட்டமிடப்பட வேண்டும். இதனால் எதிர் காலத்தின் பாரிய தூண்களாக விளங்கும் முன்பள்ளிகள் பின்வரும் வசதிகளைப் பெறும்போது அது நவீன நூற்றாண்டின் போக்குகளோடு தனது வளர்ச்சியையும் முன்னோக்கி நகர்த்த முடிகின்றது. ஆசிரியர்களின் அறை, வகுப்பறை, முதலுதவிஅறை, விளையாட்டிடம், நூலகம், ஒன்று கூடுமிடம், கழிப்பறை, பூந்தோட்டம், மைதானம், கற்பித்தல் உபகரணங்கள், குடிநீர், தளபாடவசதிகள் போன்றவைகள் சிறப்பாக அமைதல் வேண்டும்.

எனவே முன்பள்ளி நிலையங்கள் பிள்ளைகளின் உடல் உள விருத்தியில் அதிக கவனம் செலுத்துவதோடு அவர்களின் மொழி விருத்தியிலும் அக்கறை கொள்ளல் வேண்டும்.

இன்றைய சமுதாயச் சூழ்நிலையில் முன்பள்ளிக் கல்வி பற்றி உலகெங்கிலும் அதிக ஆர்வம் காட்டப்பட்டு வருகின்றது. பிள்ளைகள் ஒருநாட்டின் சொத்து எனப்படுகின்றது. இதனால் பெற்றோர், ஆசிரியர் போன்றோர் இவர்களின் சிறப்பான எதிர்காலம் கருதி சிறந்த செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்ல வேண்டும். ஆசிரியர்கள் தாய் போன்ற அரவணைப்பை வழங்குபவர்களாக விளங்க வேண்டும். தேவையான பொது பெற்றோருடன் தொடர்பைப் பேண வேண்டும். சிறந்த தலைமைத்துவப் பண்டபுகளும் ஆசிரியர்களுக்கு இருக்க வேண்டும். ஆகவே முன்பள்ளிக் குழந்தைகளின் ஒவ்வொரு தனித்துவம் பற்றியும், அவர்களின் ரசனை, ஈடுபாடு என்பவற்றை அறிந்து அதற்குப் பொருத்தமான நவீன கல்விச் செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டியது ஆசிரியர்களின் கடமையாகும்.

## முடிவுரை :-

முன்பள்ளியின் எதிர்கால அறைகூவல்களுக்கெல்லாம் சவால்களாக அமையும் வகையில் அங்கு இடம்பெறும் ஒவ்வொரு செயற்பாடுகளும் அமைதல் வேண்டும். ஒருநாட்டின் வளர்ச்சி என்பது அந்நாட்டின் கல்வி நிலைகளைப் பொறுத்து அமைவதனால் இப்பருவத்துக்கல்வி கவனிக்கப்படவேண்டியதொன்றாகும். இன்றைய நவீன கல்வியின் போக்குகளிற்கேற்ப தரமான கல்வியை உறுதிப்படுத்தும் நோக்கில் முன்பள்ளிகள் செயற்பட வேண்டும். பிள்ளைகளை எவ்வளவு தொழிற்பட வைக்கின்றதோ அக்கல்வி முறைதான் சிறப்பாக அமையும். பிள்ளைகள் சிந்தித்து ஒரு முடிவுக்கு வரும் வகையில் கல்வி நடவடிக்கைகள் அமைய வேண்டும். பிள்ளைகளின் சிந்தனையைக் கிளறி விடுவதே கல்வி எனப்படும் என்று கல்விக்கு வரைவிலக்கணம் கூறப்பட்டுள்ளது. எனவே பொதுவாக நோக்குமிடத்து பிள்ளைகளை நீண்ட நேரம் உட்கார வைத்து கற்பிப்பது கல்வியல்ல அது காலப் போக்கில் பிள்ளைகளின் மத்தியிலேயே வெறுப்பை உண்டாக்கிவிடும். இதனால் பிள்ளைகள் மகிழ்ச்சியானதொரு சூழலில் கற்கும் வகையில் விளையாட்டின் மூலமாக கல்வியைத் தூண்டும் தந்திரோபாயங்களை அசிரியர்கள் அறிந்து கொள்ள வேண்டும். எனவே முன்பள்ளிநிலையங்களின் தேவைகள் தொடர்பாகவும் அக்கல்விநிலையங்களின் திட்டமிட்ட செயற்பாடுகள் மூலமாகவும் எதிர்கால சந்ததியினரின் வாழ்க்கை வழமாகும்.

நன்றி

**கலாநிதி (திருமதி) ஜெ. இராசநாயகம்**
சிரேஸ்ட விரிவுரையாளர்,
கல்வியியற்றுறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

# பாலர் கல்வியை வினைத்திறனாக்கும் கற்றல்-கற்பித்தல் செயலாற்றுகை

முன்பள்ளிக்கல்வி, கல்வி என்னும் ஏணியில் முக்கியமானதொரு படியாகவும் அடிப்படையாகவும் அமைகின்றது. ஒவ்வொரு குழந்தைகளுக்கும் இவ்வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும். ஏனெனில் இப்பருவத்தில்தான் குழந்தையின் அறிவு வளர்ச்சி பன்மடங்கு பெருகுவதுடன் மூளையும் விருத்தியடைகின்றது. இப்பருவ குழந்தைகளின் உள்ளம் வெறுமை யானதன்று அது சக்தி மிகுந்தது , ஆர்வம், கற்பனைசக்தி எனப் பல்வேறு திறன்களுடன் அவர்கள் கற்க வருகின்றார்கள். அதற்கு ஏற்ப முன்பள்ளிச் சூழலையும் ஆசிரியரையும் வழங்கவேண்டும். நல்ல கட்டடம் ,விளையாட்டு மைதானம், விளையாட்டு- கற்றல் உபகரணங்கள், கருவிகள், பொருட்கள், தர உள்ளீடுகள், இலத்திரனியல் சாதனங்கள் இருத்தல்மட்டும் போதாது அவற்றை நல்லமுறையில் பயன்படுத்தி குழந்தைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் திட்டமிடப்பட வேண்டும். எனவே இப்பருவ குழந்தைகளின் தேவைகளைப் பாடத்திட்டம் வகுப்போர் நன்கு அறிந்து கொள்ள வேண்டும்.

## முன்பள்ளிப் பாலர்களின் தேவைகள்

01. தாயின்மடியில் இருந்து முதல்முதலாகப் பிரிந்து வரும் பாலர்களின் அன்பு, அரவணைப்பு, காப்பு கணிப்புத் தேவைகளை முன்பள்ளி ஆசிரியர்கள் தீர்க்க வேண்டும்.

02. எல்லாப் பாலர்களும் பல்வேறு வகையான விளையாட்டுக்களில் ஆர்வம் உடையவர்களாக உள்ளனர். அத்தேவைகளைப் பூர்த்தி செய்யவேண்டும்.

03. சமூக வளர்ச்சித்தேவைகள், மனவெழுற்சி வளர்ச்சித் தேவைகள், அறிவு வளர்ச்சித் தேவைகளைப் பூர்த்திசெய்ய வழி செய்யவேண்டும்.

04. பாலர்களாகிய தமது பய உணர்வுகளை கருணையோடு மற்றவர்கள் கையாண்டு ஏற்றதொரு தீர்வுத் தேவையை இவர்கள் எதிர்பார்க்கின்றனர்.

05. அவர்களது தனியாள் வேறுபாடுகளை உணர்ந்து அவர்களது திறன்களுக்கும் தேவைகளுக்கும் ஏற்ற வடிகால்களை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

06. பொருட்களைச் சேகரிப்பதிலும் ஆக்குவதிலும் உள்ள ஆர்வத்தை வளர்த்திட வாய்ப்பளிக்க வேண்டும்.

மேற்படி வாழ்க்கை அனுபவங்களே கல்வியாகும் என்பதற்கமைய முன்பள்ளிகள் செயற்பட வேண்டும். ஆராய்தல், உற்றுநோக்கல், சோதனை செய்தல், கண்டுபிடித்தல், ஆக்குதல் முதலியவற்றிற்கு அனுகூலமான சூழ்நிலைகளையும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். பாலர்பாடசாலைக்கு வரும் குழந்தைகள் பலதேவைகளையும், ஆசைகளையும் கொண்டுள்ளனர். அவர்கள் தம்மை நோக்கியே எல்லா விடயங்களையும் காண்கின்றார்கள்.தமது எண்ணங்களையும், செயல்களையும் பிடிவாதமாகக் கடைப் பிடிக்கின்றார்கள். சுதந்திரமாக இருக்க விரும்பும் இவர்கள் நட்புணர்ச்சி மிக்கவர்கள்.

கோபக்குணமும், பிடிவாதமும் இவர்களுக்கு இருப்பது கண்கூடு. கனவுகளுடனும் மகிழ்ச்சியோடும் தோற்றமளிக்கும் இவர்களது ஆற்றல்களை விளங்கி முன்பள்ளி ஆசிரியர் கற்பிக்க வேண்டும். மேலும் விளையாட்டுக்கள் மூலம் கற்பித்தலே இங்கு முன்னிலைப் படுத்தப்படுகின்றது.

## விளையாட்டுக் கருவிகளின் வகைகள்

இக்கருவிகளை உள்விளையாட்டுக் கருவிகள், வெளிவிளையாட்டுக் கருவிகள் (Indoor and outdoor play equipment) என இரண்டாகப் பிரிக்கலாம். அத்துடன் விளையாட்டுக் கருவிகளின் பயன்களை அடிப்படையாகக் கொண்டு குழந்தைகளுடைய வளர்ச்சிக்கு ஏற்றதாகவும் நுண்ணறிவு கற்பனா சக்தியைத் தூண்டக் கூடியதாகவும் மனவெழுச்சிகளை செவ்வனே வெளியிட ஏற்றவையாகவும் ஆக்கத்திறன்களை தூண்டும் விளையாட்டுக் கருவிகளாகவும் இருக்கவேண்டும்.

சாதாரணமாக பாலர்களின் தசைகளின் இயக்க வளர்ச்சிக்கும் (பெரும் தசைகள்-Gross muscles) பேருதவியாக இருக்கக் கூடியது வெளி விளையாட்டுக் கருவிகளேயாகும். பரந்த விளையாட்டு மைதானத்தில் பாலர்கள் சுதந்திரமாக திரிந்து (Free play) விளையாடலாம். சறுக்கு மரம்(Slide) ஜங்கிள் ஜிம் (Jungle jim) சீசோ(Sea saw), ஆடுகுதிரை, தள்ளு வண்டி, இழுவண்டி, ஏணி, பந்துகள், தாண்டுகயிறு (Skipping ropes), ஊஞ்சல் என்பவை முக்கிய வெளி விளையாட்டுக் கருவிகளாக உள்ளன.

மேலும் ஒவ்வொரு முன் பள்ளியிலும் மணல் திட்டு(Sand pit) காணப்பட வேண்டும். இதில் பாலர்கள் மகிழ்ச்சியாக, சுதந்திரமாக விளையாடுவர். மேலும் உள்ளக விளையாட்டுக்கள் பாலர்களின் வயது ஆர்வங்களுக்கு ஏற்ப முன்பள்ளியில் ஒழுங்கமைக்கப்பட வேண்டும். தந்திரக் கட்டைகள் (Puzzles) வெவ்வேறு அளவிலான வர்ணக் கட்டைகள், உருவப்பலகைகள், எழுத்து வடிவ உருக்கள், பட உருக்கள், இழுவண்டி, தள்ளுவண்டி, நிற வடிவங்கள் வீணாண பொருட்கள்(Wast materials), தீப்பெட்டிகள், களிமண், ஒலி எழுப்பும் கருவிகள், இசைக்கருவிகள், விலங்கு உருக்கள், போக்குவரத்து சாதனமாதிரிகள், பொம்மை வீடுகள், பொருத்தும் கட்டைகள் என சுற்றாடலில் உள்ள பெரும்பாலான பொருட்களைக் கொண்டு உள்ளக விளையாட்டுக்களை ஒழுங்கமைக்கலாம்.

இவற்றின் மூலம் பாலர்கள் ஏனையவர்களுடன் சேர்ந்து விளையாடிக் கற்பர். சமூக மனப்பான்மையை விருத்தி செய்வர். அறிவுத்தாகமும் செயலைச் செய்ய வேண்டும் என்ற எண்ணமும், ஆக்க உணர்வும், கற்பனா சக்தியும் விருத்தியடையும். விளையாட்டுக்கள் மூலமாக மொழி என்ற தொடர்பாடல் தேர்ச்சிகள் விருத்தியடைகின்றன. பாலர்களுக்குத் தொடர்பாடல் தேர்ச்சியை சிறப்பாக வழங்கும் செயலாற்றுகையை பாலர்களுக்கான சித்திர செயலாற்றுகை உள்ளது.

## பாலர் சித்திரத்திற்கு வேண்டிய உபகரணங்கள்

1. கடதாசிகள், படம்வரையும் பலகை (Drawing Boards) ,Drawing pins
2. வர்ணங்கள் :- சுண்ணாம்பு வர்ணம் (Pastels), சுவரொட்டி வர்ணம்(Poster colours), பதவர்ணம்(காவிகள்)(jumpera powder colours), தூரிகைகள்(Brushes)
3. மெழுகுதிரி, ஒட்டுவிதைகள், பருப்புகள், உபகரணங்கள், பசை
4. உருளைக்கிழங்கு, பப்பாளிக்காய், குரும்பட்டி. வெண்டிக்காய்
இலைகள் :- அச்சுப்பதிக்க - நாணயங்கள்
5. சிறு கத்தி, கத்திரிக்கோல், அட்டைகள்,பாத்திரங்கள்
6. நூல் பஞ்சு பழந்துணி கழிவுப் பொருட்கள் கொப்பிகள்

இவ்வாறான பொருட்களைக் கொண்டு கிறுக்குதல், கிறுக்கல்களின் இடைவெளிகளை அலங்கரித்தல், நீர்வர்ணங்களைக் கரைத்து தூரிகைகளினால் தெளித்தல், படங்களை உருவாக்கல், வாயினால்-சிறு குழாயினால் ஊதி நிறப்பிரிகை கைவிரல்களினால் தொட்டுப்பதித்தல், ஒட்டுதல், அலங்காரப் பொருட்களை உருவாக்குதல், அச்சுப்பதித்தல், அச்சடித்தல்

மற்றும் மெழுகு மூலமாக வெள்ளைத்தாள்களில் அழுத்திக் கிறுக்கி, வர்ணத்தை மென்னிறமாக கரைத்து கூடுதலாக நீர் சேர்த்து பஞ்சு அல்லது பழைய பருத்தித் துணியில் தோய்த்து மெழுகினால் கிறுக்கிய கடதாசியின் மீது பூசுதல், மெழுகு தேய்த்த இடங்களில் வர்ணம் படியாது சித்திரம் அழகாக இருக்கும். மறுபடியும் வர்ணத்தைக் காயவைத்து மெழுகினால் கீறி வர்ணம்பூசி பலவகையான அழகான ஓவியங்களை வரையலாம் இவ்வாறாகப் பல ஆசிரியர்கள் பல்வேறு விளையாட்டுச் செயற்பாடு முறைகளினூடாகக் கற்றல்-கற்பித்தல் செயன்முறைகளை வினைத்திறனாக்கும் உத்திகளைக் கண்டறிந்திருக்க வேண்டும்.

## பாலர் ஆசிரியரின் பங்குகள்

1. பாலர்களின் மனவெழுச்சிக்குகந்த சூழலை அமைத்தல்
2. சுய ஆற்றல்களை வளர்க்க உதவும் தன்னியக்க ஆக்க வேலைகளை ஊக்குவித்தல்.
3. ஆக்க வேலைகளுக்கு இன்றியமையாத சிறப்பான உபகரணங்களைக் கையாளும் முறைகளைக் கற்பித்தல்.
4. வளர்ப்புத் தாயாக இருந்து பாலர்களின் தனியாள் வேறுபாடுகளிற்கு ஏற்பவும் விருப்பங்களிற்கேற்பவும் மகிழ்சிகரமான கற்றலுக்கு வழிகாட்டல்.
5. பெற்றார்களுடன் சிறந்த தொடர்புகளை மேற்கொண்டு அவர்களுக்கும் வழிகாட்டி, அவர்களினூடாகவும் பாலர்கள் வீட்டில் பயிலக்கூடிய சூழலை ஏற்படுத்துதல்.

இவ்வாறாக பாலர் ஆசிரியர்கள் தம்மை அர்ப்பணித்து சேவை ஆற்றவேண்டிய தேவை இன்று வேண்டப்படுகின்றது. பாலர்கள் சிறு வயதில் இருந்தே கற்கத் தொடங்குகின்றார்கள். தங்கள் எண்ணங்கள், உணர்ச்சிகள், தேவைகளைப் பேச்சு அபிநயம் பல்வேறு

செயற்பாடுகள் மூலம் வெளிக்காட்டு கின்றார்கள். ஆடல், பாடல் விளையாட்டுக் களினால் தம் ஆசைகளையும் கற்பனை களையும் காட்டுகின்றார்கள். புதியனவற்றை புரியவும் அறியவும், ஆராயவும் விரும்புகின்றார்கள். இவ்வித அற்றல்களை, மெய்ப்பாடுகளை நெறிப்படுத்தி மற்றவர்களுடன் சேர்ந்து பழக-பயில வழிகோலும் செயற்பாடுகளை திட்டமிட்டு பாலர் பாடசாலைகளில் வழங்க வேண்டும். இதற்கு ஒரு நாளில் நடைபெறும் பொதுப் பாடவிதான வேலைத்திட்டம் பின்வருமாறு ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.

1. இறை வணக்கம்(Preyer Assembly) பாலர்களின் விழுமிய நம்பிக்கைகளை ஏற்படுத்தல்.

2. ஆரோக்கிய பரிசோதனை(Health checkup)- உடல்உறுப்புக்களை உற்றுநோக்கிக் கவனித்தல்.

3.சுதந்திர உரையாடல்(Free conversation)- பாலர்களுடன் அளவளாவி ஆலோசனை, வழிகாட்டல் வழங்குதல்.

4. வெளி விளையாட்டுக்கள்(Outdoor play) ஓடி, ஆடி தசைநார் பயிற்சிக்கான விளையாட்டுக்கள்.

5. கைகால் சுத்தமும், கழிவிடத்திற்குச் செல்லலும்(Toilet and wosh)- உரிய சுத்தமான பழக்கவழக்கங்கள் பெறல்.

6. கதை சொல்லுதல்(Story Jelling)- கதைமூலம் கற்றல்.

7. பாடல்கள்(Rhymes)- பாடல்கள்பாடி இசையும், அசைவும்

8. ஆக்கச் செயல்கள்(Creative activities)- விரல்பயிற்சி, வெட்டுதல். கிழித்தல், ஒட்டுதல்,வர்ணம் பூசுதல்

9. ஆயத்தச் செயல்கள்(Readiness activities)- மொழி, எண், சுற்றாடல் எண்ணக்கருக்களை கற்பதற்கான ஆயத்தம்.

10. வருகையும் வீட்டிற்குச் செல்லலும் (Arrival and departure)

இவ்வாறாக கற்றல்-கற்பித்தல் செயலாற்றுகை நெகிழ்ச்சியுடையதாக நாளாந்தம் நடைமுறைப் படுத்தப்படுவதுடன் சுற்றாடல் சுற்றுலா, கல்விச்சுற்றுலா, கள வேலைகள். ஆக்க சக்தியை கலைகள் மூலமாகப் பெறல் பெற்றோர்களுடன் இணைந்து வெளிப்பயணங்கள் மற்றும் முன்பள்ளி விழாக்களை (Festivel in pre schools) நடாத்துவதன் மூலம் பாலர்களின் சமூக மயமாதல் செயன்முறை விருத்தியடையும். அதிலும் சமய-பண்பாட்டு விழாக்கள், தேசிய விழாக்கள் என்பவை இவற்றில் முக்கியம் பெறுகின்றன. இவ்வாறான சமகால நிலைமைகளுக்கேற்ப அணைவரும் ஒன்றிணைந்து முன்பள்ளிப் பாலர்களின் ஆற்றல்களையும் ஆளுமைகளையும் விருத்தியாக்கி வளமான ஒரு எதிர்கால சந்ததியை உருவாக்குவோம்.

**பா. தனபாலன்**
உப பீடாதிபதி (கல்வி)
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரி



# முன்பள்ளிக் கல்வியில் பெற்றோர்களினதும், ஆசிரியர்களினதும் வகிபங்கு

- திருமதி. அம்பிகைபாலன்
ஆசிரிய ஆலோசகர். வலிகாமம் கல்வி வலயம்.

அன்னையின் அரவணைப்பில் இருந்த பிள்ளை வீட்டுச்சூழலில் இருந்து புதிய இடத்திற்கு முதன்முதலாக கல்வி கற்கச் செல்லுகின்றான். முன்பள்ளி என அழைக்கப்படும் இந்த இடம் இரண்டரை வயது தொடக்கம் ஐந்து வயதுவரை உள்ள சிறார்கள் சந்தோசமாக ஆடிப்பாடி விளையாடிப் பூங்காவாக இருக்க வேண்டும். எனக் குழந்தைக் கல்விச் சிந்தனையாளர்கள் குறிப்பிடுகின்றார்கள்.

சிக்மன் பிராய்டு "குழந்தை ஐந்து வயதை அடையும் போது நன்மையாகவோ தீமையாகவோ அதன் ஆளுமைவளர்ச்சி பெறகின்றது. ஐந்து வயதுக்குள் இழைக்கப்படும் தீமைகள் பின் ஒருபோதும் திருத்தப்பட 'முடியாதன" என்கின்றார். இதனை பெற்றோரும் ஆசிரியர்களும் நன்கு உணர வேண்டும்.

முன்பள்ளிச் சிறார்களின் செயற்பாடுகளுக்கு குடும்பமே மிக முக்கிய செல்வாக்கை செலுத்துகின்றது. பாலர்களின் பேச்சுவார்த்தை, பழக்கவழக்கம் என்பவற்றின் மூலம் குடும்பத்தினரைக் கண்டு கொள்ளலாம். "நூறு ஆசிரியரை விட ஒரு புத்திசாலி தந்தை மேலானவன்" எனபதன் மூலம் ஒரு தந்தையின் முக்கியத்துவம் தந்தை எவ்வாறு வாழ வேண்டும் என்பதும் கல்விச் சிந்தனையாளர்களினால் குறிப்பிடப் படுகின்றது. குழந்தையின் ஆரோக்கிய நிலை எனக் குறிப்பிடப்படும் உடல், உள, சமூக ஆத்மீக நிலைகளின் உன்னத நிலையை அடைவதற்கு குடம்பம் முக்கியமாகின்றது. வீடுதான் பிள்ளைகளின் புனிதமான சொத்து பெற்றோரிடையே நல்லுறவு முறை, நற்சிந்தனை, நல்ல நடத்தை, அறநெறி விழிமியங்கள், இறை சிந்தனை எனபன இருக்குமாயின் முன்பள்ளி பாடசாலைகளின் பணி இலகுவாக்கப்படும். "தாயின்முகமே குழந்தையின் ஆரம்ப பாடப்புத்தகம் என கல்வியியலாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

பெற்றோருக்கும் முன்பள்ளி ஆசிரியர்களுக்கும் இடையே நெருங்கிய ஒத்துழைப்பு இருக்கவேண்டும். பாலகிருஸ்ண ஜோதி எனபவர் பிள்ளையின் முதல் ஆசானான பெற்றோருக்கும் இரண்டாம் பெற்றோரான ஆசிரியருக்கும் இடையில் உள்ள நெருங்கிய ஒத்துழைப்பே கல்வி நிலையங்களில் பகிரப்படும் பயிற்சியின் பெறுபேறு என்கின்றார். B.Castle என்பவர் பாடசாலையை விட வீடுதான் ஒரு குழந்தையின் வாழ்க்கைத்

தரத்தையும் போக்கையும் தீர்மானிக்கின்றது. ஆசிரியரின் பணிகள் நிறைவேற்றப்படவோ நிர்மூலமாக்கப்படவோ நன்மையாக இருப்பதற்கோ அல்லது திறமையாக அமைவதற்கோ காரணியாக அமைகின்றது" என்று குறிப்பிட்டார்.

பெற்றோரும் ஆசிரியரும் பாலர்களிடம் அன்புடன் நடந்து கொள்ளவேண்டும். தண்டனைகள் வசை மொழிகள் வழங்கப்படுமாயின் அவர்களது ஆளுமை அகற்றப்பட்டுவிடும். ஒதுங்கியிருக்கும் தன்மையை உருவாக்கிவிடும். "முட்டாள் என பெற்றோராலும் ஆசிரியராலும் மற்றோராலும் கூறப்படும் போது உண்மையில்தான் முட்டாள் என நம்பத் தொடங்குகின்றது. போட்டிகளில் நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளாமல் விலகிச் செல்வதன் மூலமாக மோசமான ஏச்சிலிருந்து தப்பிவிடலாம் என உணர்ந்து பிழையாகச் செய்தால் தானே ஏச்சு என பேசாமல் இருப்பதே நல்லது என எண்ணுவதால் அதன் வாழ்க்கைக் கோட்பாடு "எதையாவது செய்வதற்கு முயலா விட்டால் நான் ஒருபோதும் தோற்றுப்போய் விடமாட்டேன்" என உரு மாறிப் போய் விடுகின்றது. என டாகடர் ஹேய்ப் ஜி இனோட் என்ற உளவியலாளர் குறிப்பிட்டுள்ளார்.

முன்பள்ளி சிறார்களுடன் பழகும் ஆசிரியர்கள் மிகவும் அவதானமாக நடந்து கொள்ளவேண்டும். "கத்துகின்ற ஆசிரியர்கள் கத்துகின்ற மாணவர்களை உருவாக்கு கின்றார்கள்" என ருஷோ என்ற கல்விச் சிந்தனையாள்ர் குறிப்பிட்டுள்ளார். "ஒரு ஆசிரியன் என்ற வகையில் எனது அணுகுமுறைகளே வகுப்பறையை மலர்விக்கும். கல்வி கல்விநிலைகள் எமது மனோ நிலையே அன்றைய நாளின் வானிலையாகும். எனது துலங்கலால் மாணவன் உலகம் வியக்கும் மானுடன் ஆகலாம் அல்லது எதிர் மானுடனாகலாம்" என்ற றொஸ். என்ற கவிஞரின் வரிகள் ஆசிரியர்கள் ஆரோக்கியமானவர்களாக இருக்க வேண்டும் என்பதைக் குறிப்பிடுகின்றது.

"எமது கல்வியிலே வாசிக்க, எழுத, கணக்குப்பார்க்க, உச்சரிக்க எழுத்துக் கூட்டுவதிலே மிகுந்த கவனம் செலுத்தப்படுகின்றது. அதை மாணவர்கள் மிகக் கவனமாகச் செய்கின்றார்கள். ஆனால் எமது கல்வி மனிதத்தை உருவாக்குவதில் மிகுந்த தோல்வியைக் கண்டுள்ளது" என லெயோனார்ட் சில்பெர்மான் குறிப்பிடுகின்றார். மனிதன் எல்லாம் புரிந்து கொண்டான். வாழ வழி தெரிந்து கொண்டான். இருந்தபோது மனிதனுக்கு மனிதனாக வாழ மட்டும் புரியவில்லை இதில் ஒர உண்மையுள்ளது. கல்விக் கூடங்களில் அன்பு வற்றிப் போய் மனிதம் தோற்றுப்போய் மாணவர்களின் தனித்துவங்களில் அக்கறை கொள்ளாத நிலை உருவாகி வருவதை மீட்டெடுக்கும் பணி ஆசிரியர்களுடையதாகின்றது. மாணவர்களின் தனித்துவம் வளர்க்கப்பட வேண்டும். எல்லோருக்கும் ஒரேமாதிரியான கல்வியானது மாணவர்களின் விரக்தி யுள்ளவர்களாக மாற்றும். கண்ணிருந்தும் குருடர்களாக , காதிருந்தும் செவிடர்களாக

கல்விக் கூடங்களை விட்டு வெளியேறும் நிலையை உருவாக்கும் எனவே சிறார்கள் ஒவ்வொருவரும் தனித்துவமானவகள், தனித்துவமான ஆற்றலைக் கொண்டவர். என்பதை அறிந்து ஆற்றல்களை இனங்கண்டு வளர்ப்பதே சிறந்த கல்வி வழிகாட்டலாகின்றது. கார்ல் றொஜர்ஸ் "ஒவ்வொரு மனிதனும் முழுமை பெற விரும்புகின்றான் என்றார். இந்த உலகை நாம் அழகான பூந்தோட்டமாக பார்க்கவேண்டும். இந்தப் பூந்தோட்டத்தில் ஒரே ஒருவகைப் பூ இருந்தால் அழகாக இருக்காது. ஒவ்வொருவரும் தனித்துவமான பூ இதை உணர்ந்து ஆசிரியர் கலவியை வழங்க வேண்டும். என குறிப்பிடப்படுகின்றது.

01. பெற்றோர் எத்தகைய வேலைப்பளு இருப்பினும் நேரப்பற்றாக்குறை இருப்பினும் ஆசிரியரை அடிக்கடி சந்தித்துக் கலந்துரையாட வேண்டும்.

02. கொப்பிகளில் எத்தனை பக்கங்கள் எழுதியிருக்கின்றார்கள் எனபதைப் பார்த்துவிட்டு ஒருமுன்பள்ளியை விட்டு இன்னோர் முன்பள்ளி அதாவது எழுத்து வேலைகள் அதிகமாக வழங்கும் முன் பள்ளிகளில் சிறார்களை அடிக்கடி மாற்றுதாக சில முன்பள்ளி ஆசிரியர்கள் மிக வேதனைப்படுகின்றார்கள். முன்பள்ளிகளில் எழுத்து வேலைகள் மிகமிகச் சொற்பம் எழுத்து வேலைகளே வழங்கக் கூடாது. என்பதே சிந்தனையாளர்கள், உளவியலாளர்கள் கருத்து. ஆடல், பாடல், விளையாட்டு, ஆக்கம், வரைதல், தசைநார்ப்பயிற்றி ஒழுக்கவிருத்தி, ஆன்மீக விருத்தி, இவைகளே முக்கியமாக உள்ளன. இதனைப் பெற்றோர் உணர்ந்து வேதனத்தைப் எதிர்பார்க்காது அற்பணிப்போடு அரவணைக்கும் முன்பள்ளி ஆசிரியர்களுக்கு வேதனையை வழங்காது ஆதரவாக இருப்பது முன்பள்ளி ஆசிரியர்களை உற்சாகப்படுத்தும்பணி பெற்றோரிடமுள்ளது.

பெற்றோரும் முன்பள்ளி ஆசிரியரும் கைகோர்த்து செயற்படும் போது ஆரோக்கியமான ஆளுமையுள்ள சிறார்களை சமூகத்தின் கரங்களில் ஒப்படைப்பதன் மூலம் உலகை அழகிய நந்தவனமாக்கும் முதற்பணியைச் செய்தோம் என்ற ஆத்ம திருப்தியும் ஏற்படும்.இதிலிருந்து பெற்றோர்களினதும், ஆசிரியர்களினதும் வகிபங்கு முன்பள்ளிகளில் மிக உன்னதமானது என்பதை உணர்வு பூர்வமாக புரிந்து கொண்டு செயற்படுவது காலத்தின் கட்டாய தேவையாகியுள்ளது.

## புதிய கட்டிடத் திறப்புவிழாவின் ஆரம்ப நிகழ்வுகளில்



ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்
உருவச்சிலைக்கு மாலை அணிவித்து
செஞ்சொற்செல்வர்
அவர்கள் வணங்கும் பொழுது



பேராசிரியர் மா. சின்னத்தம்பி அவர்கள் மங்கல விளக்கேற்றும் போது

# கல்வி, சமய,
# சமூக சேவையாளர்கள்

# மானிப்பாய் இந்துவின் அதிபர்

***அதிபர் என்றால் பேராயிரவர் என்னும் அறிவிற்கு தனது பணியைச் செவ்வனே ஆற்றிய பெருந்தகையின் பணி என்றும் எம் ஊருக்குப் புகழ் கூறும் அந்த உயர் நிலை தனை ஏற்படுத்திய சுதுமலையைச் சேர்ந்த முத்துத்தம்பி பேராயிரவர் பற்றிய வாழ்க்கைக் குறிப்பினையும் சிறப்பினையும் இக் கட்டுரை வாயிலாக நோக்குவோம்.***

## வாழ்க்கை வரலாறு

சுதுமலையில் ஸ்ரீமான் பெரியதம்பி முத்துத்தம்பி விதானையாருக்கும் திருமதி பொன்னம்மா அவர்களுக்கும் மகனாகப் பேராயிரவர் அவர்கள் 1923.09.24ம் நாள் பிறந்தார்.

ஆரம்பக்கல்வியை சுதுமலை சிந்மயபாரதி வித்தியாசாலையில் ஆரம்பித்து முன்றாம் வகுப்பை மானிப்பாய் இந்துக்கல்லூரியில் மேற்கொண்டார் பின் 1940ஆம் ஆண்டு தனது பதினாறாம் வயதில் இலண்டன் மெற்றிகுலேசன் பரீட்சையில் சித்தியடைந்தார். பின் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் தனது சர்வகலாசாலை புதுமுக வகுப்பைத் தொடங்கி 1942இல் கொழும்பு சர்வகலாசாலையில் ஆங்கிலத்தைத் தனது முக்கிய பாடமாக எடுத்து யாழ்ப்பாணக் கல்லூரியில் தமது 23ம் வயதில் இலண்டன் பீ.ஏ.யாக (B.A) வெளிவந்தார்.

யாழ் பரமேஸ்வராக் கல்லூரியிலும் கொழும்பு ஆனந்தாக் கல்லூரியிலும் தொண்டராசிரியராகக் கடமையைச் செய்து பின் 1948ம் ஆண்டு மானிப்பாய் இந்துக்கல்லூரியில் ஆசிரியராக நியமனம் பெற்றார். பின் 1959ம் ஆண்டு உப அதிபராகவும் 1971ம் ஆண்டு தொடங்கி 1979ம் ஆண்டு வரை அதிபராகவும் ஒரே கல்லூரியில் 30 வருடங்களாகச் சிறந்த சேவை செய்து யாழ்ப்பாணத்தில் மட்டுமன்றி இலங்கையில் கூட ஒரு பெரும் தனியிடத்தைப் பெற்றும் சாதனை படைத்தார் முதல் முதலாக வர்த்தகக் கல்வியை உயர்தர வகுப்பில் புகுத்தி பலமாணவர்களை பல்கலைக்கழகத்துக்கு அனுப்பி வைத்தார். இன்றைய காலகட்டத்தில் வர்த்தகக் கல்வியே நம் நாட்டில் முதன்மை பெற்றுள்ளது. மற்றும் மாணவன் ஒருவனை தனியாளாக தேர்வு செய்து அவனின் உளப்பாங்கை அறிந்து கல்வியைத் தொடரவைத்தல், இது இன்று மேலைத்தேயத்தில் உள்ள ஒரு நடைமுறை அவருடைய காலத்திலேயே இந்தத் தேர்வு முறையைச் செய்து வெற்றிகண்டவர்.

வசதிக் கட்டண சம்பளத்தில் ஆசிரியர்களை நியமித்து ஆசிரியப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்தவர்.

மாணவர்களுக்கு இலவசமாகக் கல்வி போதித்தல் விளையாட்டு உடைகளைத் தனது சொந்தச் செலவில் வாங்கிக் கொடுத்தல் எனத் தனது சேவையை வளர்த்தவர்.

வடமாகாண ஆசிரியர் சங்க காரியதரிசியாகவும் தலைவராகவும் பணிசெய்து ஆசிரியர்களின் உரிமைகளைப் பெற்றுக் கொடுக்க உதவினார். அகில இலங்கை ஆசிரியர் சங்க நிர்வகாகக் குழு அங்கத்தவராக இருந்து தொண்டு செய்தார். யாழ்மாவட்ட பாடசாலைகள் விளையாட்டுச் சங்கத்தின் தலைவராக இருந்து விளையாட்டுத்துறையை முன்னோற்றினார்.

1959ம் ஆண்டு புதுடெல்லியில் நடந்த சர்வதேசக் கல்வி மாநாட்டிலும் 1963ம் ஆண்டு மாண்டுங் இந்தோனேசியாவில் நடந்த மாநாட்டிலும் இலங்கைப் பிரதிநிதியாகக் கலந்து கொண்டு இலங்கைத் தமிழர்களுக்குப் பெருமை தேடித்தந்தார்.

4.4.1979இல் மானிப்பாய் இந்துக்கல்லூரி ஸ்தாபகர் வே.சங்கரப்பிள்ளை அவர்களின் சிலை நிறுவி தன் நன்றியைத் தன் கல்லூரித் தாய்க்கு செய்து 30.06.1979இல் தனது பதவியில் இருந்து ஓய்வு பெற்றார்.

நைஜீரியா சென்று கற்சினா ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் ஆசிரியராகவும் விவாதக் குழுத்தலைவராகவும், இல்லப் பொறுப்பாசிரியராகவும், தமிழ்ச் சங்கத் தலைவராகவும் இருந்து தமிழ் வளர நைஜீரியாவில் பங்காற்றினார்.


றொறன்ரோ கல்விச்சபையில் மொழிபெயர்ப்பாளராகவும் பன்மொழிச்சபையிலும் பணிபுரிந்தார். இந்திய கனடிய கல்விக்குழு அங்கத்தவராகவும் தமிழ்ப்பாடவிதானம், பாடப்புத்தகம் தயாரிக்க உதவியாளராகவும் பணியாற்றினார்.

இறைவனின் நேரடி அனுபவம் பெற குருவின் உதவிவேண்டும் என்பதை உணர்ந்து 1975ம் ஆண்டு பெப்ரவரி 9ம் திகதி ஸ்ரீகுருமகாராஜிடமிருந்து ஞான தீட்சை பெற்றார்.

இவர் கொழும்பு பழைய மாணவர் சங்கத்தை ஊக்கப்படுத்தி சங்க வளர்ச்சிக்கு உதவினார். இங்கிலாந்தில் மானி. இந்துத்தாயின் பழைய மாணவர் சங்கத்தை ஸ்தாபித்தார். இவ்வாறாக தனது ஓய்வு காலத்தையும் கல்லூரித் தாய்க்கு அர்ப்பணித்து 1994.01.20இல் இறைவனடி சேர்ந்தார்.

**பேராயிரவர் அவர்கள் ஞாபகார்த்தமாக எமது முன்பள்ளியில் சிறுவர் அரங்கு ஒன்று அமைக்கப்பட்டு பேராயிரவர் அரங்கு என்ற பெயரில் 20-07-2008 அன்று அவரது புதல்வி செல்வி ரோகினி பேராயிரவர் அவர்கள் திறந்துவைக்க உள்ளார். அதற்கு இவ்விடத்தில் திருமதி பேராயிரவர் அவர்களுக்கும் நன்றி பலகூறி மேலும் எம்பள்ளிக்கு உதவிகள் பல செய்வார்கள் என்று கூறி நிறைவு செய்கின்றேன்.**

**க. ஸ்ரீநந்தகோபன்**



# அமரர் சின்னத்தம்பி – மார்க்கண்டு

(முன்னாள் கிராம சபைத் தலைவர்)

சுதுமலையைப் பிறப்பிடமாகக் கொண்ட சி. மார்க்கண்டு அவர்கள் சின்னத்தம்பி தில்லைவனம் தம்பதிகளுக்கு மகனாக 19.02.1919 இல் பிறந்தார். ஆரம்பக் கல்வியை சிங்கப்பூரில் கற்றார். தொடர்ந்து உடுவில் புனித மான்ஸ் பாடசாலையில் கற்றார்.

தனது தொழிலை மட்டக்களப்பு. குருநாகல் ஆகிய இடங்களில் கட்டட ஒப்பந்த காரராக வேலையில் ஈடுபட்டார். தமது 20 ஆவது வயதில் RAF இல் சேர்ந்து வவுனியாவில் கடமையாற்றினார். கொழும்பில் களஞ்சிய பொறுப்பாளராக கடமைபுரிந்தார்.

பொதுச் சேவையில் மானிப்பாய் கிராம சபையில் தலைவராக 13 வருடம் சேவையாற்றினார். இவரது காலப்பகுதியிலேயே கிராமசபைக்குச் சொந்தமான காணி ஒன்றினை வாங்கி அதில் கட்டடம் அமைத்து 1972ஆம் ஆண்டு அன்றைய உள்ளூராட்சி அமைச்சராக இருந்த உயர்திரு .சு.பிறேமதாசா அவர்களைக் கொண்டு திறந்து வைத்தார்.

இவர் இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபன முகவராக 1963 காலப்பகுதியில் பணியாற்றினார். 1983ஆம் ஆண்டு தொடக்கம் தமிழர் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தில் வெளிக்கள உத்தியோகத்தராக பணியாற்றினார். இவருடைய சமயம் சார்பான செயற்பாடுகளில் சுதுமலை ஸ்ரீஈஞ்சடி ஞான வைரவர் ஆலயத்தின் பரிபாலன சபையில் தலைவராகவும் சுதுமலை ஸ்ரீபுவனேஸ்வரி அம்பாள் ஆலய பரிபாலன சபையில் உறுப்பினராக கடமைபுரிந்தார். சுதுமலை ஸ்ரீபுவனேஸ்வரி அம்பாள் ஆலய முகாமையாளராகப் பல வருடம் கடமையாற்றியுள்ளார்.

இவர் மானிப்பாய் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் 1974ஆம் ஆண்டு முன்னின்று உழைத்தவர். மேற்படி சங்கத்தின் நெறியாளர் குழு உறுப்பினராகவும் தலைவராகவும் கடமையாற்றியவர். இச்சபையின் தலைவராக இருந்த காலத்திலே இவர் 1998.03.11 இல் இறைவனடி சேர்ந்தார். அன்பர் தமக்கென வாழாது பிறருக்குரியனாக வாழ்ந்து செயற்கரிய செயல்கள் பல செய்து சென்றார்கள்.

*க.ஸ்ரீநந்தகோபன்*

# வரலாற்று நாயகி........

சுந்தரச் சுதுமலை தனிலே வாழ்ந்த பெருந்தகை அமரர் வைத்தியக் கலாநிதி செல்வி நவமலர் கனகரத்தினம் அவர்கள் தம் வாழ்வில் நிகழ்த்திய வரலாற்று நினைவுகளை இங்கு நினைவு கொள்வோம். பெரியாருடைய இறுதி நிகழ்வில் அஞ்சலிக் கூட்டத்திற்கு தலைமை வகித்த ஆறுதிருமுருகன் அவர்கள் தமது உரையில் நாட்டின் அசாதாரண சூழ் நிலையிலும் யாழ் போதனா வைத்திய சாலையினை திறம் பட வழிநடத்திய மக்களுக்கு தம்பணியை செவ்வனே நிகழ்த்திய வரலாற்று நாயகி என்று கூறி புகழ்மாலை சூட்டினார்கள். வரலாற்று நாயகியின் வாழ்க்கை குறிப்புக்களையும் அவர் தம் சமுக சமயப் பணிகளையும் இக்கட்டுரைமூலம் எழுத்து வடிவில் தர முனைகிறேன்.

### *பிறப்பு:*

அருட் வளமும் பொருள் வளமும் நிறைந்த புண்ணிய பூமி காரைநகர். இத்திருவூரில் கருங்காலிப்பதியில் சிறப்போடு வாழ்த்த ஸ்ரீமான் கனகரத்தினம் அவர்களுக்கும் கடவுள் பக்தியிலும் கல்வியிலும் முதன்மை மிக்க சுதுவைத்திருவூரில் உதித்த தங்கம்மா அவர்களுக்கும் இளைய மகளாக 26.11.1935ஆம் ஆண்டு வைத்தியக் கலாநிதி நவமலர் கனகரத்தினம் பிறந்தார். இவர் தனது சகோதரியின் பிள்ளைகளையும் தனது வளர்ப்பு மகனையும் தம்பிள்ளைகள் போல பேணி மகிழ்ந்தார்.

### *கல்வி:*

அம்மையார் அவர்கள் ஆரம்பக் கல்வியை காரைநகர் வியாவில் தமிழ்ப் பாடசாலையிலும், பின் புகழ்பூத்த சுன்னாகம் இராமநாதன் கல்லூரியிலும், பின்னர் உயர் கல்வியை கொழும்பு காசல்வீதி அரச மகளீர் கல்லூரியிலும், யாழ் வேம்படி மகளிர் கல்லூரியிலும் பயின்று இலங்கைப் பல்கலைக்கழக கொழும்பு மருத்துவ பீடத்திற்கு வேம்படி மகளிர் கல்லூரியில் இருந்து அனுமதி பெற்ற முதல் மாணவி என்ற பெருமையைப் பெற்றவர், 1966ம் ஆண்டு மருத்துவ மாணியும் அறுவைச் சிகிச்சைமாணியும் (M.B.B.S) பட்டம் பெற்று வெளியேறினார்.

### *தொழில்:*

அனுராதபுரம் வைத்தியசாலையில் மருத்துவப் பணியை ஆரம்பித்த இவர் 1968 - 1972 வரை வவுனியாவிலும் 1973 - 1974 வரை முல்லைத்தீவு மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரியாக இருந்தார். இங்கு கடமை புரியும் காலத்தில் 1973ம் ஆண்டு திடீரென பரவிய கொலரா நோய்த்தடுப்பப் பணியில் தனது சொந்தப்பாதுகாப்புப்பற்றிய அக்கறை இன்றி மக்களுக்கு சேவை செய்து சுகாதார அறிவூட்டி நோய் தடுப்பு முறைகளையும் மேற்கொண்டு

வெற்றிகண்டார். தொடர்ந்து டோம்போ மாவட்ட வைத்திய அதிகாரியாக 1975 - 1977வரை பணியாற்றிய போது தனது துணிவையும் செயல் திறனையும் வெளிப்படுத்தினார். அவ்விடம் தீவின் மீள் குற்றம் சுமத்தப்பட்ட குற்றவாளிகள் நிறைந்த இடம் எனப் பெயர் பெற்றதால் வைத்தியர்கள் அங்கு போவதற்கு மறுத்த போதும் தற்துணிவுடன் பணியாற்றினார். 1979ம் ஆண்டு இங்கிலாந்து சென்று சேஷயர் மக்லாஸ்ல்ட் வைத்திய சாலையில் அங்கக்கோணல் அறுவைசிகிச்சை மருத்துவ சிரேஸ்ட அலுவலராக (SHO Orthopedics) பணிபுரிந்தார். வெளிநாட்டில் நிரந்தரமான பதவி வாய்ப்பு அளிக்கப்பட்ட போதும் தனது சேவையை தாய் நாட்டிற்கு அர்ப்பணிக்க வேண்டும் என்ற நோக்கில் திரும்பி வந்து பணியாற்றியவர் 1981 - 1986 காலப்பகுதியில் மன்னார் மாவட்ட வைத்திய அதிகாரியாகக் கடமை ஆற்றினார். உலக சுகாதார நிறுவனத்தால் சட்ட மருத்துவத்துறைப் பயிற்சிக்கு அனுப்பப் பட்டு யாழ்ப்பாணம் சட்ட மருத்துவ அதிகாரியாக (JMO) 1986 - 1990 காலப்பகுதியில் நியமிக்கப்பட்டார்

## *யாழ் போதனா வைத்திய சாலைப் பணிப்பாளராக...*

1991 - 2000 ம் ஆண்டு மிக இக்கட்டான போர்ச்சூழலின் போது ஊண் உறக்கமின்றி ஆளுமை மிக்க நிர்வாகியாகப் பணியாற்றியவர். அவர் துணிந்து நின்று செயற்பட்ட பாங்கையே செஞ்சொற் செல்வர் அவர்கள் அஞ்சலி உரையின் போது வரலாற்றுச் சாதனை படைத்த "வரலாற்று நாயகி" என்று புகழ்ந்தமை இங்கு குறிப்பாக சுட்டிக்காட்டுவது பொருத்தமானது. 1995ம் ஆண்டு பாரிய இடப்பெயர்வின்போது கட்டட அழிவுகளுடன் ஆளணி வசதிகளற்று இருந்த வைத்திய சாலையை அதன் பழைய நிலைக்கு கொண்டு வருவதில் வைத்தியகலாநிதி அவர்கள் ஆற்றிய பங்கு மகத்தானது. யாழ் மருத்துவபீட மாணவர்களுக்கு மருத்துவக் கல்வியை முன்னெடுப்பதற்கு முடிந்த வழிகளில் உதவியதுடன் தாதியர் பயிற்சிக் கல்லூரியையும் கவனித்துக்கொண்டார். தெல்லிப்பளை சுகாதார வைத்திய அதியகாரியாக 2000ம் ஆண்டு முதல் இறுதி மூச்சு வரை ஓய்வின்றி மக்களுக்கு அரும்தொண்டாற்றினார்.

## *பேரவை உறுப்பினராக:*

1997 - 2003 காலப்பகுதியில் பல்கலைக் கழக பேரவையின் துடிப்பான அங்கத்தவராக செயற்பட்டார். 1991 - 2003 ல் மருத்துவ பீட சபை அங்கத்தவராகவும் சேவையாற்றினார். மருத்துவபீடத்தில் சட்டமருத்துவக் கற்கை நெறியின் பிரதம ஆலோசகராகவும் பிரதம பரீட்சகராகவும் செயற்பட்டார். யாழ்ப்பாண மருத்துவர் சங்கத்தின் செயலூக்கமுள்ள அங்கத்தவராக விளங்கி பளை புற்றுநோய் வைத்தியப்பிரிவு இன்று இயங்குவதற்கு அயராது முயற்சி செய்து வழிபடுத்தியவர். மருதனார் மடத்தில் இயங்கும் லண்டன் கேன் (CANE) புற்றுநோய் காப்பகத்தின் பணிப்பாளர் சபை தலைவராக உறுப்பினராக இருந்து

அளப்பரும் சேவையாற்றினார்.

**மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகத் தலைவர்:**

மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகத்தின் அங்கத்தவராக இருந்து 2001 - 2002ம் ஆண்டு காலப்பகுதியில் தலைவராகப்பணியாற்றினார். 306B மாவட்டத்தின் சிறந்த தலைவருக்கான பரிசு பெற்றார். இக்கழகம் இவர் தலைவராக இருந்த ஆண்டு சிறந்த முறையில் நிர்வகிக்கப்பட்ட கழகத்திற்கான பரிசையும் பெற்றது.

**அன்னையின் தோழி:**

சமய கலாசாரப்பண்புடைய இவர் சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் பிரியத்திற்குரிய தோழியாக விளங்கியவர்.

**ஆன்மீக வழியில்:**

குலதெய்வமாகிய சுதுமலை புவனேஸ்வரி ஆலய தர்மகர்த்தா சபையில் அங்கத்துவம் ஏற்று சிறப்புடன் ஆலயப்பணியாற்றியவர். இவ் ஆலயத்தில் தனது உற்சவங்களையும் பக்தி பூர்வமாக நிகழ்த்தினார்.

**கௌரவ கலாநிதி:**

தனக்கென்று வாழா அம்மையார் அவர்கள் சமூகத்தேவைகளை முன்னிறுத்திய முதன்மையான மருத்துவ நிர்வாகியாகவும், சட்ட மருத்துவ வல்லுனராகவும், நல்லாசிரியராகவும், பண்பு நலமிக்க ஒருவராகவும் திகழ்ந்த இவருக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் 2005இல் கௌரவ கலாநிதிப் பட்டம் வழங்கி கௌரவித்தது.

**முடிவுரை:**

தனது வாழ்நாள் முழுவதும் மக்களுக்குத் தொண்டாற்றிய வைத்தியக் கலாநிதி நவமலர் கனகரத்தினம் அவர்கள் மற்றவர்களுக்குச் சிரமம் கொடுக்கக் கூடாது என்ற தனது கொள்கையை தன் இறப்பிலும் கடைப்பித்தார். அதனால் தானோ என்னவோ தனக்கு புற்று நோய் என அறிந்தும் இறுதிச் சடங்குகளைக் கூட முன்கூட்டியே திட்டமிட்டுச் செய்யும் வழிகளைத் தெரிவித்திருந்தார். அத்துடன் தனது நினைவைத் தாங்கி வரும் மலர் கூடவழமையான நினைவு மலர்களுக்கு அப்பால் மற்றவர்களுக்குப் பயன்படும் விதத்தில் இருக்க வேண்டும் என்பதை ஞாபகப்படுத்திச் சென்றவர். அவர் கூறியது போன்றே அம்மலர் புற்றுநோய் பற்றிய தகவல்களுடன் வெளிவந்துள்ளது. அம்மலர் மாணவர்களுக்கு, சமூகத்தில் சகலருக்கும் உதவும் வகையில் அமைந்திருப்பது போற்றுதற்குரியது. புனிதமாக வாழ்ந்த அமரர் நலமலர் கனகரத்தினம் அவர்கள் 11.05.2008 அன்று இறைவனடி சேர்ந்தார்கள். அவர் பணி எம்நினைவுகளில் என்றும் நிலைத்திருக்கும்.

**க. ஸ்ரீந்தகோபன்**

# மனிதருள் ஒரு மாணிக்கம்

இவ்வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து மறைந்த பெருந்தகை காலாநிதி கே.எஸ்.நாதன் அவர்கள் அறிவு, அடக்கம், அன்பு பரிவு என்னும் இன்னோரன்ன நற்குணங்களின் ஊற்றாய் எம் மத்தியில் வாழ்ந்து வந்தவர். பல்கலைக்கழக விரிவுரையாளராய் துறைத்தலைவராய் பல நூல்களின் ஆசிரியராய் சிறந்த சமூகத் தலைவராய் அவர் ஆற்றி வந்த சேவைகள் மறக்க முடியாதவை. இவை எல்லாவற்றுக்கும் மேலாக நல்லதொரு மனிதராய் எல்லோருக்கும் முன்மாதிரியாக வாழ்ந்தவர் இவர்.

கலாநிதி கே.எஸ். நாதன் அவர்கள் சுதுமலையில் 1931ம் ஆண்டு அக்டோபர் மாதம் இருபதாம் திகதி பிறந்தார். தனது ஆரம்பக் கல்வியைச் சுதுமலை வடக்குத் தமிழ்க் கலவன் பாடசாலையில் பெற்றுக் கொண்ட இவர் தொடர்ந்து இடைநிலைக் கல்வியைப் புகழ் பூத்த மானிப்பாய் இந்துக் கல்லூரியில் பெற்றார். இவரது மேற்படிப்புக்கள் யாவும் இந்தியாவிலேயே தொடர்ந்தன. தனது உறவினர்களின் வழிகாட்டலின் பேரில் 1956 ஆம் ஆண்டு இந்தியா பயணமாகி இவர் தனது பல்கலைக்கழக முன் நுழைவுப் படிப்புக்களை (Pre -University Courses) காஞ்சிபுரம் பச்சையப்பா கல்லூரியில் பெற்றுக் கொண்டார் தொடர்ந்து அவரது ஆய்வுப் பட்டப்படிப்புக்கள் "பூனா " பல்கலைக்கழகத்திலும் தொடர்ந்தன.

கலாநிதி கே.எஸ். நாதன் அவர்களுக்கு பாடசாலை, கல்லூரி, மற்றும் பல்கலைக்கழக வாழ்க்கையில் பெற்றுக் கொண்ட கல்வியறிவும் அனுபவமும் வழிகாட்டல்களும் அவரது ஆளுமை உருவாக்கத்தில் கனதியான பங்களிப்பை நல்கியிருந்த காலத்தில் அதிபர் வீ. வீரசிங்கம் அவர்களுடன் கிடைத்த தொடர்பு அரசியல் சார்ந்த விடயங்களிலும் பாடத்துறையிலும் அவரது ஆர்வம் வளர உந்துதலைத் தந்தது. அதிபர் வீ. வீரசிங்கம் அவர்கள் அரசியலில் ஈடுபாடு கொண்டவர். பாராளுமன்ற பொதுத் தேர்தலில் வட்டுக் கோட்டைத் தொகுதியில் நின்று வெற்றி பெற்றவர்.

இந்தியக் கல்லூரியிலும் பல்கலைக்கழகத்திலும் கல்வி கற்றுக் கொண்டிருந்த காலங்களில் பல அறிஞர்களை, அரசியல் தலைவர்களை, சமயப் பெரியார்களை, சமூகத் தொண்டர்களைச் சந்திக்கும் வாய்ப்பை இவர் பெற்றார். இதனால் அரசியல்துறை சார்ந்த விடயங்களில் மட்டுமன்றி கலை, இலக்கியம், தமிழ்மொழி, சமயம் சார்ந்த விடயங்களிலும் இவருக்குப் பார்வை அகலிப்பு ஏற்பட்டது. வஜ்ரவேலு முதலியார் கலாநிதி எஸ். ராதாகிருஸ்ணன் விஞ்ஞானி சீ.வீ. இராமன் முதலானோரின் விரிவுரைகளையும் கேட்கின்ற அரிய வாய்ப்பை அவர் பெற்றிருந்தார். 1964இல் மரதவாடா பல்கலைக் கழகத்திற்கு பேராசிரியர் V.N.Sirsikar அவர்கள் இவருக்குக் கலாநிதிப் பட்டத்தில் ஆர்வத்தை ஏற்படுத்தினார். அவரின் வழிகாட்டலின் பின்னணியில் Kashmir Question in the Security Council என்னும் தலைப்பில் கலாநிதிப்பட்ட ஆய்வை மேற்கொண்டார். 1965 தொடக்கம் 1970கள் வரை இவ் ஆய்வு தொடர்ந்தது. பலநூல்நிலையங்கள், பல்கலைக்கழகங்கள் ஆய்வு நிறுவனங்கள் ஆகியவற்றில் நின்றும் தரவுகளைத் திரட்டித்

தனது கலாநிதிப் பட்ட ஆய்வேட்டை இவர் தயாரித்திருந்தார். பூனா பல்கலைக்கழகம் 1970ம் ஆண்டு இவ்வாய்வேட்டுக்கு கலாநிதிப் பட்டம் வழங்கியது.

கலாநிதி கே.எஸ் நாதன் அவர்களின் புலமையும் அறிவாற்றலும் அரசறிவியலைக் கற்பிக்கும் திறனும் இந்தியக் கல்லூரிகளில் கல்விகற்பிக்கும் வாய்ப்பை அவருக்குத் தேடித் தந்தது. இந்தியாவின் ஔரங்கபாட்டிலுள்ள Milind College of Arts இல் 1963ம் ஆண்டிலிருந்து 1970 வரை 7 ஆண்டு காலம் அரசறிவியல் விரிவுரையாளராகப் பணியாற்றி வந்தார் பின்னர் அங்கிருந்து விலகி மகாராஷ்ட்டிர மகாணத்திலுள்ள நாசிக் என்னும் இடத்தில் இயங்கிவந்த M.S.G College இல் விரிவுரையாளராக இணைந்து கொண்டார். (Maharajah Sayajiaro Gaigwad College) அங்கும் அரசறிவியலை பல ஆண்டுகளாக மாணவர்களுக்கு இவர் கற்பித்து வந்தார்.

இந்தியாவில் பணியாற்றிய காலங்களில் வட இந்தியாவிலும் தென்னிந்தியாவிலும் உள்ள பல இடங்களையும் சுற்றிப்பார்க்கும் வாய்ப்பு கலாநிதி கே.எஸ்.நாதன் அவர்களுக்குக் கிடைத்தது. குறிப்பாக இந்துமத வணக்க ஸ்தலங்கள் பலவற்றிற்கு அவர் தலயாத்திரை சென்று வந்தார். பல சமயப் பெரியார்களைச் சந்திக்கும் வாய்ப்பும் அவர்களிடமிருந்து ஆசீர்வாதங்களைப் பெறும் பேறும் அவருக்குக் கிடைத்தன. இந்தியப் பல்கலைக்கழகங்களில் நடைபெறும் முக்கியமான ஆய்வரங்குகளில் பயிற்சிப் பட்டறைகளிலும் கலந்து கொள்ளும் அரிய வாய்ப்பை இவர் பெற்றார். ஆய்வரங்குகளுக்கு வருகைதந்த இந்திய மேல்நாட்டு ஆய்வாளர்களைக் கண்டு பேசிப் பழகித் தன்னைப் புடம்போட்டுக் கொள்ளும் வாய்ப்பும் இவருக்குக் கிட்டியது. இந்திய நாட்டில் பணியாற்றிய காலங்களில் நிறைய ஆய்வுக் கட்டுரைகளை எழுதி பிரபலமான ஆய்வுச் சஞ்சிகைகளில் அவற்றை வெளியிட்டு வந்துள்ளார். Modern Review Economic and Political Weekly எனும் சஞ்சிகைகளில் அவரது அதிகளவான கட்டுரைகள் வெளியாகின.

இந்திய மண்ணில் நீண்ட காலம் வாழ்ந்து தொழில் புரிந்து வந்தவர் ஆதலின் இவருக்கு இந்திய வாக்குரிமையும் கிடைத்திருந்தது. இந்திய மக்களோடு தன்னையும் ஓர் அங்கமாக இணைத்து வாழ்ந்தவர் இவர் மராத்தி மொழியைப் பேசவும், புரியவும் கூடிய திறனை இவர் பெற்றிருந்தார். இங்ஙனம் இந்திய உபகண்டத்தில் பெற்றுக் கொண்ட பரந்த அனுபவம், அறிவு, ஆற்றல், புகழ் என்பவற்றோடு 1980இல் மீண்டும் இலங்கைக்கு கலாநிதி கே.எஸ். நாதன் அவர்கள் வந்தார்கள். கொழும்பில் இவரைச் சந்தித்த துணைவேந்தர் பேராசிரியர் சு.வித்தியானந்தன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராக இணைந்து கொள்ளும்படி கேட்டிருந்தார் அதன் படி அரசறிவியல் விரிவுரையாளராக அதே ஆண்டில் யாழ்ப்பானப் பல்கலைக் கழகத்துடன் தன்னை இணைத்துக் கொண்டார் அப்போது அரசறிவியல் துறை பொருளியல் துறையுடன் இணைந்து செயற்பட்டது. பொருளியல் துறையிலே பொருளியல் அரசறிவியல் சமூகவியல் எனும் மூன்று பாடங்களும் கற்பிக்கப்பட்டு வந்தன கலாநிதி கே.எஸ். நாதன் அவர்கள் விரிவுரையாளராக இணைந்த கொண்ட காலத்தில் பேராசிரியர் என். பாலகிருஷ்ணன் அத்துறையின் தலைவராக இருந்தார் 1991ம் ஆண்டு பொருளியல் துறையின் தலைவராக கலாநிதி கே.எஸ். நாதன் அவர்கள் நியமனம் பெற்றார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றிய காலங்களில் அரசறிவியல் துறையை வளர்த்தெடுப்பதில் கலாநிதி கே.எஸ்.நாதனின் பங்களிப்பு மிகுதியானதாக இருந்தது. குறைந்த வளத்துடன் செயற்பட்ட அத்துறையை முழுமூச்சுடன் வளர்த்தெடுப்பதில் அவர் அதீத அக்கறை காட்டி வந்தார். தமிழ் மொழி மூலமாகக் கல்வி புகட்டப்பட்டு வந்த நிலையில் மாணவர்கள் வசதிகருதி தமிழில் அரசறிவியல் சார்ந்த நூல்கள் எழுதப்பட வேண்டும் என்பதில் இவர் ஆர்வங்காட்டினார். க.பொ.த உயர்தரம் வரை தமிழ் மொழியில் கற்றுவிட்டு வருகின்ற மாணவர்கள் பல்கலைக்கழகத்தில் ஆங்கில மொழிவழி நூல்களைக் கற்பதில் அடையும் இடையூறுகளே அவரை இம்முயற்சியில் ஈடுபடத் தூண்டின. தானே முன் மாதிரியாகத் தமிழில் நூல்களையும் கட்டுரைகளையும் எழுதி வழிகாட்ட இவர் முயன்றமையைக் காண முடிகின்றது.

அரசறிவியலுடன் இணைந்து Public Administration எனும் பாட அலகையும் வளர்த்து வரவேண்டும் என்னும் ஆர்வம் கலாநிதி கே.எஸ். நாதன் அவர்களுக்கு இருந்தது. அவரது கனவு பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை அவர்கள் கலைப்பீடாதிபதியாக இருந்த காலத்தில் நிறைவேறியது Public Administration உயர் மட்ட படிப்புக்களுக்குக் கற்பிக்கப்படும் பாடமாக உருவாக்கப்பட்டது. ஆரம்பத்தில் அது ஒரு Diploma course ஆகவே உருவாக்கப்பட்டிருந்தது.

கலாநிதி கே.எஸ் நாதன் அவர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த பல கருத்தரங்குகள், ஆய்வுப்பட்டறைகள், நினைவுச் சொற்பொழிவுகள் என்பவற்றில் கலந்து கொண்டு தனது பங்களிப்புக்களை வழங்கியுள்ளார். கல்விசார் செயற்பாடுகளைப் போலவே கல்விசாரா செயற்பாடுகளிலும் அவரது பங்களிப்பு அலாதியானதாக இருந்தது. South Asian Studies Seminar தொடர்ச்சியாக நடைபெறுவதில் அவர் அக்கறை காட்டி வந்தார். சுமார் 6 ஆண்டுகள் தொடர்ச்சியாக அக்கருத்தரங்குக் குழுவின் போசகராக அவர் பணியாற்றியிருந்தார். பலகலைக்கழகப் பணியிலிருந்து ஓய்வுபெற்ற பின்னரும் பல்கலைக்கழக மாணவர் நலன் கருதி வருகை விரிவுரையாளராக நீண்ட காலம் பணியாற்றி வந்தார் தனது உடல் உபாதைகள் நோய்கள் என்பவற்றை எல்லாம் புறந்தள்ளி அவரின் கல்விப்பணி தொடர்ந்தது.

மனிதருள் மாணிக்கமாய் அன்பும் பண்பும் அறமும் நிறைந்த வாழ்க்கை வாழ்ந்த கலாநிதி கே.எஸ். நாதன் அவர்கள் 2007 ம் ஆண்டு இவ்வுலக வாழ்வை நீத்தார். அவரின் இழப்பு ஈடு செய்ய முடியாத ஒன்று அவரின் அனுபவம், அறிவு, ஆற்றல் இவையாவும் தனித்துவமும் கனகாத்திரமும் பொருந்தியவை எனினும் அவர் உருவாக்கிய மாணவர் பரம்பரையும் எழுதிய ஆக்கங்களும் அவரது எச்சங்களாய் இன்றும் நிலைத்துள்ளன.

"தக்கார் தகவிலர் என்பது அவரவர் எச்சத்தால் அறியப் படும்"

ச.குமரன்
விரிவுரையாளர்
தமிழ்த்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

# திரு.வை.சுந்தரலிங்கம்

(இளைப்பாறிய பிரதிக்கல்விப் பணிப்பாளர்)

சிறாப்பர் வைத்தியலிங்கம் பொன்னம்மா தம்பதிகளுக்கு மூத்த மகனாக 24.03.1936ஆம் ஆண்டு வை.சுந்தரலிங்கம் சுதுமலையில் பிறந்தார். இவர் ஆரம்பக் கல்வியை மட்/சென் மைகேல் கல்லூரியிலும் உயர் கல்வியை யாழ் இந்துக் கல்லூரியிலும் கற்றார். கொழும்புப் பல்கலைக்கழகம் சென்று பட்டப்படிப்பை முடித்தார். கல்வி டிப்ளோமாவைப் பேராதனைப் பல்கலையிலும் பயின்றார். புலமைப்பரிசில் மூலம் உயர்கல்வியை மிக்சிக்கன் பல்கலைக்கழகம் அமெரிக்காவிலும் கற்றார். இவர் ஒரு விஞ்ஞானப்பட்டதாரியாகி தனது தொழிலை ஆசிரியராக கொ/சென்செபஸ்தியார், உரும்பிராய் இந்துக்கல்லூரி, மட்/கோட்டமுனை மகாவித்தியாலயத்தில் பணியாற்றினார். யா/மானிப்பாய் இந்துக்கல்லூரியில் 1972-1984 காலப்பகுதியில் ஆசிரியராக, உப அதிபராக, அதிபராக பணியாற்றினார். தொடர்ந்து மாத்தளை கல்வித் திணைக்களத்தில் கோட்டக்கல்வி அதிகாரியாகவும் பணிபுரிந்தார். 1985-1958 காலப்பகுதியில் விரிவுரையாளராக செசில்ஸ்தீவுகளில் பணியாற்றினார். 1988-1989 காலப்பகுதியில் உதவிக்கல்விப் பணிப்பாளராக (விஞ்ஞானம்) மாத்தளை, யாழ்ப்பாணம் ஆகிய கல்வி வலயங்களில் பணியாற்றினார். யாழ் கல்வி வலயத்தில் பிரதிக் கல்விப் பணிப்பாளராகவும் கடமையாற்றினார். இவர் 1996.10.06 அன்று இவ்வுலகை விட்டு நீத்தார். இவர் தம் பணியில் மிகவும் நேரக்கட்டுப்பாடு, ஒழுங்கு, நேர்மை மாணவரை மையமாக வைத்துத் தன்னை தன் கற்பித்தலை ஒழுங்குபடுத்தி திறம்பட சேவையாற்றி எம் மக்களுக்கு பெருமதிப்பை தேடித்தந்தார்.

*க. ஸ்ரீநந்தகோபன்*

# *அமரர் LION.Dr.* த. அருமைத்துரை *(RMO)*

சுதுமலை தம்பிஜயாவுக்கும், அழகம்மாவுக்கும் மூத்த மகனாகப் பிறந்தவர். அமரர் த.அருமைத்துரை அவர்கள் 1941.09.17 இல் பிறந்தார். தனது ஆரம்பக் கல்வியை யா/சுதுமலை சிந்மய பாரதி வித்தியாசாலையிலும், உயர் கல்வியை யா/மானிப்பாய் இந்துக் கல்லூரியிலும் கற்றார். 1961ம் ஆண்டு பொலநறுவை மருத்துவக் கல்லூரியில் தனது பட்டப்படிப்பைத் தொடர்ந்தார்.

1963 ஆம் ஆண்டு மாத்தளை அரசினர் வைத்தியசாலையில் உதவி வைத்திய அதிகாரியாக (RMP) நியமனம் பெற்றார். தொடர்ந்து 1965ம் ஆண்டு பதுளை வைத்திய சாலையிலும் 1967ம் ஆண்டு தம்புள்ள அரசினர் வைத்தியசாலையிலும் 1970இல் கண்டி

அரசினர் மத்திய மருந்தகம் மகப்பேற்று நிலையம் என்பவற்றிலும் 1973இல் முகாங்கலை அரசினர் மத்திய மருந்தகத்திலும் 1986ம் ஆண்டு வைத்திய அதிகாரியாக (RMO) சங்கானை அரசினர் வைத்திய சாலையிலும் 1999ம் ஆண்டு நவாலி மத்திய மருந்தக மகப்பேற்று நிலையத்தின் பொறுப்பதிகாரியாகவும் கடமையாற்றினார். அத்தோடு நின்று விடாது தனது வீட்டிலும் மருந்தகம் நடத்தியதுடன் கடும் சுகயீனமுற்ற முதியவர்களுக்கு வீடுகளுக்குச் சென்று தம் பணியை சிறந்த முறையில் ஆற்றி வந்த பெருந்தகை 03.06.2001 ஆம் ஆண்டு இவ்வுலகை விட்டு நீங்கினார்.

இவர் பொதுப் பணிகளிலும் தம்மை ஈடுபடுத்தினர். மானிப்பாய் பரிஷ் லயன்ஸ் கழகத்தின் உதவித் தலைவராகவும் சுதுமலை ஸ்ரீபுவனேஸ்வரி அம்பாள் ஆலயத்தின் தர்மகர்த்தா சபை உறுப்பினராகவும் சுதுமலை ஸ்ரீ முருக மூர்த்தி ஆலய நிர்வாக சபை உறுப்பினராகவும் சுதுமலை இந்துசமய விருத்திச் சங்கத்தின் நீண்டநாள் உறுப்பினராகவும், சுதுமலை கிராம அபிவிருத்திச்சங்க உறுப்பினராகவும், மானிப்பாய் இந்துக்கல்லூரி பழைய மாணவர்சங்க உறுப்பினராகவம் விளங்கிப் பணிகளை செம்மையுறச் செய்தார்.

*க.ஸ்ரீநந்தகோபன்*

# அமரர் .Dr. தம்பு இராசையா(RMO)

தம்பு சின்னாச்சி தம்பதிகளுக்கு நான்காவது புத்தரிரனாகப் பிறந்தவர் த.இராசையா அவர்களாவார். 1921.07.21 அன்று பிறந்தார். அவர் ஆரம்பக் கல்வியை கொக்குவில் ஞானபண்டிதா வித்தியாலயத்தில் கற்றார். தொடர்ந்து சீனியர் கேம்பிறிட்ஸ் பரீட்சையில் சித்தியெய்தி கொழும்பு மருத்துவக் கல்லூரிக்கு தெரிவு செய்யப்பட்டார். மருத்துவக் கல்லூரியில் சித்தியடைந்து 1950 ஆம் ஆண்டு உதவி வைத்திய அதிகாரியாக பட்டம் பெற்றார்.

இவர் கொழும்பு அரசினர் தொற்றுநோய் தடுப்பு வைத்தியசாலையில் உதவி வைத்திய அதிகாரியாகப் பணிபுரிந்தார். தொடர்ந்து பல இடங்களிலும் வைத்திய அதிகாரியாகப் பணி புரிந்தார். 1981ஆம் ஆண்டு அரச சேவையில் இருந்து ஓய்வு பெற்றார். தொடர்ந்து மானிப்பாயில் MEDI AIDS என்ற பெயரில் மருத்துவ நிலையம் ஒன்றை ஆரம்பித்து சிறப்பாக நற்சேவை ஆற்றியதுடன் சுதுமலையில் தனது வீட்டிலும் மருத்துவ சேவையை ஆற்றி சுதுமலைவாழ் மக்களின் மனங்களிலும் இடம் பிடித்துக் கொண்டார்.

*க.ஸ்ரீநந்தகோபன்*

# பணிவினால் பண்புகாட்டிய அறிஞர் கரோல் விஷ்வநாதபிள்ளை

ஈழத்துத் தமிழ் அறிஞர் வரிசையில் நல்லை நகர் நாவலர் பெருமான் காலத்து அறிஞர் விஷ்வநாதபிள்ளை அவர்களை வரலாற்றாளர்கள் குறிப்பிடுவர் சைவமும் தமிழும் தளைத்தோங்கிய வரலாற்று திருவூர்களில் ஒன்று சுதுமலை. இத்திருவூரில் மிகச்சிறந்த தமிழ் அறிஞர்களும் சுதேச வைத்திய நிபுணர்களும் காலத்திற்கு காலம் தோன்றியுள்ளனர். இக்கிராமத்தில் 1820ம் ஆண்டு ஸ்ரீமான் வைரவநாதபிள்ளை அவர்களின் அருந்தவப்புதல்வராக விஷ்வநாதபிள்ளை அவதரித்தார். 1832ம் ஆண்டில் மிக ஆற்றலுடைய மாணவனாக விளங்கிய இவரை உயர்கல்விமானாக்க வேண்டும் என்ற நோக்கில் இவரது தந்தையார் வட்டுக்கோட்டை செமினரி ஆங்கிலக் கல்லூரியில் சேர்ப்பித்தார். மிக ஆற்றலும் ஆராயும் திறனும் மிக்க பிள்ளை அவர்கள் மிஷனரிப் பாடசாலை ஆசிரியர்களின் நம்பிக்கைக்குரிய மாணவனாகத் திகழ்ந்தார். தமிழ் சமஸ்கிருதம் ஆங்கிலம் கணிதம் போன்ற பாடங்களை மிகச் சிறப்பாகக் கற்று வந்த பிள்ளை அவர்கள் ஆங்கிலேயக் கல்விமான்கள் திகைக்கும் அளவிற்குத் தன் ஆற்றலை கிறீஸ்தவப் பணிகளுக்காகப் பயன்படுத்த வேண்டும் என மிஷனரிச்சபை திட்டமிட்டது. சைவப் பாரம்பரியத்தில் பிறந்து வளர்ந்த அவர்களுக்கு ஞானஸ்தானம் வழங்கி கரோல் என்ற கிறீஸ்தவ நாமத்தைச் சூட்டினர். எழுத்துத் துறையில் இயல்பாகவே ஆற்றல் கொண்ட பிள்ளை அவர்களை மிஷனரியின் பிரசார நூல்களை வெளிப்படுத்தும் பணியினில் இணைத்தனர். உதயதாரகை என்ற மிஷனரியின் பத்திரிகையில் பிரதான பங்கு வகிக்கும் அளவிற்கு 20 வயது இளைஞராக விஷ்வநாதப்பிள்ளை பிரபலம் பெற்றார். பிறப்பால் சைவ சமயத்தவராகிய இவர்செமினரி தந்த ஆற்றலை அவர்களின் நலத்திற்கே பயன்படுத்த முனைந்தார். உதயதாரகையில் சைவசமயத்தை எதிர்த்து வாதப்பிரதி வாதங்களைச் செய்ய முயன்றார். 1840ம் ஆண்டில் கண்ணுக்கும் சுய ஒளி உண்டோ இல்லையே என்ற விடையம் பற்றி உதயதாரகையில் வாதப்பிரதிவாதம் பிரசுரமாகியது. யாழ்ப்பாணம் உவெஸ்லியன் கல்லூரி (யாழ் மத்திய கல்லூரி) மாணவர் ஆறுமுகம் என்பவருக்கும் வட்டுக்கோட்டை செமினரி மாணவர் கரோல் விஷ்வநாதபிள்ளை அவர்களுக்கும் மேற்குறித்த விடையம் தொடர்பாக கருத்து மோதல் ஏற்பட்டது கருத்து மோதல்கள் தொடர்ந்தன. உதயதாரகையில் “விம்பம்” எனும் பௌதீகம் தொடர்பான கட்டுரையை மறுத்துரைத்து ஆறுமுகம் அவர்கள் எழுதிய ஆங்கிலக் கட்டுரைகள் பிரசுரம் ஆகின. சொல் அம்புகளால் ஆறுமுகம் என்ற இளைஞனும் கரோல் விஷ்வநாதபிள்ளை என்ற இளைஞனும் மிகப் பிரபல்யம் பெற்றனர். ஆறுமுகம் என்ற இளைஞரே சைவ உலகம் போற்றும் ஆறுமுகநாவலராகப் பின்னர் திகழ்ந்தார். கரோல் விஷ்வநாதபிள்ளை உதயதாரகையைத் தனது படைக்கலமாகப் பயன்படுத்தி நாவலரையும் சைவ நெறிகளையும் தூசித்தார். இதனால் ஆறுமுகநாவலருக்கும் பிள்ளை அவர்களுக்குமிடையே மதப்போர் வெடித்தது. இதன் விளைவே நாவலருக்கு அச்சுக்கூடம் ஒன்றை உருவாக்கி பிரசுரங்களை, நூல்களை வெளியிட வேண்டும் என்ற தாக்கத்தை வலுப்படுத்தியது. 1854ம் ஆண்டு பிள்ளை அவர்களின் கருத்துக்களுக்கும்

கண்டனம் தெரிவிக்கும் வகையில் சைவதூஷண பரிகாரம் என்னும் நூலை நாவலர் வெளியிட்டார். நாவலரின் நூலை மறுத்து "சுப்பிரதீபம்" என்ற நூலினை கரோல் அவர்கள் 1857ம் ஆண்டு வெளியிட்டார். இதனை அறிந்த நாவலர் சுப்பிரதீபத்திற்கு எதிராக "சுப்பிரபோதம்" என்ற நூலை எழுதி வெளியிட்டார். இருவரிடையேயும் ஏற்பட்ட மோதல் சமுதாயத்தில் பல தாக்கங்களை ஏற்படுத்தியது. அமெரிக்கன் மிஷனரி 1857ம் ஆண்டு சென்னை பல்கலைக் கழகத்தில் முதன் முறையாக கலைத்துறையிலே B.A பட்டம் பெறும் தகுதியைப் பிள்ளை அவர்களுக்கு வழங்கினர். ஈழத்தமிழர் வரலாற்றில் முதன்முறையாக B.A பட்டம் பெற்ற பெருமை பிள்ளை அவர்களுக்குச் சாரும். இவரைத் தொடர்ந்து சமகாலத்தில் பிள்ளை அவர்களது மாணவர் சி.வை. தாமோதரம்பிள்ளை அவர்களும் பட்டம் பெற்றனர் என்பது வரலாறு.

168106

பிள்ளை அவர்கள் "விஷகணிதம்" என்ற கணித ஆக்கத்தையும் வானசாஸ்திர நூலான தமிழ்ப் பண்பாட்டுப் பஞ்சாங்கம் என்பதனையும் வெளியிட்டார். நாவலருக்கும் பிள்ளை அவர்களுக்குமிடையில் வாதப்பிரதி வாதங்கள் நிகழ்ந்தாலும் உண்மையை உண்மையாகக் கண்டறியும் நோக்கினை இலட்சியமாக இருவரும் கொண்டிருந்தனர். தமது சமயப் பெருமையினை எடுத்துக் கூறினாலும் தமிழ் வளர்க்கும் பணியை சிரம்மேற் கொண்டிருந்தனர். இதனால் இரு உள்ளங்களுக்கும் அன்பு எனும் பாலத்தினால் இணைக்கப்பட்டனர்.

ஒரு நாள் இருவரது அன்புப் பெருக்கமானது சிதம்பரத்தில் நடந்த விவாத மேடையில் கரைபுரண்டோடியது. இருவரும் நேருக்கு நேர் சந்தித்துக் கொண்டமையால் கரோல் அவர்கள் அன்பு மிகுதியால் உடனே எழுந்து சற்குரு என்று கூறி நாவலரை வணங்கினார். அன்றிலிருந்து இரு வாதம் மிக்க சிங்கங்களும் ஒன்றாயின. சென்னை வாழ்க்கையின் போது அன்னாரது கிறிஸ்தவ மதப்பற்று ஆட்டங்கண்டு தாம் செய்த தூஷணங்களுக்குப் பரிகாரமாகச் சிதம்பரச் சன்னிதானத்தில் பொன்னூசியைக் காய்ச்சி தனது நாவினில் சுட்டுக் கொண்டார். அத்துடன் தாம் எழுதிய சைவசமயக் கண்டன நூலாகிய சுப்பிரதீபம் என்ற நூலை மறுத்து தாமே சுப்பிரதீப மறுப்பு எனும் நூலை வெளியிட்டார். அதனை அவரது உறவினர்கள் பிரசுரப்படுத்தினர்.

அத்துணை அரிய தமிழ் மகன் தமிழ் கணித உலகின் தலைவன் 1880ம் ஆண்டு கார்த்திகை 21ம் திகதி எண்பதாவது வயதில் தன் பாரியாரது ஊரான சங்கானையில் இவ்வுலக வாழ்வை நீத்தார். நாவலரின் பெருமதிப்பிற்குரிய பிள்ளை அவர்களை நாவலர் அவர்கள் புகழும் வேளையில் பிள்ளை அவர்கள் பிறந்தது யாழ்ப்பாணத்திற்குப் பெருமை என்று கூறியுள்ளார்.

எனவே சுதுமலை பெற்றெடுத்த நம் கரோல் விஷ்வநாதபிள்ளை அவர்கள் செமினரித்தாய் ஈன்ற பொழுதிலும் தமிழ்த் தாய் பெரிதுவக்கும் வண்ணம் வாழ்ந்த தவப்புதல்வர் கணித, தமிழ்த்துறை மேதை, மொழி பெயர்ப்பில் துறைபோகிய வித்தகர் யாழ்ப்பாணக் கல்லூரி மாணவர்களின் ஒப்புயர்வற்ற முன்னோடி , அரியதோர் ஆசிரியப் பெருமகன் இவ்வாறாக தமிழ்மகனாகத் திகழ்ந்து தமிழுலகத்தினைக் காத்து வளர்த்த பெருந்தகை இன்று எம்முடன் வாழ்ந்து கொண்டிருக்கிறார். என்றும் வாழ்வார் இவர் தமிழ் உலகம் உள்ளவரை வாழ்வார் என்பதும் உறுதி.

"எவ்வ துறைவது உலகம் உலகத்தோடு
அவ்வ துறைவது அறிவு"

செஞ்சொற்செல்வன்

**ஆறு.திருமுருகன்**

[illegible]

அவர்கள் 1857ம் ஆண்டு வெளியிட்டார்.

[illegible] A.B [illegible]

[illegible]



2008ஆம் ஆண்டு கல்வி கற்கும் மாணவர்களுடன் ஆசிரியர்கள்

# ஆண்டுவிழாவில்
# கௌரவிக்கப்படும்
# பெரியோர்கள்

# ஆண்டு விழாவில் பெரியோர் கௌரவிப்பு



திரு. வி. கேதீஸ்வரன் அவர்களை கௌரவிக்கும்போது



திரு. ச. முத்துலிங்கம் அவர்களை கௌரவிக்கும்போது



திரு. S. தம்பித்துரை அவர்களை கௌரவிக்கும்போது



திரு. க. கந்தசாமி அவர்களை கௌரவிக்கும்போது



# திரு. ச. துரைராஜா

## (ஓய்வு பெற்ற உதவி அரச அதிபர்)

திரு. ச.துரைராஜா உயர் பதவிகளை வகித்து இளைப்பாறிய ஒரு பழுத்த அனுபவசாலியும் திறமைசாலியும் ஆவார். இவர் தற்போது பொதுச் சேவைக்காக முற்றாகத் தன்னை அர்ப்பணித்துச் சேவையாற்றி வருகின்றார். "உதவும் கரங்கள்" என்ற அரச சார்பற்ற நிறுவனத்தை அமைத்து அதன் தலைவராகச் செயற்பட்டு வருகின்றார். இந்த அமைப்பின் மூலம் வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழும் குடும்பங்களுக்கு பல உதவிகள் வழங்கப்படுகின்றது. கடந்த தீபாவளியின் போது 125 ஏழைப்பிள்ளைகளுக்கு உடுபுடவைகள் வழங்கப்பட்டது இங்கு குறிப்பிடத்தக்கது. "மொழி மையத்தை" அமைத்து அதன் மூலம் ஆண்டு 3 முதல் 11 வரையுள்ள பாடசாலை மாணவர்களுக்கு சிங்களம் உள்ளிட்ட பாடங்களையும் இலவசமாகக் கற்கும் ஒழுங்கைச் செய்து அதன் பணிப்பாளராகச் செயற்பட்டு வருகின்றார்கள். 28 வருடங்களாக லயன்ஸ் கழகத்தில் சேர்ந்து மக்களுக்குச் சேவையாற்றி வரும் இவர் அதன் சுனாமி வீடமைப்புத் திட்டத்தின் தலைவராக 25 கோடி ரூபா செலவில் 442 வீடுகளை அமைத்துக் கொடுக்கும் பணியில் ஈடுபட்டுள்ளார். இதுபற்றி சர்வதேச லயன்ஸ் கழகத்தின் சுனாமி வீடமைப்புக் குழுவின் நிதிப் பொறுப்பாளர் இவ்வாறு கூறியுள்ளார். இத் திட்டத்தை நடைமுறைப்படுத்த அயராது உழைத்து வரும் லயன் ச. துரைராஜா அவர்களைப் பாராட்டுகின்றேன். அவரின் ஒத்துழைப்பும் அர்ப்பணிப்பும் இல்லாவிட்டால் இத் திட்டத்தை தொடங்க முடியாமலே போயிருக்கும். நீண்ட காலம் தொழில் ரீதியாக வெளியூரில் தங்கியிருந்த இவர் தற்போது சொந்த ஊரில் தங்கி அங்கு பல அபிவிருத்தித் திட்டங்களை ஆரம்பிக்கவுள்ளார். சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயத்தில் ஆரம்பக் கல்வியைப் பயின்று பின்னர் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் சேர்ந்து படித்தார். வகுப்பு மட்டத்திலும் பாடசாலை மட்டத்திலும் பல பரிசில்களை வென்று சாதனைகளைப் புரிந்தார். அவற்றுள் முதன்மையானது 1954ஆம் ஆண்டு நடைபெற்ற கல்வி பொதுத் தராதரப் பத்திர பரீட்சையில் சுதுமலைக் கிராமம் முழுவதிலும் சித்தியெய்திய ஒரே மாணவன் என்ற பெருமையாகும்.

இவர் தனது இளவயதில் பல சாதனைகளைப் புரிந்தவர் ஆவார். அவற்றுக்கெல்லாம் சிகரமாக அமைந்தது அவர் இலங்கை மட்டத்தில் புரிந்த மூன்று சாதனைகள் ஆகும். கொழும்பு விவேகானந்தர் சபையால் நாடளாவிய ரீதியில் நடாத்தப்பட்ட சமய பாடப்பரீட்சையில் முதலிடம், பட்மின்ரன் விளையாட்டில் அரச சேவைகளைச் சேர்ந்த வீரர்களிடையே சம்பியன் பட்டத்தைத் தட்டிக் கொண்டதும், பின்னர் இலங்கை நிர்வாக சேவைக்கு ஆட்சேர்ப்புப் பரீட்சையில் இலங்கை முழுவதிலும் இருந்து சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் போட்டியிட்ட ஆயிரக்கணக்கானவர்களிடையே முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டதும் இந்தச் சாதனைகள் ஆகும்.

18 வயதில் அரசாங்க எழுதுவினைஞர் சேவையில் சேர்ந்து பின்னர் செனெற்சபை, பிரதிநிதிகள் சபை, பாராளுமன்றம் ஆகிய உயர் சபைகளில் திறம்பட சேவையாற்றிய பெருமை இவரைச் சாரும். தனது கடமையை சேவையாகக் கருதி செயற்பட்ட இவரைப் பொது மக்கள் இலகுவாகச் சந்திக்கும் வசதியை ஏற்படுத்திக் கொடுத்தார். சம்மாந்துறை உதவி அரசாங்க அதிபராக சூறாவளியின் போது இவர் ஆற்றிய சேவையும் சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபராக இருந்த போது 1983 ஜூலை கலவரத்தில் பாதிக்கப்பட்டு இங்கு வந்த அகதிகளுக்கு ஆற்றிய சேவையும் கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபராக இருந்த போது வன்முறைச் சம்பவங்களில் இறந்து போனவர்களின் குடும்பங்களுக்கு நிவாரணங்களை வழங்க ஏற்பாடு செய்தமையும் மேலதிகாரிகள் உட்பட பலராலும் பாராட்டப் பட்டது.

அரச சேவையில் இருந்து இளைப்பாறியதைத் தொடர்ந்து இவர் ஒரு ஆங்கிலப் பத்திரிகையின் ஆசிரியராகப் பணி புரிந்தார். மின்னஞ்சல் மூலமும் இலத்திரன் மூலமும் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் வெளியிடப்பட்ட இந்தப் பத்திரிகையின் ஒரு தலையங்கம் உலகப் புகழ் பெற்றது. உள்நாட்டு ஆங்கிலப் பத்திரிகைகளிலும் வெளிநாட்டுப் பத்திரிகைகளிலும் இதனைப் பிரதி பண்ணித் தமக்குப் புகழ் சேர்த்துக் கொண்டன. இறுதியாக நடைபெற்ற அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் ஜோச் புஷ்ஷும், அல்கோர் என்பவரும் போட்டியிட்டனர். எவரும் அறுதிப் பெரும்பான்மை பெறாத நிலையில் முடிவு ஊசலாடிக் கொண்டிருந்த வேளையில் திரு .துரைராஜா இந்தத் தலையங்கத்தை எழுதியிருந்தார். Will Bush l-e gored or Gore be bushwackad

மும் மொழிகளிலும் பாண்டித்தியம் பெற்ற திரு. துரைராஜா சிங்களப் பத்திரிகைகளில் வெளியாகி தமிழில் தரப்படாத செய்திகளைத் தமிழில் மொழி பெயர்த்து “தமிழில் வராத செய்திகள்” என்ற தலைப்பில் தினக்குரல் பத்திரிகையில் வருடக்கணக்காக நாளாந்தம் எழுதி வந்தார். இது இப்போது “சிங்கள நாளேடுகளில் இருந்து” என்ற தலைப்பில் வேறு ஒருவரால் எழுதப்பட்டு வருகின்றது. இதற்கு மேலதிகமாக “ஒரே செய்தி பல கோணங்களில் இருந்து” என்ற அரசியல் கட்டுரை வாராந்தம் இதே பத்திரிகையில் சிறிது காலம் எழுதப்பட்டு வந்தது.

திரு. துரைராஜா ஒரு எழுத்தாளரும் கூட “ஆநிரைக்கோன்” என்ற புனை பெயரில் அவர் பல சிறு கதைகளையும் கட்டுரைகளையும் “மல்லிகை”, “தினக்குரல்” மற்றும் பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும் வெளியிட்டுள்ளார். இவரின் ஆங்கில மொழிச் சிறு கதைகளும் கட்டுரைகளும் ஆங்கில தினசரிகளிலும் வாரமலர்களிலும் வெளியாகியுள்ளன. இவரின் சிங்கள் மொழிச் சிறுகதை ஒன்றும் வெளியாகியுள்ளது.

*க.ஸ்ரீநந்தகோபன்*

# சுதுமலை நாவலர் பாடசாலையின் ஐந்தாம் ஆண்டு விழாவில் கல்வியியலாளர்களைக் கௌரவிக்கும் நிகழ்வில் நலிவுற்ற மக்களுக்கு உதவும் கரங்களாகத் திகழும் இளைப்பாறிய உதவி அரச அதிபர் உயர் திரு ச. துரைராசா அவர்களுக்குப் பாராட்டி வழங்கிய வாழ்த்துப் பா

ஈஞ்சடியில் வீற்றிருக்கும் வைரவப் பெருமானே
திஞ்சுவைச் சொல்லுடைத் துரைராசா வாஞ்சையொடு
வையத்திற் பல்லாண்டு காலமாய் வாழ்ந்திருக்க
ஐயனே நீ அருள் தருவாய் கனிந்து

இளமை முதலாக மிகு புலமை யாளனாய்
இணையிலாச் சாதனையாகக் கபொத பரீட்சையிலே
வளமான சுதுமலையில் முதன் முதற் சித்திபெற்றாய்
வகையான கல்வியைச் சுதுமலை சிந்மய
வித்தியாலயத்திலும் மானிப்பாய் இந்துக் கல்லூரியிலும் பெற்றுயர்ந்தாய்
வயது பதினெட்டில் எழுது வினைஞனாகி
நலமான உதவியரச அதிபனாய் விளங்கியே
நன்றே மும்மொழித் தேர்வும் பெற்றாய்வாழி

உதவும் கரங்கள் அமைப்பின் தலைவனாய்
உளமாரப் பணியாற்றும் உத்தமனே வாழிநீயே
இதமான சமூகசேவை யாளனாகி யரிமா
இயக்கத்தில் இணைந்து நிற்பாய் வாழிநீயே
விதவிதமான கலைகள் வித்தைகள் சிறந்தோங்க
விருப்புடன் பணியாற்றும் வித்தகனே வாழிநீயே
நித்தமும் பிறர்க்கென முயலும் தக்கோய்
நின்னைப் பாராட்டி வாழ்த்துகின்றோம் வாழிநீயே

பல்லாண்டு காலம் பாரினில் வாழ்ந்திருந்து
பலபணிகள் நானிலத்தோர் போற்றப் புரிந்திடுவாய்
எல்லையில் நெடுமா லெனவுயர் தோற்றத்தாய்
எப்பொழுதும் இன் சொல் உடையாய் வாழிவாழி
அல்லலின்றி அன்புடனே அனைவரும் வாழிவாழி
அணைக்கும் கரமுடனே ஆதரிப்பாய் வாழி வாழி
வல்லவன் பேரருளால் வளமுடனே வாழிவாழி
வம்புமலர் முகத்தாய் வளர்மதியாய் வாழி வாழி

ஆக்கம்:- *பண்டிதர் க. ஈஸ்வரநாதப்பிள்ளை*
சுதுமலை

# கந்தையா- ஈஸ்வரநாதபிள்ளை

ஊர்காவற்றுறை தேர்தல் தொகுதியைச்சேர்ந்த நாராந்தனைக் கிழக்கில் 1934ம் ஆண்டு சித்திரைத் திங்கள் 26ம் நாள் கந்தையா தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் மூத்த மகனாக இவர் பிறந்தார். அக்கிராமத்தில் உள்ள ஸ்ரீகணேசா வித்தியாசாலையில் தன் ஆரம்பக் கல்வியைப் பெற்ற இவர் தமது உயர் கல்வியை ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியில் பெற்றுக் கொண்டார். ஆங்கில மொழி மூலம் சிரேஸ்ட தராதரப்பத்திர பரீட்சையில் சித்தி பெற்றார். இவரது சற்குருவாக விளங்குபவர் இவரது மாமனார் முறையான ஆசிரியர்.ஆ. சபாரத்தினம் பி.ஏ அவர்கள் அவரது வழிகாட்டலுடன் இலக்கியக் கலாநிதி பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை வித்துவான் சுப்பையா பிள்ளை வேந்தனார் ஆகியோரிடம் தமிழ் இலக்கண இலக்கியங்களைக் கற்றுக் கொண்டார். இருந்தமிழே உன்னால் இருந்தேன் வானோர் – விருந்தமிழ்தம் ஆயினும் வேண்டேன். என்ற வாக்கை மனங் கொண்ட இவர் பண்டிதரானார்.

காரைநகர் வட்டுக்கோட்டை ஆகிய இடங்களில் ஆசிரியராகப் பணியாற்றிய இவர் 1993ம் ஆண்டு தம் ஆசிரிய சேவையைப் பூர்த்தி செய்தார். ஆயினும் தமிழ் சமயம் என்பனவற்றில் கொண்ட பற்றின் காரணமாக இப்பாடங்களை தம் வீட்டில் வைத்து மாணவர்களுக்கு கற்பித்து வருகின்றார். மாணவர்களிடம் சிறிய தொகையை மட்டும் பெற்றுக் கொண்டு வசதியற்றவர்களுக்கு இலவசமாகவும்கூட பாடங்களைப் புகட்டி வருகின்றார். கிட்டத்தட்ட 30 வருடங்களாக இச்சேவையை ஆற்றி வருகின்றார்.

சிறு வயது முதல் நாராந்தனை தான்தோன்றி ஸ்ரீ மனோன்மணி அம்பாளிடத்தில் பக்தி கொண்ட இவர் அவளது தொண்டனாக விளங்கினார். சிறந்த பேச்சாளராகவும் கவிஞனாகவும் விளங்கும் இவர் பல ஆலயங்களில் சமய சொற்பொழிவுகளை நிகழ்த்தி மக்களின் பாராட்டுகளைப் பெற்றுள்ளார். எச்சாட்டி வைரவர் ஆலயத்தில் கம்பராமாயண தொடர் சொற்பொழிவை நிகழ்த்தி ஓய்வு பெற்ற பலாலி அசிரிய கலாசாலை அதிபர் திரு. விஸ்வலிங்கம் அவர்களால் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார். அப்பொழுது கவிஞர் சா. வே. பஞ்சாட்சரம் அவர்கள் வாழ்த்துப்பா பாடி “இன்சொற் கொண்டல்” என்ற பட்டத்தை இவருக்குச்சூட்டினார். இவ்வாறே சுதுமலையிலும் ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலயம், சிவன் கோவில், பிள்ளையார்கோவில், ஈஞ்சடி வைரவர் ஆலயம் அகிய இடங்களுக்கு சென்று சமயச் சொற்பொழிவாற்றியுள்ளார். மானிப்பாய் மகளிர் கல்லூரி, மானிப்பாய் இந்துக் கல்லூரி, மெமோறியல் அங்கிலப் பாடசாலை, சுதுமலை சிந்மயபாரதி வித்தியாசாலை, சுதுமலை செல்லத்துரை தமிழ்க்கலவன் பாடசாலை, அனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியசாலை , கொக்குவில் இந்துக் கல்லூரி, யா/பரியோவான் கல்லூரி, பிரான்பற்று கலைமகள் வித்தியாலயம் ஆகிய பாடசாலைகள் இவரை அழைத் சொற் பொழிவுகளைக் கேட்டு மகிழ்ந்திருக்கின்றார்.

எவை நிகழினினும் மிக அமைதியாகவே வாழும் அவர் சுதுமலை செல்லத்துரை இராசம்மா தம்பதி மகள் மனோரஞ்சிதத்தை மணந்தார். இவரது மகன் யா/பல்கலைக் கழகத்தின் தமிழ்த்துறை விரிவுரையாளராக விளங்குகின்றார். இவரும் தந்தை வழியில் சிறந்த பேச்சாளராகவும் ஆய்வாளராகவும், திறனாய்வாளராகவும் விளங்குகின்றார். இவர்பணி தொடர இறைவனைத் பிரார்த்தித்து நிறைவு செய்கின்றேன்.

நன்றி

**க. ஸ்ரீநந்தகோபன்**

**சுதுமலை நாவலர் பாலர் பாடசாலையில் ஐந்தாம் ஆண்டு விழாவில் கல்வியியலாளர்களைக் கௌரவிக்கும் நிகழ்வில் தமிழ்ப் பேரறிஞரும் கவிஞரும் பேச்சாளருமாகிய பண்டிதர் கந்தையா ஈஸ்வரநாதபிள்ளை அவர்களுக்கு பாடி வழங்கிய பாராட்டு நுதலிய உபசார வாழ்த்து**

## வெண்பா

ஈஸ்வர நாதப்பிள்ளை நீந்த தமிழின் நல்லாசான்
பேசு புகழாளன் பேரறிஞன் - மாசிலான்
அன்னான் பெருமையெலா மாரறைவா நிந்நிலத்தே
சொன்னாலு மேட்டிலடங்காது

## அகவல்

நாரந் தனைவாழ் நற்றவத்தோராம்
ஆரும் புகழுங் கந்தை யாதெய்
வானைப் பிள்ளை தாமிரு வோரும்
செய்த வறத்தின் பயனென மூத்த
மைந்த னாக வந்த நல்லோன்
ஈஸ்வர நாத பிள்ளை யாவோன்
கற்பன கற்றுக் கற்றாங் கியல்வோன்
அற்பர் கூட்டமணுகா வுரவோன்
ஊர்கா வற்றுறைப் புனிதவந் தோனியார்
கல்லூரி தன்னிற் கற்ற கண்ணியன்
நல்லான் சபாரத்தினத்தி னோடு
வித்துவ சிரேட்டர் சுப்பையா பிள்ளை
யேந்த னாரையுங் குருவா யேய்ந்தனன்
மூன்று தசாப்தம் முனிவிலா சிரியன்
என்னப் பணிமேற் கொண்ட மேதை
தனியார் கல்வி நிலைய மதனில்
இனியநற் சேவை யிதமுற வாற்றி
மாணவர் கல்விக் கடலைத் தாண்ட
தெப்ப மென்னத் தோள்கொடு வித்தகன்
மனோரஞ் சிதமெனு மாண்புறு நல்லாள்
கரம்பிடித் தேநற் குமார னென்ன
விரிவுரை யாளன் குமரனைப் பெற்றோன்
அன்ன மாட்சி அனையன் தன்னை
இன்னே சென்றவன் விழவில்
இனிதுற வாழ்த்த வருதிர் நல்லீரே

## விருத்தம்

ஈஸ்வர நாத பிள்ளை இனியவே செய்யும் பிள்ளை
பேசுதமிழ் வல்ல பிள்ளை பேசுதற் கினிய மீளி
மாசறக் கற்ற மேலோன் காசறு மாது கொர்ண்கன்
பேசுறு சுற்ற மோடு பார் புகழ் பெற்று வாழி

ஆக்கம்:- **பண்டிதர் க. நாகலிங்கம்**
அளவெட்டி



# திரு. வேலுப்பிள்ளை தம்பாபிள்ளை

(இளைப்பாறிய பிரதி அதிபர் மானிப்பாய் இந்துக் கல்லூரி)

சுதுமலை தம்பாபிள்ளை வேலுப்பிள்ளை சின்னத்தங்கச்சி தம்பதிகளின் புத்திரனாக 25-03-1947 ம் ஆண்டு பிறந்தார். இவர் தனது ஆரம்பக் கல்வியை யா/சுதுமலை சிந்மய் பாரதி வித்தியா சாலையிலும் உயர் கல்வியை யா/மானிப்பாய் இந்துக் கல்லூரியிலும் கற்றார். பட்டப்படிப்பை பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கற்று கலைமாணிப் பட்டத்தைப் பெற்றார். தொடர்ந்து தொழிற்தகமைக் கல்வியை தேசிய கல்வி நிருவகம் மகரகமவில் கற்று கல்வியிலே டிப்ளோமா சான்றிதழ் பெற்றார். அத்துடன் கணித பாடத்தில் பயிற்றப்பட்ட ஆசிரியராகவும் திகழ்ந்தார்.

இவர் தனது 20 வயதினிலே ஆசிரியத் தொழிலில் நுழைந்து (1967ம் ஆண்டு) வரலாற்றுச் சாதனை படைத்தார். தரம் ஐந்தில் நடத்தப்படும் (NPTA)பரீட்சையில் ஓராம் தர சித்தி எய்தியமையிலேயே காணக்கூடியதாக உள்ளது. இவர் 1967ம் ஆண்டு சு/பலாங்கொடை தமிழ் மகாவித்தியாலயத்தில் தனது ஆசிரியத் தொழிலை ஆரம்பித்தார். 1968-1969 காலப் பகுதியில் ஆசிரியப் பயிற்சிக்காக பலாலி ஆசிரியக் கலாசாலையில் விசேட துறை (கணிதம்) பயிற்சி பெற்றார். 1970 காலப்பகுதியில் இரட்ணபுர/சென்லூட்ஸ் கல்லூரியிலும் 1973 - 1993 வரை யா/மானிப்பாய் இந்துக் கல்லூரியிலும் ஆசிரியராகப் பணிபுரிந்தார். 1991 - 1992 காலப்பகுதியில் பகுதித் தலைவராகவும் 1993 -2005 காலப்பகுதியில் பிரதி அதிபராகவும் பணியாற்றினார். 2005 காலப்பகுதியில் கொழும்பு இரட்மலானை இந்துக் கல்லூரி ஆசிரியராகவும் 2006 இல் யாழ் மானிப்பாய் மகளிர் கல்லூரியிலும் பணியாற்றி ஓய்வு பெற்றார்.

இவருடைய கற்பித்தல் நுட்பத்திறனால் கணித பாடம் கசக்கும் என்று எண்ணிப் படித்த மாணவர்களுக்கு கணித பாடம் இனிப்பானது என்ற எண்ணத்தை உணர்த்தியது மட்டுமல்ல அவரிடம் படித்த மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக் கொண்டதில் இருந்து காணமுடிகின்றது. எமது கிராம மக்களுக்கு அவர்களது குடும்பச் சூழல் அறிந்து அவர்களிடம் பணம் பெறாது கற்பித்து அதில் வெற்றியையும் கண்டவர். அவரிடம் கற்ற மாணவர்கள் உயர் பதவிகளில் நிலைத்திருந்து அவர் பெயர் சொல்லி மகிழ்ச்சியடையும் தன்மையையும் நாம் கண்டு பூரிப்படைந்தோம்.

இவர் கணித பாட ஆசிரியர் மட்டுமல்ல இந்துநாகரிகம் , இந்து சமயம் கற்பிப்பதிலும் வல்லவர். அவர் சைவ சமய ஒழுக்கத்தில் சிறந்து விளங்கும் பெருந்தகை இவர் சைவ சமய சொற்பொழிவு செய்வதில் வல்லவர். இலங்கையில் உயர்ந்த நிலையில் பேச்சாற்றல் மிக்க கம்பன் கழக ஜெயராஜ், திருநந்தகுமார், ஆறுதிருமுருகன் போன்றவர்களுடன் பட்டிமன்றம் நிகழ்த்தியவர். சுதுமலை மண்ணிற்கும், மாணவர்களிற்கும் பட்டிமன்ற நிகழ்வை அறிமுகஞ் செய்தார். இவருடைய பல்வேறு ஆற்றல்கள் எல்லோர் மனங்களிலும் சிறப்பாக நிறைந்திருப்பதை அவர்தம் மாணவர் என்ற வகையிலும் ஏனைய மாணவர்கள், ஆசிரியர்கள், பெரியோர் அனைவரது உரையாடல்கள் மூலம் அறிகிறோம். அவர்தம் பணியைப் போற்றிப் பணிவோம்.

நன்றி

க.ஸ்ரீநந்தகோபன்


# 2006ம் ஆண்டு விளையாட்டுவிழா நிகழ்வுகள்



பிரதம விருந்தினர்
திரு.ந. சூரியநாதன் அவர்கள்
மங்கல விளக்கேற்றும் போது



சிறப்பு விருந்தினர்
ிரு. ஈ. குமரன் அவர்களுக்கு
மாலை அணிவித்து
கௌரவிக்கும்போது



கௌரவ விருந்தினர்
திரு. ச. தம்பித்துரை அவர்களுக்கு
மாலை அணிவித்து கௌரவிக்கும்போது

# ஆசிரியப் பெருந்தகை திரு வே. தம்பாபிள்ளை

"அரிது அரிது மானிடராதல் அரிது" என்னும் ஔவையின் வாக்கை " அரிது அரிது நல்லாசிரியராதல் அரிது" என்று மாற்றிப் பாடத் தோன்றுகிறது. நல்ல ஆசிரியர்களைக் காணும் தோறும் திரு. வே. தம்பாப்பிள்ளை போன்றவர்களை இந்த வட்டத்துக்குள் சேர்ப்பது சாலப் பொருத்தமானது. 1970 களில் மானிப்பாய் இந்துக்கல்லூரியில் இடைநிலை வகுப்பில் கல்வி கற்கத் தொடாங்கியவேளை அது, புதிய ஆசிரியர்கள், புதிய உலகம், புதிய சூழல் அது ஒரு இனிமையான காலம்.

சுதுமலை வயல்வெளியைக் கடந்து அங்கு கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் தெய்வங்களை வணங்கி, தாவடி மானிப்பாய் வீதியில் ஏறும்போது அடிக்கடி தென்படும் உருவம் அது. நீண்ட கறுத்த காற்சட்டை, வெள்ளை நிற மேற்சட்டை அணிந்தபடி சைக்கிளில் செல்வார். உயர்ந்த இளைஞன் தம்பாப்பிள்ளை. "அப்பா சுகமா" எனக்கேட்டபடி அவர் சைக்கிள் முன்னேசெல்வார். நாம் பின்னாலே நடந்துசென்று பாடசாலையை அடைவோம்.

பாடசாலைப் பிரார்த்தனை மண்டபத்தில் அவரை மீண்டும் காணலாம். பாடசாலை எங்கும் மாணவர்களை ஒழுங்குமுறைப்படுத்தும் பணியில் அவர் கவனம் செல்லும். பின்னர் வகுப்பறையில் கணிதபாடத் துறையில் தனது வேகத்தைக் காட்டுவார். பாடசாலையில் மாணவர்கள் மத்தியில் அவர் புகழ் பரவிக்கொண்டிருந்த காலம். ஏற்கனவே கணித பாடத்தில் மூத்த ஆசிரியர் ஏழாலை அப்புலிங்க மாஸ்ரர் பெயர் கொடிகட்டிப்பறந்த வேளை அது. இளைஞர் தம்பாப்பிள்ளையும் தன் கைவரிசையை மெல்லக்கற்கும் மாணவர்களிடம் காட்டி பெயர் ஈட்டினார். எட்டாம் ஒன்பதாம் வகுப்புகளில் அவரிடம் பாடம் கற்கும் சந்தர்ப்பம் கிட்டவில்லை. ஆனால் அவர் சனிக்கிழமைகளில் எல்லா மாணவர்களுக்குமாக பொதுவாக நடாத்துகின்ற கணிதபாட வகுப்புகளில் பத்தாம் வகுப்புக் காலத்தில் நாமும் இணைந்து பயின்றோம். மற்றைய மாணவர்கள் அவருடைய கற்பிக்கும் முறையியல்பற்றிக் கூறும்போது அவரிடம் கற்க வேண்டும் எனும் ஈர்ப்பு எம்மிடம் தொற்றிக்கொண்டது. மென்மையான அணுகுமுறை, மெதுவாகச் சொல்லும் சுபாவம், படிமுறைகளை ஒவ்வொன்றாக அடுக்கிச்செல்லும் பாங்கு என அவரின் அணுகுமுறை இன்றும் மனதில் படமாக விரிகிறது. வாகீசர் மண்டபத்திற்குப் பக்கமாக அமைந்துள்ள புதிய மண்டபத்து கரும்பலகையில்அவர் கீறிய வரைபடங்கள் (graphs) இன்றும் கண்முன்னே காட்சியாய்த் தெரிகின்றன.

இதுமட்டுமா! நாடகப் போட்டியாகட்டும் அல்லது விளையாட்டுப்போட்டியாகட்டும் அவரின் ஆட்டத்திற்குக் குறைவில்லை. சுந்தரர் இல்லத்துடன் தன்னை நூறுவீதம் பிணைத்துக்கொள்வார். நாடக ஒத்திகைகளுக்கு மாணவர்களை ஒன்றுதிரட்டி நெறியாளருக்கு பூரண ஒத்துழைப்பு வழங்குவார். அவரது பங்களிப்பு இருந்த காலத்தில் மானிப்பாய் இந்துவில் நாடகப் போட்டிகளில் அவரது சுந்தரர் இல்லமே முன்னிலை வகிக்கும். மாணவர்களுக்கு அவர் கொடுக்கும் ஊக்கம் அளப்பரியது. ஆனந்தமானது. நாம் வாகீசர் இல்லத்திலிருந்து அவரது நடவடிக்கைகளை இரசிப்போம். சுவாரஸ்யத்துக்கு குறைவில்லை.

பாடசாலைகளில் இடம்பெறும் பேச்சுப் போட்டிகள், கலை நிகழ்ச்சிகள் என்பவற்றில் இவரது பங்கும் காத்திரமானது. க.பொ.த. உயர்தரம் படிக்கும் காலத்தில் நவராத்திரி விழாக்களில் தொடர்ந்து மூன்று வருடம் வில்லிசை நிகழ்ச்சிகளை நடாத்த அவர் தந்த ஊக்கம் இன்றும் மனதை நிறைக்கிறது.

பாடசாலை உயர்தர மாணவ மன்றங்களில் பட்டிமன்றங்கள் கோலோச்சிய காலம். அமிர்தன் இராஜகாரியர், தெய்வேந்திரம், மு. திருநாவுக்கரசு, உதயசூரியர், கலைச்செல்வன் போன்ற சிரேஷ்ட மாணவர்கள் பேச்சுத்துறையில் கலக்கிய காலம். பின்னாளில் அவர்களெல்லாம் சட்டத்தரணிகளாகவும், அரசியல் ஆய்வாளர்களாகவும், சமூகத் தொண்டர்களாகவும் பிரகாசிக்க அந்தப் பாடசாலை பட்டி மண்டபங்கள் கைகொடுத்தன என்றால் மிகையாகாது. இப்படியானதொரு பேச்சுக் கலைச் சூழல் எம்மையும் அக்கலையில் புடம்போட்டு பாடசாலை மேடைகளிலும் வெளியே பல கோயில் விழாக்களிலும் எம்மை அழைத்துச்சென்று பேச வைத்துப் பெருமதிப்புப் பெற்றுத் தந்தார். அவரது பேச்சில் விரியும் புலமை எம்மை வியக்க வைக்கும்.

பாடசாலையைவிட்டு வெளியேறி நாங்கள் பல்வேறு துறைகளில் ஈடுபட்ட வேளையிலும், ஊர்க்கோயில் திருவிழாக்களிலும் பல்வேறு சமூக நிகழ்ச்சிகளிலும் காணும்போது எம்மைப் பரவசப்படுத்தும் ஒரு பெரும் ஆசிரியராக அவர் விளங்கினார். கோயில்களில் புராணபடனம் செய்துவந்த எமது தந்தையாரைச் சுட்டிக்காட்டி அவரது பணியின் சிறப்பை எமக்குப் புரியவைப்பார். தாமும் கோயில்களில் தேவாரப் பாடல்களைப் பாடுவதில் முன்னுதாரணமாகத் திகழ்ந்து வருகின்றார்.

மானிப்பாய் இந்துக் கல்லூரியில் உப அதிபராக உயர்ந்து, தமது பல்வேறு ஆளுமைகளைப் பயன்படுத்தி, மாணவ உலகத்தை ஆதரித்து வந்தார். அந்தவேளையிலும் பழைய மாணவர்களை பாடசாலை நிகழ்வுகளுக்கு அழைத்து கௌரவப்படுத்தும் ஒரு பெரும் சான்றோனாகப் புகழ்பூத்தார். என்னையும் அப்படியொரு வருடாந்த நாடகப் போட்டி நிகழ்விலே அழைத்துக் கௌரவப்படுத்தியமை பசுமையான நினைவாகும்.

இன்று தனது கல்விப் பணியிலிருந்து ஓய்வுபெற்றபோதும், சமூகம் சார்ந்த பல்வேறு நிகழ்வுகளுடன் தம்மைப் பிணித்து தான்சார்ந்த சமூகத்தின் உயர்விலே அக்கறைகாட்டிப் பணிபுரிந்து கொண்டிருப்பதை எம்மக்களால் எப்படி மறக்கமுடியும். தொடரட்டும் அவர்தம்பணி, பாடுவோம் அவர்தம் புகழ்.

“வாழ்க நீ எம்மான் என்றும் மகிழ்வுடனே - எம்
வாழ்க்கை இன்னும் எம்மண்ணில் நிலைத்திட - உம்
சேவைதனைப் புரிந்தீர், புரிகின்றீர்
மேதை நீர் காட்டிய பாதை உயர்வானது
நிறைவுடனே வாழுங்கள்
என்றும்போல் இறை சிந்தையுடன்”

**கந்தையா ஸ்ரீகணேசன்**
தலைவர், ஆங்கில மொழி கற்பித்தல் அலகு
வவுனியா வளாகம்,
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், வவுனியா.

## சுதுமலை நாவலர் பாலர் பாடசாலையின் ஐந்தாம் ஆண்டு விழாவில் கல்வியியலாளர்களைக் கௌரவிக்கும் நிகழ்வில் உயர்திரு வேலுப்பிள்ளை தம்பாபிள்ளை அவர்களுக்கு வாசித்து வழங்கிய மங்கல வாழ்த்து

கணக்காசிரியனாம் தம்பா பிள்ளையெனும்
பிணக்கிலாப் பெருமகனார் மீதொரு – மணக்கும்
வாழ்ததுப் பாடவே விநாயகப் பெருமானே
வாழ்த்தி யருள்வாய் கனிந்து

வேலுப்பிள்ளை சின்னத் தங்கச்சி தம்பதியர்
சாலப்பரிந்து பெற்ற சீலமுடைத் தனயன்
நூலறிவைச் சுதுமலை சிந்மய பாரதியிலும்
ஆழமாய் மானி யிந்துக் கல்லூரியிலும் பெற்றான் வாழி
பேராதனை இளங்கலை மானியாகிக் கல்வியியல்
பேரறிவைப் பெற்றுயர்ந்து ஆசிரியனாய் மற்றும்
பேரெழு பகுதித் தலைவனாய் பிரகாசித்து
சீரான பிரதியதி பனாய் விளங் கியோனே வாழி

அந்தண்மை யடக்கம் அணியெனக் கொண்ட
சிந்தை யழகினான் செந்தமிழ்ப் பற்றுடையான்
செந்நெறி திறம்பாச் சீராளன் சேவையினால்
முந்தியிருக் கச்சபையில் வைத்தான் வாழியவே

பயனை எதிர்பராப் பண்புடைய பற்றாளன்
நயமான பேச்சால் நானிலத்தை வெல்வான்
சுயமாக மாணவரைச் சிந்திக்கத் தூண்டிய
செயற் றிறம்மிக் குடையாய் வாழி நீயே

பாராட்டி வாழ்த்துகிறோம் பண்பாளன் வாழியவே
சீராட்டியப் பணிபுரிந்த சீராளன் வாழியவே
காராளர் நலம் போலக் காலமெலாம் வாழியவே
தார்மார்பன் மருதடியான் தண்ணருளால் வாழியவே

ஆக்கம்:- ***பண்டிதர் க. ஈஸ்வரநாதப்பிள்ளை***
சுதுமலை

# தியாகரராசா அருட்பிரகாசபிள்ளை

(இளைப்பாறிய அதிபர் – மணிவிழா நாயகன்)

சைவமும் தமிழும் செழித்தோங்கும் இணுவில் பதியில் தியாகராசா தம்பதிகளுக்கு மகனாக தி. அருட்பிரகாசபிள்ளை 29.05.1948 அன்று பிறந்தார். ஆரம்பக் கல்வியை இணுவில் சைவப்பிரகாச வித்தியாசாலையிலும் (இணுவில் இந்துக்கல்லூரி) உயர் கல்வியை யா/கொக்குவில் இந்துக் கல்லூரியிலும் கற்றார். இவர் சிறந்த முறையில் கற்று 01.05.1974 இல் ஆசிரிய சேவையில் இணைந்தார்.

ஆசிரிய சேவையில் தன்னை முழுமையாக அர்ப்பணித்து செயற்படும் அவர் சுதுமலை சிந்மய பாரதி வித்தியாசாலையில் தனது திறன்களை வெளிப்படுத்தியமை கண்முன் சாட்சியங்களாக அமைகின்றது. தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் மாணவர்களை சித்தியெய்த வைப்பதில் மட்டுமல்ல மாவட்ட, மாகாண நிலைகளில் அதி கூடிய புள்ளிகள் எடுக்கவேண்டும் என்ற தனது வெளிப்பாட்டை எடுத்துக்காட்டியவர். 1991 இல் செல்வி பா.கௌதமி 193 புள்ளிகளைப் பெற்று மாவட்ட ரீதியில் இரண்டாம் இடத்தைப் பெற்றமை, இரண்டாயிரமாம் ஆண்டில் செல்வன் ச. செந்தில்குமரன் 178 புள்ளிகளைப் பெற்று மாவட்டத்தில் முதலாம் நிலை பெற்றமை குறிப்பிடத்தக்க சான்றுகளாக அமைகின்றன.

சுதுமலை சிந்மய பாரதி வித்தியாசாலையில் பிரதி அதிபராக கடமையாற்றிய காலத்தில் த்ரம் 1 ,2 இற்கான செயற்பாட்டறையை அமைப்பதில் முக்கிய பங்காற்றினார். இதற்கு திருவாளர் இந்திரன் காராளசிங்கம் அவர்களிடம் நிதி பெற்று அதனை முன்னின்று கட்டி முடித்தவர். அது மட்டுமல்ல அதிபர் செ. குபேரநாதன் அவர்களின் தலைமையில் திரு.இ. பேரின்பநாயகம் பா.அ.ச.உறுப்பினர்கள் இணைந்து ஊர் பிரமுகர்களிடம் நிதி பெற்று பாடசாலைக்கான விளையாட்டு மைதானக் காணி வாங்கியமையும் இங்கு குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

திரு.தி. அருட்பிரகாசபிள்ளை அவர்கள் அதிபராக யா/மானிப்பாய் சோதிவேம்படி வித்தியாசாலையில் கடமையேற்றதில் இருந்து அங்கு புதிய கட்டிட நிர்மானம் மலசலகூட நிர்மானம் அகியவற்றுடன் தமிழ்த்தின போட்டியில் 1998 இல் பாவோதல் போட்டியில் செல்வி சி.துளசி மாகாண மட்டத்தில் 3ஆம் இடம் பெறச் செய்தமையும் 2006ஆம் ஆண்டு பாவோதலில் செல்வி அ.அமிர்தவர்சினி மாகாணத்தில் இரண்டாம் இடம் பெற்றமையும் குறிப்பிடத்தக்க அம்சங்களாக அமைகின்றன. அத்துடன் இவரது காலத்தில் அதிகூடிய மாணவாகள் புலமைப்பரிசீல் பரீட்சையில் சித்தியெய்தியமையும் மாணவர்கள் மத்தியில் அதிக மதிப்பை பெற வழியாக அமைந்தன.

தனது கல்விப் பணியில் தனது சைவ சமயம் மேலானது என்பதையும் மாணவர்களை பரீட்சை நடைபெறும் தினத்திற்கு முதல் தினம் ஆலயத்திற்கு அழைத்துச் சென்று வழிபாடு செய்து வருவதையும் எல்லோரும் கண்டு பூரித்து நிற்பர். ஓர் ஆசிரியர் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதற்கு ஓர் உதாரணமாக திகழ்ந்தவர் அதிபர் தி.அருட்பிரகாசபிள்ளை ஆவார். தனது வீட்டிலும் மாணவர்களை அழைத்து கற்பித்தலை மேலும் வளம்படுத்தியவர். அவர்பணி எம்சமூகத்திற்கு பன்னெடும் காலம் நீடித்திருக்க இறைவனை வேண்டுகின்றோம்.

*க. ஸ்ரீநந்தகோபன்*

## சுதுமலை நாவலர் பாலர் பாடசாலையின் ஐந்தாம் ஆண்டு விழாவில் கல்வியாளர்களைக் கௌரவிக்கும் நிகழ்வில் உயர் திரு தியாகராசா அருட்பிரகாசபிள்ளை அவர்களுக்கு வாசித்து வழங்கிய பாராட்டு நுதலிய மங்கல வாழ்த்து

### வெண்பா

கண்ணன் இராதையொடு காட்டுமில் வாழ்வென்ன
அண்ண லருட்பிர காசபிள்ளாய் – பண்ணுறு
சொல்லின் பெருஞ் செல்வி ரேனுகா தேவியொடு
பல்புகழ் பெற்று வாழ் வாய்.

### அகவல்

இனுவிற் பதியுறு தியாக ராசன்
அணியுறச் செய்த அருந்தவப் பேறாய்
வந்தே யுதித் தவரப்பிர காசன்
அருட்பிர காச பிள்ளை யாவோன்
அருங்குண வதியா மிரேனுகா தேவி
தன்னொடு மியைந்த தகவுறு மில்லற

நல்லறப் பயனாய் நலம் பெறு மக்கள்
மூவரைப் பெற்று முகிழ்த்த சீர்த்தியன்
பாவலர் போற்று மெழிலுறு தியாகி
மணிவிழாக் காணும் பணி கொளா சிரியன்
இனுவிற் பதிசெய் இருந்தவப் பயனாய்
அணி கொள் காட்சிய னாரும் புகழும்
அறங்கரை நாவின னருங்குணக் குன்று
சோதி வேம்படி வித்தியா சாலை
அதிப னாகி யரிய கட்டிடம்
தெரிய அமைத்த செங்கரச் செம்மல்
புலமைப் பரிசிலில் புதுமை படைத்தோன்
அன்னோன் தன்னுறு மணிவிழாக் காண
இன்னே செல்குது மெழுதிமன் நீயும்
மணிவிழா மண்டபம் மதித்துநா மடைந்தே
யன்னவன் புகழெலா மறியச் சாற்றி
வாழி வாழி யென்றே யேத்தி
வருகுதும் பாண நீயும் வருதிமன்
பல்புகழ் பாட்டி னிசைத்தே
பாடி யரற்கே யெழுமதி நீயே

## *விருத்தம்*

அருட்பிர காச பிள்ளை யணிகிள ரறுபதாண்டு
பெருமைசேர் வாழ்க்கைத் தேளரப் பெட்புறச் செலுத்தி னானால்
அருமைசே ரன்னான் சீர்த்தி யாருக்கு மியைவ தன்றால்
உரிமையோ டன்னான் தன்னை நாவடுக்கொள்ள வாழ்ந்தாய்

**ஆக்கம்:- பண்டிதர் க. நாகலிங்கம்**
**அளவெட்டி**

ARCHIVES

UNIVERSITY OF JAFFNA ★ LIBRARY ★

University of Jaffna
168106
Library

168106

வாழ்த்துவோர்

ஈஸ்வரபாமினி நகைப் பூங்கா
(மானிப்பாய்)

ஸ்ரீ சுபா வெதுப்பகம்
சுதுமலை